# முதலியார் அவர்களும்
# அவர்களுடைய நூல்களும்

திரு ப. ஸ்ரீ ஆச்சார்யா

அவர்களுக்கு

ஆக்கியோன் அன்புடன் அளித்தது

— தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்
திருநெல்வேலி

# பொருளடக்கம்.


1. முன்னுரை.
2 முகவுரை.
3. முதலியாரவர்கள் வாழ்க்கை வரலாறு.

i முதலியாரவர்களை நான் அறிந்த முறை 1
ii எண்பதாண்டான இளைஞர் 5
iii தந்தையாரும் குடும்பப் பெருமையும் 8
iv இளமையும் கல்வியும் 11
v குடும்ப வாழ்க்கை 15
vi விவசாயக்கல்வியும் கால்நடை மருத்துவமும் 18
vii உத்தியோகப் பண்பு 22
viii தமிழ்மொழிப் பயிற்சி 30
ix தமிழ்ப்பணி 55

4. முதலியாரவர்கள் நூல்கள்.

i முன்னுரை 65
ii அகலிகை வெண்பா 69
iii கோம்பி விருத்தம் 85
iv நெல்லைச் சிலேடை வெண்பா 94
v கம்பராமாயண சாரம் 99
vi சருவசன செபம் 111
vii சுவர்க்க நீக்கம் — முதற்காண்டம் 114
viii கல்வி விளக்கம் 126
ix இராமாயண உள்ளுறை பொருளும் தென்னிந்திய சாதி வரலாறும் 132
x தனிக்கவித் திரட்டு 135
xi மற்றைய நூல்கள் 140

# முன்னுரை.

வெள்ளகால், திருவாளர் ராவ் சாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்களைத் தெரியாத தமிழர் ஒருவரும் இல்லை. என்னைத் தெரியாத தமிழ் மக்களோ பலருண்டு. ஆகவே முதலியாரவர்களின் வாழ்க்கையையும், அவர்கள் தமிழன்னைக்குச் செய்துள்ள சேவையையும் எடுத்துக் கூறுவதை வியாசமாகக் கொண்டு என்னைத் தமிழ் அன்பர் பலருக்கு அறிமுகப்படுத்திக்கொள்ளவே நான் இந்த நூலை எழுதினேன் என்றால் அது மிகையாகாது. இது தவிர, வயதாலும், அறிவாலும், ஆற்றலாலும் இத்தகைய பணி ஒன்றியற்றுவதற்கு எனக்குப் போதிய தகுதியில்லை என்பதை அறிவேன்.

தமிழ் நாட்டிலே பிள்ளையவர்கள் என்றால் திரிசிரபுரம் மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களும், ஐயரவர்கள் என்றால், உத்தமதானபுரம் டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர் அவர்களும் முதலியாரவர்கள் என்றால், வெள்ளகால் சுப்பிரமணிய முதலியாரவர்களும் குறிப்பிடப்படுவார்கள் என்பது எல்லோரும் அறிந்தது. நமது முதலியாரவர்கள் சற்றுக்குறைய எண்பத்து நான்கு ஆண்டு முற்றுப்பெற்றவர்கள். அவர்களுடைய எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவைத் திருநெல்வேலியிலே 1....8....37ல் சிறப்பாகத் தமிழ் அன்பர்கள் கொண்டாடியபோது, சில நண்பர்கள் நான் அவர்கள்பால் கொண்டுள்ள பெருமதிப்பையும், நான் அவர்களோடு நெருங்கிப் பழகும் பான்மையையும் அறிந்து, முதலியாரவர்கள் வாழ்க்கையையும் அவர்கள் இயற்றிய நூல்களையும்பற்றி ஒரு சிறு புத்தகம் வெளியிடும்படி

வேண்டினார்கள். உயர்ந்த கவித்துவசக்தியும், சிறந்த உரை வன்மையும் உடைய முதலியாரவாகள் பிறப்பினால் மட்டு மன்றித் தகுதியாலும் **முதலியார்** (முதன்மையானவர்) ஆவார்கள். இத்தகைய தமிழ் அன்பர் பணியாக இந்நூலை நான் இயற்றும்படி என்னை ஆளாக்கிய இனிய கருணையை நினைந்து எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

பெரும் பகுதி 1938-ம் வருஷத்திலேயே முடிந்து விட்ட இந்நூல் சில எதிர்பாராத சம்பவங்களால் வெளிவர இவ்வளவு கால தாமதமாகிவிட்டது. என் வேண்டுகோளுக்கிணங்கி இந்நூலுக்கு முகவுரை எழுதி உதவிய மதுரைத் தமிழ்ச் சங்கம் உதவித் தலைவர் திரு T. C. **ஸ்ரீனிவாச அய்யங்கார், B A, B.L, M.L.C.,** அவர்களுக்கு நான் என்றும் கடப்பாடுடையேன். இந்நூல் எழுதுவ திலும் அச்சுப் பிரதிகளைப் பார்த்துத் திருத்தம் முதலியன செய்வதிலும் எனக்கு உதவி புரிந்த நண்பர் **திரு வித்வான் P. K. அருணாசலக் கவுண்டர்** (ம. தி. தா. இந்து கலா சாலைத் தலைமைத் தமிழாசிரியர், சென்னைச் சர்வ கலாசாலை அங்கடமிக் கவுன்சில் அங்கத்தினர்) அவர்களுக்கு என் நன்றி உரியதாகும்.

பிழைகளை அறிஞர் பொறுத்தருள வேண்டுகிறேன்,

**திருநெல்வேலி**
**21....5....41**

**தோ. மு. பாஸ்கரன்.**

# Preface.

I am asked by Mr. Bhaskara Thondaman B. A., to write a prefatory note to his biography of Sri Rao Sahib V. P. Subramania Mudaliar. Nothing can be more delightful to a lover of Tamil than to be associated, in however remote or humble way, with a work dealing with the life and the literary labours of an erudite scholar and fine poet.

Mr. Subramania Mudaliar, the subject of this biography, is a unique personality. He represents the combined culture of the east and the west. Though he is advanced in years – now over 80 years – he is active and energetic for his age and is in full possession of all his faculties. His is a well disciplined life of high ideals, methodical habits and systematic work. His literary labours have been continuous. He is a patriot and is devoted to Tamil and its literature. He has sound views on the fundamental points of improving and enriching Tamil to enable it to function as an adequate medium for the diffusion of knowledge on all subjects – science, art, etc., and of conserving and popularising the existing literature. The aim is to develop Tamil appropriately in all needed useful directions so that it may keep abrest of the times and be a self sufficient language. In this aspect, his evidence before the Tamil University subcommittee impressed me.

His wide outlook and his intense desire to enrich Tamil with works on modern subjects and by translation and adaptation in Tamil of works in English, coupled with his efforts to bring out popular exposi-

tions of some Tamil masterpieces, are noteworthy features in his literary career. His metrical rendering in Tamil, of Milton's Paradise Lost – first book, his prose translation of the first part of Spencer on Education, his "Kombi Vritham" which is a metrical adaptation in Tamil of "The Chameleon" by Merrick and his books in Tamil on modern veterinary subjects are bold and successful ventures. They illustrate his efforts in enlarging and enriching Tamil. His *"Kambaramayana-inkavithiratu"* கம்பராமாயண இன்கவித்திரட்டு, a collection of choice stanzas with notes expounding the beauties of Kambar's great work, illustrates his efforts in the direction of popularising the best in our existing literature. There is yet another side to his literary endeavours His original works like நெல்லைச் சிலேடை வெண்பா, அகலிகை வெண்பா exhibit his powers as a poet. For details and a critical estimate of these and other works, I invite the close attention of the reader to the several chapters in the body of the work.

Coming of a higher middle class family with literary traditions and connected with a family having historic traditions, and educated in English and Tamil on sound lines, Mr. Subramania Mudaliar is a fine specimen of a highly cultured gentleman devoting his time and talents to the service of his mother tongue.

Mr. Bhaskara Thondaman has rendered a public service in writing his biography.

Madura,
18—5—41.

*T. C. SRINIVASAN.*

# முதலியாரவர்கள்
# வாழ்க்கை வரலாறு



தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், பீ. ஏ.

திருநெல்வேலி

# திரு. முதலியார் அவர்களை நானறிந்த முறை

1922-ம் வருஷம் நான் திருநெல்வேலி இந்து கலாசாலையில் படித்துக்கொண்டிருந்த பொழுது, அங்கே, மேலகரம் சுப்பிரமணியக் கவிராயர் அவர்கள் தமிழாசிரியராக இருந்தார்கள். அவர்கள் தம்மிடம் படிக்கும் மாணவர்களுக்குத் தாய்மொழியில் அளவிலா ஆர்வத்தை உண்டு பண்ணும் திறமை வாய்ந்தவர்கள். எங்களுக்குப் பாடமாயிருந்த நளவெண்பாவின் சில பகுதிகளை அவர்கள் பாடஞ் சொல்லப் புகுமுன், முன்னுரையாகச் சில சொல்லி வெண்பாவின் இயல்புகளையும் விவரித்து, "வெண்பாவிற் புகழேந்தி என்று எல்லோரும் சொல்லுவர், அதை அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாது. யாப்பிலக்கணத்திற்கு விரோதமில்லாமல் செய்யும் செய்யுட்களெல்லாம் கவிகளாகா. அவற்றுள் வஞ்சி, கலி முதலியன இயற்றுவதற்கு எளியனவாயிருந்தும் கற்பதற்கெளிதா யிருக்கும் வெண்பாமட்டும் புலவர்க்குப் புலி என்று சொல்லப்படுவானேன். கூர்ந்து நோக்கும்போது சுவையுள்ள வெண்பாவைச் சொல்லுவதற்குக் காரிகையறிவு மட்டும் காணாது. வேறு பல அறிவுகளும் வேண்டி யிருக்கின்றன," என்று சொல்லிப் பின்னும்

அருமையான வெண்பாக்களுக்கு மேற்கோளாக அகலிகை வெண்பா * என்னும் நூலிலிருந்து சில கவிகளைச் சொல்லிக் காட்டி அந்த வெண்பாக்களின் நயங்களை எடுத்துரைத்தார்கள். அந்த நூலிலே ஆசிரியர் பாத்திரங்களை நடத்தும் முறையினையும், அந்த நூலின் கவிகளில் சந்த ஒற்றுமையுடைய எதுகைகளும், கருத்துடை அடைகளும் விரவி வருதலையும், வெற்றளை, விளச்சீர், வகையுளி இவை விரவாமையினையும் அவர்கள் உணர்த்த உணர்ந்து மகிழ்ந்தோம். இவ்வளவு மேன்மையாகவும் அருமையாகவும் பாடியவர் புகழேந்திக்கு முன்னவரோ பின்னவரோ அன்றிச் சங்கப் புலவருள் ஒருவர்தாமோ என்று மாணவர்களாகிய நாங்கள் சந்தேகப்பட்டபொழுது, ஆசிரியர், "வெகு காலத்துக்கு முந்தியவர் அல்லர், அவர் நம்மிடையே இன்று இருக்கின்றார். அகலிகை வெண்பா ஆசிரியர், வெள்ளகால், ராவ் சாஹிப் சுப்பிரமணிய முதலியார் அவர்களே" என்று சொன்னார்கள். அதைக் கேட்டுத் தமிழ் மாணவர்களாகிய நாங்கள் 'நம்மிடையே, ஒரு நல்ல தமிழ் கவி இன்று இருக்கின்றார். பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் தழைத்து வந்த

---

* அகலிகை வெண்பாவைப்பற்றி மதிப்புரை கூறுமிடத்தே மகாமகோபாத்தியாய டாக்டர் சாமிநாதையர் அவர்கள் ரஸபுஞ்சம் என்றும், அண்ணுமலைப் பல்கலைக் கழகத்து ஆராய்ச்சியாசிரியர் மகா வித்துவான் ரா. ராகவ அய்யங்கார் அவர்கள் பெரு விருந்து என்றும், ஷெ கழகத்து தமிழ்ப் பேராசிரியர் பண்டிதமணி கதிரேசச் செட்டியார் அவர்கள் அரும் பெரும் இரத்தினம் என்றும் திருவையாறு ராஜா காலேஜ் தமிழ்ப் பேராசிரியர் கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளையவர்கள் அருந்தமிழமிழ்தம் என்றும் விதந்தெடுத்துரைத்திருக்கின்றார்கள். (அகலிகை வெண்பா மூன்றாம் பதிப்பு அனுபந்தம் பார்க்க)

தமிழ்க் கவிப் பூஞ்சோலை, ஆதரவின்மையாகிய அருங்கோடை யால் மாய்ந்துபோய்விடவில்லை; பொதியமலைச் சாரலிலே அது பூத்திருப்பதும், முத்தமிழ் மாமுனி அகத்தியன் அருளேயாகும்' என்று நினைந்து நினைந்து மகிழ்வெய்தி னேம். இப்படித்தான் திரு. முதலியார் அவர்களைப்பற்றி நான் முதன் முதல் அறிந்தது.

இவ்வாறு முதலியார் அவர்களை இற்றைக்குப் பதினறு ஆண்டுகளுக்கு முன்னமே அறிவேன் என்றாலும், சென்ற ஐந்தாறு ஆண்டுகளாகத்தான் அவர்களுடன் நெருங்கிப் பழகும் சமயங்கள் எனக்கு வாய்த்தன.

திருநெல்வேலியிலும், வெள்ளகாலிலும் அவர் களோடு பலமுறை பலபடியாக உடனிருந்து நெடுநேரம் உரை யாடியிருக்கின்றேன். ஆழ்ந்து அகன்ற அறிவாலும், அனுபவ முதிர்ச்சியாலும், நூற்பயிற்சியோடு கூடிய மதி நுட்பத் தாலும் மேம்பட்டு விளங்கும் இப் புலவர் பெருமானின் சல்லாபங்கள் எப்போதும் எனக்கு ஆனந்தத்தையே உண் டாக்கின. நம் முதலியார் அவர்களுடன் உரையாடியவர்கள் எல்லாம், "கல்லாத கலையும் வேதக் கடலுமே என்னும் காட்சி சொல்லாலே தோன்றிற்றம்ம! யார் கொல் இச் சொல்லின் செல்வன்?" என்று கம்பன அனுமனைப்பற்றிச் சொல்லு கிறபடி அதிசய பரவசரா யிருப்பர்.

முதலியார் அவர்கள் என்னிடம் நேரில், தாம் தமிழ் பயின்ற விதம், ஆங்கிலக் கல்வியால் தமிழ்ப் படிப்புக் குறைந்த நிலை, தாம் நூலியற்றியது, உரை கண்டது, கால்நடை மருத்துவத்தில் தேர்ச்சியுற்றது முதலியவற்றைக் கூறியபோ தெல்லாம் - அது நம்போல்வார்க்கு எவ்வளவோ உதவியா யிருக்குமே என்று எண்ணியதுண்டு. அரிய செய்தொழுகும்

பெரியாரது அடிச்சுவடுகள், காலமென்னும் மணல் வெளியில் அழிந்து போவதன் முன்னம் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்படுமானால், பின் வருவோர் எவரேனும் நெறி தவறித் தத்தளிக்கும்போது, அந்தச் சுவடுகளைக்கண்டு அவற்றின்வழி நடந்து நன்மை பெறலாகும் என்ற உண்மை உலகறிந்ததேயன்றோ.

முதலியார் அவர்கள் வாழ்க்கை, திகைப்பும் நகைப்பும் விளைக்கும் சம்பவங்கள் நிறைந்ததன்று. ஆயினும், அது உத்தியோகத்தில் உயர்வடைய விரும்புவார்க்கும், ஆங்கிலத்தோடு தமிழையும் பயின்று தேர்ந்த பட்டதாரிகளுக்கும் நல்லதொரு முன் மாதிரியாய் அமைந்துள்ளது. செல்வம் அதிகாரம் முதலியவை சேர்ந்த உடனே பிறமொழிகளை உயர்த்திப் பேசித் தமிழை இகழ்ந்து கூறும் இயல்பினர்க்கு அது ஒரு 'படிப்பினை'*யாகவும் விளங்குகின்றது. இத்தகைய பயன் கருதியும் ஆசைபற்றியும் எழுதப்படும் இந்நூலைத் தமிழ் உலகு ஏற்றுக்கொள்ளும் என்பது என் நம்பிக்கை.

---

* அறிவு புகட்டி

# எண்பதாண்டான இளைஞர்

"வருஷங்களை ஒன்று இரண்டு என்றெண்ணி வயதைக் கணக்கிட்டு மனிதனைக் கிழவரென்றும் குமரரென்றும் மதிப்பது சரியான முறையன்று. எண்பது வயதான இளைஞருமுண்டு. இருபது வயதான கிழவருமுண்டு. வெள்ளகால் திருவாளர் ராவ்சாஹிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்களை நெருங்கிப் பழகினவர் ஒருவரேனும் அவர்களை ஒரு சுடு சுடு கிழவர் என்று கூறத் துணியார் என்பது உறுதி. அவர்களது சுறுசுறுப்பைக்கண்ட எந்த இளைஞனும் அவர்கள் முன் நாணித் தலை குனிந்து விடுவான்" என்று கவிஞர் தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் எழுதுகிறார்கள். இது முழுவதும் உண்மை. நமது முதலியார் அவர்களுடைய ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அறிந்தனுபவித்தவர்கள் அநேகர் இருப்பார்கள். ஒரு நல்ல தமிழ்ப் பாடலையோ அல்லது கம்பன் கவியிலுள்ள ஒரு அருமையான கருத்தையோ பிறருக்கு விளங்கும்படி எடுத்துக்காட்ட முனைந்து விட்டால், அவர்கள் உற்சாகத்தை அளவிட்டுரைக்க முடியாது. நான் பல சந்தர்ப்பங்களில் அவர்கள் இவ்வாறு உற்சாகத்தோடு பேசுவதைக்கேட்டு அனுபவித்திருக்கிறேன். ஒரேயொரு திருஷ்டாந்தம் மட்டும் தருவதற்கு விரும்புகிறேன். கம்பராமாயணத்தில் சுந்தரகாண்டத்தில் - அநுமன் கொடுத்த ஆழியினைப் பெற்ற சீதை அடைந்த நிலையை

விளக்க, கம்பர்

"வாங்கினள் முலைக்குவையில் வைத்தனள் சிரத்தால்
தாங்கினள் மலர்க்கண் மிசை யொற்றினள் தடந்தோள்
வீங்கினள் மெலிந்தனள் குளிர்ந்தனள் வெதும்போ(டு)
ஏங்கினள் உயிர்த்தனள் இதென்ன தெனலாமே"

என்று கூறுகின்றார். "இதென்ன தெனலாமே" என்ற தொடர் மொழியை எனக்கு விளக்க விரும்பிய முதலியார் அவர்கள் சொன்னதாவது — "இமயமலையின் உயர்ந்த சிகரத்தைக் காண ஒரு கூட்டம் புறப்படுகிறது. அவர்களுக்கு வழிகாட்டியாய், அதற்கு முன் பலதடவை அச்சிகரத்தைக் கண்ட ஒருவன் அவர்களை அழைத்துச்செல்கிறான். எல்லோரும் செல்லக் கூடிய ஓர் எல்லைவரை அக்கூட்டத்தை அவ்வழி காட்டி கூட்டிச் சென்று விடுகிறான். அந்த எல்லைக்கு அப்புறம் அக்கூட்டத்தார் அவனைத் தொடர்ந்து போவதற்கு இயலவில்லை. ஆனால் வழிகாட்டியாக வந்தவனோ, ஒரே தாவில் தாவிச் சிகரத்தின் உச்சிக்குப் போய் விடுகிறான். அவன் சென்ற முறையையும், அவன் நின்ற நிலையையும் பார்த்து, சிகரத்தின் உச்சியைக் காணச் சென்ற கூட்டத்தார் ஆச்சரியப்பட்டுக்கொண்டு நிற்கிறார்கள். இது போலத்தான் கம்பர், வாசகர்களாகிய நம்மையெல்லாம் தம்முடன் இழுத்துச் செல்கிறார். சீதை அடைந்த இன்பத்தை நம்மால் எவ்வளவு தூரம் அனுபவிக்க முடியுமோ அவ்வளவையும் அனுபவிக்கும்படி செய்துவிட்டு, நாம் அவரைப் பின் தொடர முடியாதிருக்கிற அந்நிலையில், சீதை அடைந்த அத்தியந்த இன்பத்தைத் தாம் உணர்ந்து அது உணரக் கூடியதே யன்றி, உரைக்கக்கூடியதன் றென்பதைப் புலப்படுத்த 'இதென்ன தெனலாமே' என்று கூறித் தமது கவிதா சக்தியின் சிகரத்திற்குத் தாவிவிடுகிறார். 'நாமெல்லாம் அவரது கவித்திறனைக் கண்டு அப்படியே ஆச்சரியப்

படுவதைத்தவிர வேறு செயலில்லாதவர்களாயிருக்கிறோம்". இவ்வாறு அவர்கள் என்னிடம் சில நாட்களுக்கு முன் வெள்ளகாலில் ஓடும் ஓர் வாய்க்காலின் கரையருகே கூறினார்கள். இவ்வாறு அவர்கள் கூறும்போது அவர்கள் தம்மை இமயமலை பேறுகின்ற வழிகாட்டியாகவே நினைந்து கொண்டு உற்சாகப்படுத்துவதைக்கண்டேன். கம்பர் கவியை அறிந்து அனுபவித்து அவர்கள் ஆர்வத்தோடு பேசும்போது இருபது வயது நிறைந்த ஓர் இளைஞன் எவ்வாறு ஊக்கமும் உற்சாகமும் கொண்டு பேசுவானோ அவ்வாறு பேசுவார்கள்.

அவர்கள் இந்த வயதிலும் தினம் மூன்று மைலுக்குக் குறையாமல் நடப்பதுடன், வீட்டிலும் தேகப்பயிற்சி முறைகளைக் கையாளுகிறார்கள். சுருக்கமாகச் சொன்னால் எந்தக் காரியம் செய்வதிலும் சுறுசுறுப்பும் ஊக்கமும் காட்டுவதைக்கண்ட நண்பர்கள் அனைவரும் அவர்கள் எண்பதாண்டாகியும் இளைஞரே என்று எண்ணுதிரார்.

# தந்தையாரும் குடும்பப் பெருமையும்

முதலியார் என்ற பட்டம், முதன்மையாளர் என்ற பொருளில்தான், தொண்டைமண்டலத்திலிருந்த வேளாளரில், அரசர் படைத் துணையாயிருந்து, வெகுமதி பெற்றவர்களுக்கு முதன் முதல் சூட்டப்பட்டிருக்கிறது. முதலியார் என்ற பட்டம் பெற்றவர்களில் ஒரு சிலர் அரசர்களுக்கு முடி சூட்டுபவராய் அமைந்திருக்கிறார்கள். அவர்களையே கொண்டை கட்டிகள் என்று கூறுவதுண்டு. இக் கொண்டை கட்டி முதலிமார் மரபில் நமது முதலியாரவர்கள் தோன்றினார்கள். இவர்கள் குடும்பத்தார் பூர்வீகமாய்க் குடியிருந்த ஊர் மதுரை ஜில்லாவில் உள்ள சோழவந்தான் கிராமம். இவருடைய பாட்டனார் சுப்பிரமணிய முதலியாரவர்கள் காலத்தில்தான் இவர்கள் குடும்பத்தார் தென்காசித் தாலுகாவிலுள்ள வெள்ளகாலில் வந்து குடியேறியது. அப்போது திருநெல்வேலியில் நவாப் அரசர்களுக்குப் பிரதிநிதியா யிருந்து திருநெல்வேலிச் சீமையை ஆண்ட 'தளவாய் முதலியார்' குடும்பம் பிரபலமா யிருந்தது. நான் மேலே சொல்லிய சுப்பிரமணிய முதலியாரவர்கள் மேடை தளவாய் திருமலையப்ப முதலியாரின் சகோதரி மகள் உலகண்ணியை மணமுடித்துக் கொண்டார்கள். தமது மகளை மேடை தளவாய் திருமலையப்ப முதலியார் குமாரர் மேடை தளவாய் குமாரசாமி முதலியார் அவர்களுக்கு மணமுடித்துக் கொடுத்தார்கள். தம் குமாரர் பழனியப்ப முதலியாருக்குத்

தளவாய் குடும்பத்தினருக்கு முன் சீமை அதிகாரம் செய்த ஆழ்வார்குறிச்சி ஆறை அழகப்ப முதலியார் குடும்பத்தில் பெண் கொண்டார்கள். இவ்வாறு தளவாய் முதலியார், ஆறை அழகப்ப முதலியார் குடும்பங்களில் இவர்கள் சம்பந்தம் செய்த காரணத்தினால் இவர்கள் குடும்பம் மிகவும் பிரபலம் அடைந்தது *

பழனியப்ப முதலியார் திருநெல்வேலி ஜில்லாவில் நல்ல செல்வாக்குப் படைத்திருந்தவர். இவர்கள் காலத்தில் தளவாய் எஸ்டேட் கோர்ட் வார்டு (Court of Wards) மானேஜ்மெண்டில் இருந்தது. இவர்களே Court of Wards மானேஜராக இருந்து தளவாய் எஸ்டேட்டைப் பல வகைகளிலும் விருத்திக்குக் கொண்டுவந்தார்கள். இவர்களுடைய தளரா ஊக்கமும் உலகியலறிவும் பலரும் போற்றத்தக்கன வாய் அமைந்திருந்தன. இவர்கள் மக்கள்பால் நல்ல கருணை

---

*இச் சரித நாயகரியற்றிய சுவர்க்க நீக்க மொழிபெயர்ப்புச் சிறப்புப்பாயிரக கவிகள் :—

வழுதி நாட்டிடை வளவநா டுற்றதே மானும்
பழுதில் சோழன்வந் தானெனும் பழம்பதி யோன்; அச்
செழிய நாட்டுறு சேரநா டெனத்திகழ் தென்னம்
பொழில் வளம்பொலி வெள்ளசாற் புதுக்குடி புகுந்தோன்

வழுதி — செழியன் — பாண்டியன்
வளவன் — சோழன்

எமாது தொண்டைமண் டலகுலத் தினர்இரண் டிராமர்
சமானர், ஆறைமே வழகப்ப தராபதி தளவாய்
குமார சாமிவேந் (து) இவர்கள்கோக் குடிச்சம்பந் தங்கொள்
பெமான், மெய்ச் சுப்பிர மணியன் என் பெயரன், என் பெயரன்

என் பெயரன் = என்னும் பேரையுடையவன்,
= என்னுடைய பாட்டன்

வாய்ந்தவர்கள். அன்னதானம் செய்வதில் அதிகப் பிரீதி யுடையவர்கள். இவர்கள் தாம் வசித்து வந்த வெள்ளகால் கிராமத்திற்குச் செய்த நன்மைகள் பல. கிராமத்தில் ஜீரணமா யிருந்த குற்றால விநாயகர் கோவிலைக் கல்லால் மண்டபம் முதலானவை கட்டிப் புதுப்பித்தார்கள். கோவிலுக்கு வலப்பக்கத்தில் ஊர்ச் சனங்களுக்குப் பிரயோசனப்படக் கூடிய ஒரு பெரிய கிணற்றை வெட்டினார்கள். பாலூர்ச் சத்திரத்திலிருந்து கீழப்பாலூர், வெள்ளகால் வழியாக வீரகேரளம்புதூர் வரை ஆறு மைல் நீளத்திற்கு (Road) நல்ல சாலை அமைத்தார்கள். இந்தச் சாலையை நிருமிக்கும போது இவர்களுக்குத் தாசில்தார் சரவண முத்துப் பிள்ளை யவர்கள் உதவி பெரிதும் இருந்தது. இவர்கள் கிராமத்தில் உள்ள ஆட்களையெல்லாம் திரட்டி, வெயிலையும மழையையும பொருட்படுத்தாது கூலியாட்களை வேலை வாங்கிச் சில நாட் களுக்குள் சாலை வேலையை முடித்துக் காட்டினார்கள் என்று இன்று பலரும் பேசக் கேட்டிருக்கிறேன் *

* ஆசிரியரின் தந்தையார் பழனியப்ப முதலியார் அவர்களைப் பற்றிய தகவல்களை யெல்லாம், வெள்ளகால் கிராமத்தில், காலஞ் சென்ற பண்ணை விசாரிப்பு, வெ. ப. குற்றாலலிங்க முதலியாரவர்கள் சொல்லக் கேட்டேன். அவர்கள் நமது முதலியார் அவர்களின் வீட்டுக் காரியஸ்தராக 48 ஆண்டுகள் உழைத்தவர்கள். சில மாதங் களுக்கு முன் அவர்கள் காலமானது விசனிக்கத்தக்கது.

# இளமையும் கல்வியும்

பழனியப்ப முதலியார் அவர்களின் முதன் மகனும் இச்சரித நாயகரான முதலியார் அவர்கள் 1857-ம் ஆண்டு ஆகஸ்டுமீ 14உ ஆழ்வார்குறிச்சியில் பிறந்தார்கள். 5வயது முடியும்வரை வெள்ளகாலில் வளர்ந்தார்கள். அதன் பின் படிப்பை உத்தேசித்து திருநெல்வேலிக்கு வந்து, தம் அத்தை கணவர் மேடை தளவாய் குமாரசாமி முதலியார் அவர்கள் அரண்மனையில் வாழ்ந்து, தெற்குப் புதுத் தெருவில் திண்ணைப் பள்ளிக்கூடம் வைத்திருந்த கணபதி வாத்தியார் அவர்களிடம் படித்தார்கள். இக் கணபதி வாத்தியார் பொருநை* நாட்டுப் புலவர்களில் ஒருவரான அழகிய சேர்க்கநாத பிள்ளையின் சிறிய தந்தையார். நல்ல தமிழ் விற்பத்தி யுடையவர். அவர் கையெழுத்து மிகவும் அழகாய் இருக்குமென்றும் தம்முடைய பாட ஏடுகளை அவர் கையாலேயே எழுதிக் கொடுக்கும் வழக்க முடையவர் என்றும் முதலியார் அவர்கள் பெருமையோடு சொல்லிக்கொள்வார்கள். அவர் வள்ளுவர் குறளிலுள்ள கடவுள் வாழ்த்துப் பாடல்களைத் தாம் சொல்லி எல்லா மாணவர்களும் சேர்ந்து சொல்லும்படி செய்தபின்பே தினசரிப் பாடங்களை ஆரம்பிக்கும் வழக்கமுடையவர். இவரிடம் நமது முதலியாரவர்கள் நான்கு வருடங்கள் படித்தார்கள். பின்னர் திருநெல்வேலி அரசடிப் பாலத் தெருவிலிருந்த மிஷன் பள்ளிக்கூடத்தில் தமிழும் ஆங்கிலமும் சேர்ந்து படிக்க ஆரம்பித்தார்கள். இடை யிடையே தனித்தனி உபாத்தியாயர்களிடமும் படித்ததுண்டு. இவ்வாறு திண்ணைப்

---

* தாமிரபர்ணி.

பள்ளிக்கூடப் படிப்பை முடித்தபின் திருநெல்வேலியில் பிரபல ஆங்கிலப் பாடசாலையாயுள்ள இந்து கலாசாலையில் சேர்ந்து படித்தார்கள். அப்போது பள்ளிக்கூடத்தின் தலைமை அதிகாரியாக இருந்தவர் சாமி அய்யர் அவர்கள். காலஞ் சென்ற மாசி மந்திரி கனம் சர். T. N. சிவஞானம் பிள்ளையவர்கள், Kt. அப்பொழுது இவர்கள் பள்ளித் தோழர். 1876 டிசம்பரில் நடந்த மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறியபின், இவர்கள் மேல் படிப்புப் படித்துச் சர்க்கார் உத்தியோகம் ஒன்றுக்கும் போகவேண்டாம் என்று நினைத்து வீட்டிலேயே இருந்துவிட்டார்கள். இவர்களுடன் படித்துத் தேறிய, திரு. சிவஞானம் பிள்ளையவர்கள் சென்னை சென்று கிறிஸ்தவ கலாசாலையில் சேர்ந்து படிக்கும்போது இவர்களும் படிக்க வருவார்கள், வருவார்கள் என்று எதிர் பார்த்து வராமையால் இவர்களுக்குக் கடிதம் எழுதினார்கள். அதற்குப் பதிலாக தாம் மேல் படிப்புப் படித்துச் சர்க்கார் உத்தியோகம் முதலியன அடைவதற்கு விருப்பமில்லை என்பதைத் தெரிவிக்க, அவர்கள் அவ்வாறு சொல்லுதல் தகாது, இன்னும் நான்கு வருடங்கள் படித்துப் பட்டம் பெற்ற பின்னும் சர்க்கார் உத்தியோகங்களுக்குப் போகாமல் வீட்டிலிருந்து கொண்டே விவசாய வேலையைக் கவனிக்க லாமே என்று வற்புறுத்த, அவர்கள் விருப்பத்திற்கிணங்கிப் பள்ளிக்கூடம் திறந்து ஆறு மாதங்களுக்கப்பால் சென்னைக் கிறிஸ்தவ கலாசாலையில் இண்டர்மீடியட் வகுப்பில் சேர்ந்து படித்தார்கள். இளமையிலேயே நல்ல தமிழ் விற்பத்தி யுடையவர்கள்* ஆனதனால், இவர்கள் வகுப்பு மாணவர்க ளல்லாமல், பி. ஏ. முதலிய பெரிய வகுப்பு மாணவர்களும்

* இவர்களது தமிழ்ப் பயிற்சியைப்பற்றிப் பின்பு விரிவாக எழுதியிருக்கிறேன்.

இவர்களிடம் தமிழ்ப் பாடம் படிக்க விரும்பி வருவார்கள். அவர்களுக்காகத்தான் கம்பராமாயணத்தைத் தாம் முதன் முதல் படிக்க நேர்ந்தது என்று இவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். கிறிஸ்தவ கலாசாலையில் இவர்களுக்கு ஆசிரியர்களாக இருந்தவர்கள், டாக்டர் மில்லர், கூப்பர், அலெக்சாண்டர், பேட்டர்சன், மாக்டோனல்ட் முதலிய துரை மக்களும், சுப்பராமய்யர், ரெங்கைய செட்டி, சின்னச் சாமிப் பிள்ளை, ரெங்கசாமி ராஜா முதலியவர்களுமாவர். நல்ல புத்திக் கூர்மையுடையவர்களாயினும் சர்வகலா சங்கத்தார் விரும்புகிறபடி குருட்டுப் பாடம் படிக்க முடியாமையால் 1878-ல் நடந்த பரீக்ஷையிலும் பின்பு அதற்கடுத்த வருஷத்திலும் ஆங்கிலப் பாடத்தில் இவர்கள் தேறவில்லை. இதனால் 'நமக்கும் இச் சர்வகலாசாலைப் படிப்பு முறைக்கும் வெகு தூரம்' என நினைந்து பள்ளிப் படிப்பை நிறுத்திவிட்டு ஊர் திரும்பிவிட்டார்கள்.

கிறிஸ்தவ கலாசாலையில் உயர்தரக் கல்வி பயின்றதுடன் நல்ல பழக்க வழக்கங்களையும் தெரிந்து பழகலானேனென்று இவர்களே பலதடவை சொல்லியிருக்கிறார்கள். தன்னலப் பற்றற்ற தொண்டு செய்யும் டாக்டர் மில்லர் போன்ற கிறிஸ்தவப் பாதிரிகளுக்கிடையே வளரவும் படிக்கவும் நேர்ந்தது ஒரு பெரும் பாக்கியமென்று கருதுகின்றார்கள். அப்போது இவர்கள் தம் வாழ்க்கையில் தாம் அனுஷ்டிக்க வேண்டியவைகளைத் தீர்மானம்* செய்து அதன்படியே

---

*அவர்கள் அப்பொழுது செய்துகொண்ட சபதத்தை அவர்கள் சொல்லியபடியே கீழே தருகிறேன்:

1. To be sexually pure
2. Not to touch liquor
3. To avoid flesh (not on principle but on convention)
4. Not to be behind anybody in understanding English
5. Not to be behind anybody in writing as well as understanding Tamil

இத்தனை வருஷ காலமும் ஒழுகிவந்திருக்கிறார்கள். கிறிஸ்தவ கலாசாலைதான் தம் எதிர்கால வாழ்க்கைக்கு ஒரு கலங்கரை விளக்கமாய் நின்று உதவியிருக்கிறது என்பதை இன்றும் ஆர்வத்துடன் அவர்கள் சொல்லுகிறார்கள். கிறிஸ்தவப் பாதிரிகளான மில்லர் போன்றவர்களின் பெருமையே பெருமை.

# குடும்ப வாழ்க்கை

முதலியாரவர்கள் குடும்ப வாழ்கையில் குறிப்பிடத் தக்க விசேட நிகழ்ச்சிகள் ஒன்றும் இல்லை. இவர்களுடைய முதன் மண நிகழ்ச்சியைப் பற்றி ஒரு சில சொற்கள் சொல்லுவது மிகையாகாது. ஆழ்வார்குறிச்சி மேலப்பிள்ளை ஆறை ராமலிங்க முதலியாரவர்கள் குமாரத்தி வேலம்மாள் அண்ணியை இவர்களுக்கு இவர்களுடைய தாய்தநதையர் மணம பேசினார்கள். சில காரணத்தால் அப்பொழுது இவர்களுக்குக் கல்யாணத்தில் மனம் செல்லவில்லை. ஆதலால் அப்பெண்ணை மணந்துகொள்ள இவர்கள் இசையவில்லை. கடைசியாக இவர்களுடைய தந்தையார் அப்பெண்ணை இவர்களுடைய தம்பி திருமலையப்ப முதலியார் அவர்களுக்கு மணம் பேசி முகூர்த்தம் நிச்சயித்து குடும்பத்துடன் ஆழ்வார்குறிச்சிக்குச் சென்றார்கள். "நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்" என்றபடி கல்யாணத்திற்கு இரண்டு தினங்களுக்கு முன் கல்யாண மாப்பிள்ளையான திருமலையப்ப முதலியார் அவர்களுக்குச் சுரநோய் கண்டது. அந்தச் சமயத்தில் இவர்கள் தந்தையார் இவர்களை மறுபடியும் அணுகி, இருக்கிற நிலையை விரித்துரைத்து, இவர்களே அப் பெண்ணை மணந்துகொள்ளவேண்டு மென்று வற்புறுத்தினார்கள். அந்த நிலையில் தாம் ஒன்றும் மறுத்துச் சொல்ல இயலாதவர்களாய்த் தந்தையின் விருப்பப்படியே, தன் தம்பிக்கு என்று பேசிய பெண்ணை இவர்கள் மணக்க

இசைந்தார்கள். குறித்த முகூர்த்தத்தில் இவர்களுக்குத் திருமணம் நடந்தேறியது. மனதிற் கொவ்வாத மணமென்று இவர்கள் முதலிற் கருதினார்கள் என்றாலும பின்னர் அந்த அம்மையாரது அரிய குண நலங்களைக்கண்டு தாம முதலிற் கருதியது பெரும் பிழையென்று உணர்ந்தார்கள். அந்த அம்மையாரிடம தன் கணவன் குறிப்பறிந்து நடக்கும திறன் பூரணமாய் அமைந்திருந்தது. இவர்களோடு உத்தியோக முறையில் பல ஊர்களுக்குச் சென்றபோது உடனிருந்து, இவர்களுடைய உடல் நலைதியவற்றைக் கண்ணும் கருத்து மாய்க் கவனித்து வந்தார்கள். அந்த அம்மையார் இப்படிப் பத்தொன்பது வருடகாலம இவர்களோடு வாழ்ந்து 1899-ம் வருடம் இறைவன் திருவடி நீழல் அடைந்தார்கள். இவ்வம்மையார் இரண்டு பெண் குழந்தைகளைப் பெற்றார்கள். முதல் மகளான உலகம்மாள் அண்ணியை, ஆழ்வார்குறிச்சி மேலப்பண்ணை ஆறை M. P. M. ராமலிங்க முதலியார் அவர்களுக்கு மண முடித்துக்கொடுத்தார்கள். இரண்டாவது மகள், கல்யாணி அண்ணியைத் திருநெல்வேலி மேடை தளவாய் ரெங்கநாத முதலியார் அவர்கள் மணந்து கொண்டனர். முதன் மனைவி இறந்த மறுவருடம் இவர்கள், தென்காசித் தாலுகாக் கிடாரக் குளம் இராமசாமி முதலியாரவர்கள் புதல்வியும் திருநெல்வேலிப் பூசைமடம் தீத்தாரப்ப முதலியார் அபிமான புத்திரியுமான வடிவம்மாள் அண்ணியை மணமுடித்து, அவர்களோடு இன்றுவரை இல்லறம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இவ்வம்மையார் இரண்டு பெண்களையும் இரண்டு ஆண்மக்களையும் பெற்றார் கள். ஆனால் இளமையிலேயே ஒரு பெண் மகவு இறந்து விட்டது. மற்றொரு பெண்ணான செல்லம்மாள் அண்ணி மேடை தளவாய் சண்முகக் குமாரசாமி முதலியாரவர்களுக்கு வாழ்க்கைப்பட்டார்கள். இரண்டு ஆண்மக்களில் மூத்தவர்

தான் V. S. பழனியப்ப முதலியார் அவர்கள். இவர்கள் ஆங்கிலத்தில் B. A. பட்டம் பெற்று, இங்கிலாந்துக்குச் சென்று உயர்தரப் படிப்புகள் படித்தவர்கள். இன்று குடும்ப நிர்வாகத்தைத் திறம்பட நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இளைய குமாரர் V. S. தீர்த்தாரப்ப முதலியார் அவர்கள், மேடை தளவாய் முதலியாரவர்கள் குடும்பத்தில் மணஞ்செய்து எல்லா நலமும் எய்தப் பெற்றிருக்கிறார்கள். திரு. முதலியாரவர்கள் குடும்பம் இளமையிலிருந்தே செல்வத்தில் திளைத்துள்ள குடும்பம். மக்கட் செல்வமும் குறைவின்றி நிரம்பியிருக்கிறது.

# விவசாயக் கல்வியும் கால்நடை மருத்துவமும்

பள்ளிப் படிப்பு முடிந்த ஒரு வருஷகாலமெ இவர்கள் விவசாய வேலையைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள். இவர்கள் தந்தையாருக்கு அப்பொழுது இராசாங்க உத்தியோகஸ்தர்களிடம் அதிகச் செல்வாக்கு இருந்ததால் திருநெல்வேலித் தாலுகா ஆபீசில் தற்காலிக எழுத்தாளர் (Acting Copyist) வேலையில் இவர்களை அமரச்செய்தார்கள். இப்படிப்பட்ட சிறு வேலையும் நீடித்திருக்கவில்லை. சென்னையைச் சேர்ந்த சைதாப்பேட்டையில் கவர்ண்மெண்டார் புதிதாக விவசாய கலாசாலை ஒன்றை நிறுவினார்கள். விவசாயத்தில் ஏற்பட்டிருந்த ஊக்கம் இவர்களை அக் கலாசாலையில் மாணவனாகச் சேரும்படி தூண்டியது. அப்பொழுது திருநெல்வேலித் தாசில்தாரான சின்னச்சாமி பிள்ளை அவர்களின் சிபார்சின்பேரில் அந்த விவசாய கலாசாலையில் மாணவராகச் சேர்ந்தார்கள். அப் பள்ளிக்கூடத்தில் 1884 ஜூன் மாதம் வரை படித்து G. M. A. C. என்ற பட்டம் பெற்றார்கள். தமது வாழ்க்கையிலேயே சந்தோஷகரமான காலம் இந்த விவசாய கலாசாலையில் படித்த காலந்தான் என்று இவர்கள் அடிக்கடி சொல்வார்கள். அப் பள்ளியில் அக் காலத்தில் உபாத்தியாயர்களாயிருந்த W. R ராபர்ட்ஸன் M. R. A. C. & C. பென்சன் M. R. A. C. முதலியவர்கள் பாடஞ்சொல்லிக் கொடுக்கும் திறமையை இன்றும் நினைந்து மகிழ்கிறார்கள். பூதபௌதிக சாஸ்திரங்களின் உண்மையான உயர்வையும், தேக அப்பியாசத்தின் அத்தியாவசியகத்தையும் இவர்கள் அறிந்தது அவ்விடத்திலேதான். சென்னைக் கிறிஸ்தவ கலாசாலையில் பேச்சளவில் நின்ற

சமரச பாவனை இந்த விவசாய கலாசாலையிலேதான் உண்மை யனுபவமாயிற்றென, தாம அப்பள்ளியில் அடைந்த நலனை எண்ணி அடிக்கடி மகிழுவார்கள். இவைகள் எல்லாவற்றை யும காட்டிலும சிறப்பாயிருநதது அப் பள்ளியில் படிக்கும போது, "நாளை பரீக்ஷை ஒன்று வருமே, அதில் தேறுவோமோ அல்லது தேறமாட்டோமோ" என்ற விசாரமின்றிப் படிக்கும் படியா யிருநததுதான். அது அப் பள்ளி வாழ்க்கையை மிகவும சநதோஷகரமாகச் செய்தது என்னலாம. ஆகவே இவர்கள் இநதக் கலாசாலை வாழ்க்கையை மகிழ்ச்சிக் குரியதாகக் கருதியது பொருத்தமே.

விவசாய கலாசாலையில் பட்டம் பெற்று, அப் பொழுதுதான் புதிதாக ஏற்படுத்தி யிருநத கால்நடை மருத்துவ இலாக்காவில் உத்தியோகம ஏற்றார்கள். ஒரு வருடகாலம் Probationary Local Cattle Disease Inspector ஆக வேலை பார்த்தபின் 1885-ல் Local Cattle Disease Inspector ஆக ஐமபது ரூபாய் சமபளத்தில் நியமனமாகித் திருநெல்வேலியில் வேலை பார்த்தார்கள். இதே உத்தியோகம 1887-ல் எழுபத்தைநது ரூபாய் சமபளத்தில Stock Inspector என்ற பெயருடையதாகி உயர்நதது. புதிதாக ஏற்பட்ட ஒரு இலாக்காவில் பல துறைகளிலும் விருத்தி யேற்படுவது இயல்பா யிருக்க இநதக் கால்நடை மருத்துவ இலாக்கா வளர்ச்சியடையவில்லை; வளர்ச்சிதான் அடையவில்லை என்றால் அதோடு நில்லாமல் அநத இலாக்காவுக்கும் அநத இலாக்காவில் உள்ள உத்தியோ கஸ்தர்களுக்கும ஆபத்தும் ஏற்பட்டது. 1890-ல் இந்த இலாக்கா அவசியமில்லை என்று அதிகாரிகள் தீர்மானித்து விட்டார்கள். இத் தீர்மானம் ஊர்ச்சிதத்திற்கு வருமுன்னே இநத இலாக்கா உத்தியோகஸ்தர்களிற் பலர், வேறு

இலாக்காக்களில் உத்தியோகங்கள் தேடிக்கொண்டு வெளியே போய்விட்டனர். இலாக்கா போனாலும் இத் துறையில் முதன்மையாய் உழைத்த ஆறு பெயர்களைத் தெரிந்தெடுத்து அவர்களை மட்டும் வேலையில் நிறுத்திக்கொள்வதென்று விசாரணைக் கமிட்டியாரால் தீர்மானிக்கப்பட்டது. அவ்விதம் நிறுத்திக்கொள்ளப்பட்ட அறுவரில் முதல்வராக நின்றவர் நமது முதலியாரவர்கள். ஆறு வருடகால உழைப்பில அந்த இலாக்காவிலுள்ள உத்தியோகஸ்தர் எல்லோருக்கும் முதன்மையாய் அமைந்த பெருமை போற்றத்தக்கதே.

கால்நடை மருத்துவ இலாக்கா போனாலும் இவர்கள் உத்தியோகம மட்டும் போகவில்லை. இவர்களைச் சென்னை ரெவினியூ போர்டு ஆபீசில் எழுத்தாளர் வேலை பார்க்கச் சொன்னார்கள். அப்படி அந்த ஆபீசில் Price Section-ல் இவர்கள் வேலைபார்த்தபோது, தான் விரும்பிச் சேர்ந்த கால்நடை இலாக்காவின் நிலையற்ற தன்மையினை உணர்ந்து ரெவினியூ இலாக்காவுக்கு உரிய பரீக்ஷைகளிலெல்லாம் தேர்ச்சி பெற்றார்கள். ஆகவே 1893–94 வருடங்களில் ரெவினியூ டிப்பார்ட்மெண்டில் ஒரு டிப்டி கலெக்டர் ஆவதற்குரிய பரீக்ஷைகளிலெல்லாம் தேறிவிட்டார்கள். ஆனால் மத்திய இராசாங்கத்தார் பெரு முயற்சியால் கால் நடை மருத்துவ இலாக்காவைத் திரும்பவும் ஏற்படுத்தி நமது முதலியார் அவர்களை மறுபடியும் எடுத்துக்கொண்டார்கள். அந்த இலாக்கா சம்பந்தமான உயர்தரப் படிப்புக்காக இவர்கள் ஒரு வருஷம் Bombay Veterinary College-ல் படிக்க நேர்ந்தது. அங்கேதான் இவர்கள் அநேக பாடங்களில் முதல்வராகத் தேறி மெடல் பரிசுபெற்றது. G. B. V. C. பட்டம் பெற்றதும் அங்கேதான். அப் பள்ளிப் படிப்பு முடிந்ததும் 1895 ஜுலையில் மறுபடியும் நூறு ரூபாய்சம்பளத்

தில் Senior Veterinary Assistant ஆக வேலை நியமனம் ஆயிற்று. இந்த உத்தியோகத்தில் சுமார் ஆறு வருஷ காலம் வேலைபார்த்த பின்பு 1911 மே மாதம் இவர்கள் அந்த இலாக்காவின் டிப்டி சூப்பிரண்டாக நியமனம் செய்யப் பெற்றார்கள். மாதச் சம்பளமும் 200 முதல் 400 ரூ. வரை. உத்தியோகமும பெரிய 'கெஜட்டட்' உத்தியோகம். இநத உத்தியோகத்தை முதன் முதல் ஆரமபித்து அதற்கு இவர்களையே நியமித்து இநத இலாக்கா அதிகாரிகள் தங்களைக் கவுரவப்படுத்திக்கொண்டார்கள். இநத உத்தியோகத்தில் சுமார் நான்கு வருடகாலம உழைத்தபின் 15—8—1915-ல் ஓய்வெடுத்துக்கொண்டார்கள். ஓய்வெடுத்துக்கொள்ளும்போது இவர்கள் வாங்கிய சம்பளம் மூந்நூறு ரூபாய்.

# உத்தியோகப் பண்பு.

கால் நடை மருத்துவ இலாக்காவோ சென்னையில் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டதொன்று. அவ்விலாக்காவின் தலைமை அதிகாரிகளாய் அமைந்தவர்களெல்லாம் மேல் நாட்டிலிருந்து வந்தவர்கள். அவர்களோடு பழகி அவர்கள் கொண்டுவந்த கால் நடை மருத்துவ முறையை நம நாட்டு மக்களுக்கு ஏற்ற முறையில் எடுத்து உதவ நம முதலியாரவர்களைவிடத் திறம படைத்தவர்கள் அந்த இலாக்காவில் இல்லை. Lieut Col. James Mills என்ற Inspector of Cattle Diseases எழுதியிருந்த Indian Stock Owner's Manual என்ற புத்தகத்தை "இந்து தேசத்துக் கால்நடைக்காரர் புஸ்தகம்" என்று 1885-ம் வருடம முதலியாரவர்கள் மொழிபெயர்த்தார்கள். அப் புத்தகந்தான் ஐரோப்பிய கால் நடை மருத்துவத்தைப் பற்றி முதன் முதல தமிழில் வெளிவந்த நூல். அந்த நூலை இராசாங்கத்தார் தங்கள் செலவில் அச்சிட்டு வெளிப்படுத்தி, கால்நடைகளைப்பற்றி நம நாட்டு மக்கள் அறியும்படி செய்தார்கள். இம் மொழி பெயர்ப்பைப்பற்றி முதனூல் ஆசிரியரான Lieut Col. James Mills துரையவர்கள் மிகவும் புகழ்ந்து எழுதியிருப்பதுடன் ஆசிரியருடைய பொறுமையையும் எழுத்துத்

திறமையையும் போற்றியிருக்கிறார்கள்.* இதன்பின் பல வருடங் கழிந்த பின் இவர்கள் "இந்தியாவில் கால் நடைகளுக்குக் காணுகிற அதிக பிராணுபாயமான வியாதிகள்" (More Deadly Forms of Cattle Diseases in India) என்ற புஸ்தகத்தை மொழி பெயர்த்தார்கள். இந்தப் புஸ்தகத்தையும இராசாங்கத்தாரே வெளியிட்டார்கள்.

பின்பு தமக்குப் பல வருடகாலம இந்த இலாக்காவில் கிடைத்த அனுபவத்தால் கால் நடைகளுக்கு வியாதி வாாமல் "அம்மை குத்தலும் அதன் உபயோகங்களும்" என்ற ஒரு சிறு நூலை எழுதி வெளியிட்டார்கள். இந்த நூல்களெல்லாம எளிய தமிழ் நடையில் எழுதப் பெற்றிருக்கின்றன. இதைப்பற்றி முதலியாரவர்கள் என்னிடம சொன்னதாவது, "நான் எழுதிய இந்தப் புத்தகங்களைப் படித்துப் பயன் பெற வேண்டியவர்கள் நம் நாட்டு விவசாயிகளும், பண்ணை வேலை செய்யும பள்ளர் பறையர்களுமாவர். அவர்களிடம் நேரில் பேசுவதாக மனத்தில் பாவனை செய்துகொண்டு எழுதியதிஞல்தான் இவ்வளவு எளிய நடையில் இவை அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு புத்தகம்

---

* Extract from the preface [dated 18—2—1885] to the Tamil Translation of "Indian Stock Owner's Manual" by Lieut Col. J. Mills, Retired Principal of the Bombay Veterinary College, formerlly Inspector of Cattle Diseases [an office now designated as Director of Veterinary Services] Madras Presidency -- "To Mr. V. P. Subramania Mudaliar who undertook the Translation, my best thanks are due. Nothing could equal the patience & skill he has displayed in the work, performed in addition to his other duties as a probationer in the Cattle Disease Inspection Department, now known as Civil Veterinary Department."

எழுதும்போதும் நான் என் மனக்கண் முன் ஒரு கூட்டத் தாரை வைத்துக்கொண்டுதான் எழுதத் தொடங்குவேன்" என்று கூறினார்கள். முதலியாரவர்கள் புத்தக ஆசிரியராக அமைந்து பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழில் மொழிபெயர்த்துக் கொடுத்த பெருமையைத் தமிழுலகம் என்றும் மறவாதென்பது திண்ணம.

இவர்கள் கால் நடை மருத்துவ இலாக்காவில் வேலை பார்த்தவர்களானாலும் அந்த இலாக்கா ஆடிக்கொண் டிருந்த காலத்தில் வேறு சில வேலைகளும் பார்க்க நேர்ந்தது. 1891-ல் செங்கல்பட்டு ஜில்லாவில் Kitchen Superintendent வேலையும் 1892-ல் சேலம் ஜில்லாவில் Loan Inspection வேலையும் பார்த்திருக்கிறார்கள். இவர்கள் தாம் எநத வேலையைச் செய்யநேர்நதாலும், அநத வேலையைத் திறம் படச் செய்து அந்தந்த இலாக்காவின் மேலதிகாரிகளிடம் நற்பெயரும் புகழும் பெற்று வநதிருக்கிறார்கள். 1891-ல் இவர்கள் செங்கல்பட்டு ஜில்லாவில் செம்பாக்கம் கிராமத்தில் பஞ்ச நிவிர்த்திக்காகக் கவர்ண்மெண்டார் கண்காணித்து வந்த Kitchen Superintendent Work-ல் நல்ல பெய ரெடுத்திருக்கிறார்கள். இவர்கள் அந்த Kitchen Workக் குப் போவதற்கு முன் அவ்விடத்தில் ஜாதிபேதம் காட்டப்பட்டு வந்திருந்தது. இதற்குப் பதிலாக இவர்கள் அந்த வேலையை ஏற்றுக்கொண்டு சமரச பாவத் தோடு செய்த திருத்தங்கள் பல. அதனால் நல்ல பெயரையும் அடைந்தார்கள். இவர்கள் இநத இடத்தில் மட்டும் அல்ல இன்னும் மதுராந்தகம் தாலுகா கருங்குளியிலும் மேலே கண்ட வேலையைக் கண்காணித்து பஞ்ச காலத்தில் நல்லதொரு தேச சேவை செய்திருக்கிறார்கள். இவர்க ளுடைய வேலைத் திறமையைப்பற்றி அப்பொழுது

செங்கல்பட்டு ஜில்லாவில் சப் கலெக்டர் வேலைபார்த்துவந்த உயர் திரு. மனவேதன் ராஜ் அவர்கள் வெகுவாய்ப் புகழ்ந்திருக்கிறார்கள்.*

கால் நடை மருத்துவ இலக்காவின் முக்கியமானதொரு வேலை, மாட்டுத்தாவணிகளுக்குப்போய் அங்கு கூடும் மாடுகளுக்கு அவசியம் ஏற்பட்டால் மருத்துவம் செய்வதாகும். இந்த மாட்டுத்தாவணி வேலையில் கால்நடை மருத்துவர்கள் நல்ல பெயர்வாங்குவது அநேகமாய் அசாத்தியம் என்று அவ்விலாக்காவைச் சேர்ந்த என் நண்பர் ஒருவர் கூறக் கேட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட மாட்டுத்தாவணி வேலையில் நம் முதலியாரவர்கள் ஒருமுறையல்ல, பல முறை நற்பெயர் அடைந்திருப்பது அவர்கள் திறமையையும் நேர்மையையுமே விளக்குவதாகும். 1897-ல் கும்பகோணம் மகாமகத்தையொட்டி நடத்திய கும்பகோணம் மாட்டுத்தாவணிக்குக் கால்நடை மருத்துவராக, நம் முதலியாரவர்கள் சென்றார்கள். அங்கு அப்பொழுது சப்கலெக்டராயிருந்த W. B. எயிலிங் துரையவர்கள் இவர்களை மெச்சிப் பேசும்படி நல்ல வேலை செய்திருக்கிறார்கள்.§

---

* Extract from the Season Report for the week ending 5—12—1891. K. C. Manavedan Raja Esq., Sub Collector, Chengleput -- This Stock Inspector, Subramania Mudaliar was the best Superintendent, we had in the Division. His work was always satisfactory. He was carefull in the expenditure of Government Property and kind and considerate to the inmates of the kitchen.

§ Extract from the Endorsement by W. B. Ayling Esq., Sub Collector, who retired as Judge of the Madras High Court on the report of the Stock Inspector V. P. S. Mudaliar on the Cattle fair held at Kumbakonam in February 1897-- "The fair was exceedingly well managed by the Inspector, V. P. Subramania Mudaliar"

இவர்கள் மகா மகத்தில் செய்த நல்ல வேலை மறு வருடமும் அந்த ஊரில் நடந்த மாட்டுத் தாவணிக்கு இவர்களே வேண்டும் என்று அப்பொழுது தஞ்சையில் கலெக்டரா யிருந்த ஆண்டிரூ துரையவர்கள் எழுதுவதற்குக் காரணமாயிருந்திருக்கிறது.* கால்நடை மருத்துவ இலாக்காவில் மாடுகளுக்குக் காணும் வெக்கை (Rinderpest) நோய்க்கு, ஊசிபோடுதல் (Inoculation) புதிதாக ஏற்பட்ட ஒரு முறையாகும். இந்த முறையை முதன் முதல் நம நாட்டில் பழக்கத்துக்குக் கொண்டுவந்த பொழுது, கால் நடைகளின் சொந்தக்காரர்களிடமிருந்து எதிர்ப்ப அதிகமிருந்தது. இந்த ஊசி போடும் முறை, வெக்கை நோயை வராமல் தடுக்கும் முறைதான் என்பதை மக்கள் அறியாதிருந்தனர். அதிகாரிகளோ இம் முறையைப் பிரபலப்படுத்தவேண்டுமென்று விரும்பினர். அதிகாரிகள் விருமபுகிறபடி, வெக்கை நோய் பரவக்கூடிய இடங்களில் உளள கால் நடைகளுக்கு ஊசி போட நம் முதலியாரவர்கள் எடுத்துக்கொண்ட சிரமம் கொஞ்சமன்று. கண்ணன் தேவன் மலைகளில் கால் நடைக் கூட்டத்திலே, இந் நோய் பரவ ஆரம்பித்ததும், அங்கும

---

* Extract from the letter of J. Andrew Esq. Collector of Tanjore, [who retired as a Member of the Board of Revenue] 19—1—1898 to the Board -- The Sub Collector specially desires that M. R. Ry. V. P. S. Mudaliar, the Stock Inspector, deputed during the last 2 years may be sent this year also. In making this request, he says, "I specially ask for the services of this office as he managed matters last year with conspicuous success and his previous experience will be invaluable."

I may add that I saw him a number of times last year and found him thoroughly satisfactory in every way. The success of the fair is in no small measure due to his intelligent supervision and arrangements.

இம் முறையை அதிகாரிகள் கையாள விரும்பினர். மலைமேல், பலமைல் தூரம் சென்று, பல நாள் உணவின்றி வருந்தி இந்த ஊசிபோடும் வேலைக்கு வேண்டுவனவற்றை முதலியாரவர்கள் திறம்படச் செய்தார்கள். கோயமுத்தூர் ஜில்லாவில் உள்ள சத்தியமங்கலம் டிவிஷனிலும், கர்நூல் ஜில்லாவில் உள்ள ஆத்மகூர் டிவிஷனிலும், தஞ்சாவூர் ஜில்லாவிலும் இவர்கள் தம வாக்கு வன்மையினால் ஜனங்களை யெல்லாம் இந்த முறையின் நன்மையை உணரும்படி செய்து, இவர்களே இம் முறையைக் கையாளுவதில் சமர்த்தர் என்ற பெயர் எடுத்திருக்கிறார்கள். இதைப்பற்றி அப்போது Veterinary Superintendent ஆக இருந்த W. D. கன் (W. D. Gunn) துரையவர்கள் இம முறையைப் பிரபலப் படுத்துவதில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டவர்கள் முதலியாரவர்கள் என்றும், டிப்பார்ட்மெண்டார் அந்த வருஷம் செய்த வேலையில், பாதி வேலை இவர் ஒருவரே செய்திருக்கிறார் என்றும் புகழ்ந் தெழுதி யிருக்கிறார்கள். *

---

1. * Extract from Memorandum No. 327 R. D. 30—4—1906 of Lt. Col: W. D. Gunn, Superintendent Civil Veterinary Dept. -- "Senior Veterinary Assistant V. P. Subramania Mudaliar is informed that the work during the year especially in connection with inoculation deserves special mention & great credit is due to him for his endeavours in obtaining a very wide popularity for the new treatment in the Tanjore Dt. He has been responsible for nearly one half of the total number of cattle inoculated by the Dept. during the year."

2. Extract from the Annual Report of the Dept. 1908--1909:— I [Lt Co: W. D. Gunn] take this opportunity of stating that the present success of inoculation operation is mainly due to the tact displayed by the Veterinary Inspector, V. P. Subramania Mudaliar.

இவ்வாறு, இவர்கள் தாம் எற்றுக்கொண்ட வேலையை உண்மையாகவும் திறம்படவும் செய்வதை அந்த இலாக்கா மேல் உத்தியோகஸ்தர்கள் அறிந்து இவர்களைப் பலவாறு போற்றி யிருக்கிறார்கள். உண்மையான உழைப்பைப் போற்றியே இவர்களை அந்த இலாக்காவில டிபுடி சூப்பிரண்டு வேலையில்நியமித்தார்கள். இவர்கள் அந்த வேலைக்குப் பிரயத்தனப்பட்டபொழுது இவர்கள் இலாக்காவின் மேலதிகாரியான **ஹோல்னஸ் துரை** (Major J. D. E. Holnes) வெகுவாய்ப் புகழ்ந்திருக்கிறார்.* விடா உழைப்புக்கும் உண்மைக்கும இவர்கள் அந்த இலாக்காவில் தலைசிறந்தவராயிருந்தார்கள் என்பதற்கு அவரது மதிப்புரையே போதிய சான்றாம்.

---

1. * Extract from the endorsement Dis. No. 831 Dated. 12-9-1901 of Major. J. D. E. Holnes M. A., A. V. D. Supt.,C. V. Dept. on the application of V P. S. Mudaliar for the post of a Dy. Supt. "I cannot speak too highly of the work which this Stock Inspector has done since I have had charge of this office. He is an extremely hard-working and trust-worthy offiicer worthy of promotion".

2. Extract from letter Dis. No. 837 Dated 14-9-1901 from Major J. D. E. Holnes M. A., A. V. D Supt. Civil Veterinary Dept , Madras Presidency to the Board of Revenue; Stock Inspector Subramania Mudaliar has invariably carried out his duties to my entire satisfaction l Consider him to be a very valuable Veterinary Assistant. As he was the most useful Stock Inspector, he has had very much heavier work given him than the other Stock Inspectors & he has always shown himself ready & capable of doing whatever was required of him. I believe him also to be absolutely trust worthy in the execution of his duty & I strongly recommend him for whatever promotion the Board see him fit to confer on him.

இந்தச் சிபார்சுகளினால்தான் இவர்கள் மாதம் இருநூறு ரூபாய் சமபளத்தில் 1911-ம் வருஷம் டிபுடி சூப்பிரண்டு உத்தியோகம் பெற்றார்கள். இவர்களுடைய அறிவுக்கும் ஆற்றலுக்கும் இதனினும் பெரிய உத்தியோகங்கள் பெற்றிருக்கவேண்டும். அப்படி இவர்கள் அடையாதது இவர்கள் குறையன்று; இவர்கள் உத்தியோகம் பெற்ற இலாக்காவில் இதைவிடப் பெரிய உத்தியோகங்கள் இல்லாத குறையே.

"பாழி நெடுந்தோள் வீர! நின் பெருமைக் கேற்பப்
பனையிலங்கை
ஏழு கடற்கு அப்புறத்ததாக இருந்த (து) இழிபன்றோ."

என்று சீதை தன் முன் நின்ற அனுமானைப் பார்த்துச் சொன்னதுபோல், முதலியாரவர்கள் பெருமை யெல்லாம் தோன்றச் செய்யும் பெரிய பெரிய உத்தியோகங்கள் இல்லாத குறை அக் கால் நடை இலாக்காவைச் சேர்ந்ததே என்று தான் கூறவேண்டும்.

# தமிழ்மொழிப் பயிற்சி

★

## 1. ஆரம்பம்.

நமது முதலியாரவர்கள் உயர் குடும்பத்தில் பிறந்தவர்கள். உயர்தரக் கல்வி கற்றவர்கள். உயரிய ஒழுக்கமுடையவர்கள். இராசாங்கத்தில் உயர்ந்த உத்தியோகம் வகித்தவர்கள். ஆனல் அவர்கள் பெருமை இவ்வளவில் நின்றுவிடவில்லை. இன்று அவர்களைத் தமிழ் மக்கள் போற்றுகின்றார்கள் என்றால், அது அவர்களுடைய உயர் குடிப் பிறப்பும், பெரிய உத்தியோக நிலையும் பற்றியன்று. அவர்கள் தமிழ் மொழியின்பால் பேரன்பு பூண்டு, தமிழ் நூல்களை நன்கு கற்று, தமிழில் புத்தம் புதிய நூல்களையியற்றித் தமிழ்த் தாய்க்கு அருந் தொண்டாற்றியவர்கள் என்பதற்காகத்தான். அவர்கள் எழுதியுள்ள நூல்களைப் பற்றி விரிவாகக் கூறுமுன் அவர்களது தமிழ்மொழிப் பயிற்சியைப் பற்றி ஒரு சில கூறுவதவசியம்.

இவர்கள் குடும்பத்தில், இவர்கள் தந்தை நல்ல அறிவாளியா யிருந்தும், விசேடமான தமிழ்ப்பயிற்சியுடையவரென்று சொல்லமுடியாது. இவர்கள் ஆறு வயதிலிருந்தே தமிழ் மொழியின்பால் அன்புடையராய்த் தமிழ் நூல்களை ஆர்வத்துடன் கற்க ஆரம்பித்தார்கள். இவர்கள் இளமையில் ஆறு வயது நிரம்புமுன் திருநெல்வேலியிலுள்ள மேடை தளவாய் அரண்மனையில் கல்வி கற்க வந்துவிட்டார்கள்.

அப்பொழுது அந்தத் தளவாய் அரண்மனையில் முத்துசாமி பிள்ளை யென்ற வேலையாள் இருந்தான். அவன் அங்கே தண்ணீர் இறைத்தல் முதலிய சில வேலைகளைமட்டும் செய்து வந்தான். அவனுக்கு இரண்டு கண்ணும் தெரியாது. ஆனால் அவன் ஒரு கதைக் களஞ்சியம். பாரதம், இராமாயணம், ஸ்காந்தம், திருவிளையாடல் முதலிய கதைகள் அவனுக்கு மனப்பாடம். அவனுக்கு வேலையில்லாத நேரங்களிலெல்லாம் முதலியாரவர்கள் அவனிடம், இந்தக் கதைகளைக் கேட்க ஆரம்பித்தார்கள். தம தமிழ்மொழிப் பயிற்சிக்கு மூல குரு அந்த முத்துசாமி பிள்ளைதான் என்று முதலியாரவர்கள் இன்றும் பெருமையோடு சொல்லுகிறார்கள். இப்படியிருக்கும்போது, தளவாய் அரண்மனையில் அடிக்கடி ஏணியேற்றம், பாரத அம்மானை, வைகுண்ட அம்மானை முதலிய நூல்கள் முறையாகப் படிக்கப்பட்டுவந்தன. அப்படிப் படிக்கும்போ தெல்லாம் முதலியாரவர்கள் கூட இருந்து கேட்பார்கள். ஆகவே தமது ஒன்பதாவது வயதிற்குள் முதலியாரவர்கள் அல்லியரசாணி மாலை, பவளக்கொடி மாலை முதலிய சிறு நூல்களைத் தாமே கற்றுத் தமிழ்மொழிப் பயிற்சியில் ஆர்வம் காட்ட ஆரம்பித்தார்கள். இவர்களுக்குப் பன்னிரண்டு வயதாகும்போது இவர்களுடைய தந்தையாரிடம், யாரோ ஒருவர் குற்றாலத் தல புராணத்தின் பிரதி ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்தார். அந்த நூலையும் ஆர்வத்தோடு படித்தார்கள். பின் தமது பதினைந்தாவது வயதில் கூளப்ப நாயக்கன் காதல், வருணகுலாதித்தன் மடல், விறலி விடு தூது முதலிய நூல்களைக் கற்றார்கள். தமிழ் நாட்டில், உயிருள்ள தமிழில் எழுதப்பட்டுள்ள இந்த நூல்களை, இளமையில் கற்ற முதலியாரவர்களுக்குத் தமிழ் மொழியின்பால் ஓர் அன்பும், தமிழ்க் கவி இயற்றுவதில் ஒரு திறமையும் உண்டானது வியப்பன்று.

## 2. தெற்குப் புதுத்தெருச் சவுக்கை.

முதலியாரவர்கள் தளவாய் அரண்மனையிலிருந்து கொண்டிருந்தபொழுது அழகிய சொக்கநாத பிள்ளையின் சிநேகம் கிடைத்தது. அழகிய சொக்கநாத பிள்ளை, ஒரு சிறந்த தமிழ் வித்துவான். அக்காலத்தே, திருநெல்வேலியில் தெற்குப் புதுத் தெருவில் கவிராச நெல்லையப்ப பிள்ளையவர்கள் வீட்டின் தோட்டத்தில் அமைந்திருந்த சவுக்கை, தமிழ் வளர்க்கும் பண்ணையாயிருந்தது. அந்தச் சவுக்கையில் தான் ராஜவல்லிபுரம் வள்ளல் முத்துசாமி பிள்ளை வசித்து வந்தார். நல்ல பிரபுவாயும், தமிழ் நயமறிந்தவராயுமிருந்த இந்த முத்துசாமி பிள்ளையைத் தேடிப் பரிசுபெறப் பல வித்துவான்கள் வருவார்கள். சவுக்கையில் எப்பொழுதும் தமிழ் மணம் வீசிக்கொண்டேயிருக்கும். தமிழ்ப் புலவர்களின் கவி முழக்கங்களுக்கும் குறைவில்லை. யமகந்திரிபுகள் பாடுவதில் இச் சவுக்கைப் புலவர்களுக்கு இணையானவர் இன்றுவரை ஒருவரும் இல்லை. இந்தச் சவுக்கைக்கு, அழகிய சொக்கநாத பிள்ளைகூட, நமது முதலியார் அடிக்கடி போவார்கள். அங்கு வந்து புலவர்கள் சொல்லும் பாட்டுக்களையெல்லாம் கேட்டுக்கேட்டு அநுபவிப்பார்கள். சவுக்கைப் புலவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள், வேம்பத்தூர் பிச்சுவையர், கல்போது புன்னைவனக் கவிராயர், முகவூர் கந்தசாமிக் கவிராயரும், அவர் குமாரர் மீனாட்சி சுந்தரக் கவிராயரும், தம்பி இராமசாமிக் கவிராயரும், இவர் குமாரர் அருணாசலக் கவிராயர், சுப்பிரமணியக் கவிராயர் என்பவர்களும், சின்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் முதலியோரும் ஆவர். இப்படிச் சவுக்கைப் புலவர்களோடு பழகிய காலத்தில்தான் நமது முதலியார் அவர்கள் கவிராயர் நெல்லையப்ப பிள்ளையவர்களோடு சேர்ந்து பல நூல்களைப் படிக்க நேர்ந்தது.

அப்போது முதலியாரவர்கள் படித்த நூல்கள், திருவிளை யாடற் புராணம், குற்றாலத் தலபுராணம், பாரதம், நைடதம், நளவெண்பா, கலிங்கத்துப் பரணி முதலானவை. இப்படி இவர்கள் தமிழ்ப் பாடம படித்த காலத்தில் ஒரு நாள், அம்பலவாணக் கவிராயர் வீட்டில் சில புலவர்களுடன் பேசிக் கொண்டிருந்த பொழுது, ஸ்தல புராணங்களி லெல்லாம் குற்றாலத் தலபுராணமதான் தலைசிறந்தது என்று முதலியாரவர்கள் சொல்ல, அதை இடைமறித்து, ஒரு புலவர், காஞ்சிப் புராணந்தான் புராணங்களிலுயர்ந்ததாகும் என்று சொன்னார். அந்தக் காஞ்சிப் புராணத்தை அது வரை முதலியாரவர்கள் படியாதிருந்ததினால், அன்று முதல் அந்த நூலைப் படிக்க ஆரம்பித்தார்கள். பின்னர் முறையாகக் காஞ்சிப் புராணத்தையும், இதன் ஆசிரியர் சிவஞான முனிவர் மாணாக்கரான கச்சியப்ப முனிவர் எழுதிய தணிகைப் புராணம், திருவானைக்காப் புராணம் மற்றும சில்லரைப் பிரபந்தங்கள் எல்லாவற்றையும் படித்தார் கள். இவ்வாறு இருபது வயது நிரம்பு முன்னே, தமிழில் நல்ல இலக்கியங்களை யெல்லாம நன்கு படித்துவிட்டு, பின் நன்னூல் சங்கர நமச்சிவாயர் உரை, சுவாமிநாத தேசிகர் இலக்கணக் கொத்து, சிவஞான சுவாமிகள் இலக்கண விளக்கச் சூறாவளி, தொல் காப்பிய முதற் சூத்திர விருத்தி, பிரயோக விவேகம் முதலிய இலக்கண நூல்களைப் படித்தார் கள். தற்காலத்தில இலக்கண நூல்களைப் படிப்பது விளக் கெண்ணெய் சாப்பிடுவது போலு மென்பதைத் தமிழ்மொழி பயிலும் மாணவர்கள் அறிவார்கள். ஆனால், இலக்கிய நூல் களை முறையாகப் பயின்ற பின் முதலியாரவர்கள் இலக்கணம் படித்ததுதான் அவர்கள் தமிழ் இலக்கணங்களையும் ஆர்வத் தோடு படிக்கச் சாதகமா யிருந்திருக்கிறது. இவ்வாறு முதலியாரவர்கள் தெற்குப் புதுத் தெருச் சவுக்கையில்

சுமார் பதினைந்து புலவர்கள் மத்தியில் வளரவும், கவிராயர் நெல்லையப்ப பிள்ளையோடு சேர்ந்து நல்ல தமிழ் நூல்களைக் கற்கவும நேர்ந்தது தமக்குக் கிடைத்தற்கரிய ஒரு பெரும் பேறெனக் நினைநது இன்றும் மகிழ்கிறார்கள்.

## 3. தமிழ்த் தாதாக்கள்.

வள்ளல் முத்துசாமிப் பிள்ளையவர்களைபபோலவே அக்காலத்தில் தமிழ் மொழியையும தமிழ் வித்துவான்களையும் போற்றும் தமிழ்த் தாதாக்கள் சிலர் இருநதனர். சேற்றூர் ஜமீன்தார், எட்டையாபுரம் ஜமீன்தார், ஊற்றுமலை ஜமீன்தார் முதலியோர் தமிழ் வித்துவான்களை ஆதரித்தார்கள். இவர்களிடமெல்லாம் சவுக்கைப் புலவர்கள் சென்று பாடிப் பரிசில் பெறுவதுண்டு. இநதத் தமிழ்த் தாதாக்களில் முதன்மையானவர் ஊற்றுமலை ஜமீன்தாரான இருதாலய மருதப்பத் தேவரவர்கள். இநத இருதாலய மருதப்பத் தேவருக்கும் முதலியாரவர்கள் குடும்பத்திற்கும நெருங்கிய நட்பு இருநதது. முதலியாரவர்கள் ஜமீன்தாரவர்களுக்கு இம்முறையில் மருமகன் ஆவர். ஜமீன்தாரவர்களைப் பார்க்கப் போகிற புலவர்களெல்லாம், முதலியாரவர்களின் இருப்பிடமாகிய வெள்ளகால் வழியாகத்தான் போவார்கள். சில சமயம் முதலியாரவர்களும அந்த வித்துவான்களுடன் ஜமீன்தாரவர்களைப் பார்க்கப் போவதுண்டு. அப்படிப் போகிற பொழுது அந்த வித்துவான்களைப் போலவே அநத ஜமீன்தாரவர்கள் மீது சில பாட்டுக்கள் பாடியிருக்கிறார்கள்.* ஏனைய புலவர்களைப்போலப் பொன்னுக்கும் பொருளுக்கும நமது முதலியாரவர்கள் பாடா விட்டாலும், அன்புக்கும் அருளுக்கும் பாடிய பாட்டுக்கள் எண்ணிறநதவை.

---

* இந்தப் பாட்டுக்களெல்லாம் "வெ. ப. சு. தனிக்கவித்திரட்டு" என்ற நூலில் வெளியிடப்பட்டுள்ளன.

## 4. கம்பரது காவிய நயம் உணர்ந்தது.

'கல்வியிற் பெரியவன் கம்பன்', 'கவிச் சக்கரவர்த்தி கம்பன்' என்னும் பழமொழிகள், தமிழகத்தே பல நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்தே வழங்கி வருவனவா யிருந்தும் முதலியாரவர்கள் நெருங்கிப் பழகிய சவுக்கைப் புலவர்கள் கம்பரின் உண்மையான பெருமையை உணர்ந்தாரல்லர். மேற்கோளாக, கம்பர் கவிகளை அங்கொன்றும் இங்கொன்றுமாக எடுத்தாளுவதன்றிக் கம்பர் கவிதையை முறையாகப் படித்தாரல்லர். ஆகவே நமது முதலியாரவர்கள், திருநெல்வேலியில் தமிழ்ப் புலவர்களிடையே வளர்ந்த காலத்து, கம்பரது இராமாயாணத்தைப் படிக்கநேரவில்லை. 1877-ல் சென்னை கிறிஸ்தவ கலாசாலையில் மாணவராகச் சேர்ந்த பொழுது, இவர்களது தமிழ்ப் புலமையை அறிந்த மாணவர்களெல்லாம் இவர்களிடம் தமிழ்ப் பாடம் படிக்க வருவதுண்டு. அப்படி அம்மாணவர்கள் வந்தபொழுது, அவர்களுடைய பாடப் புத்தகங்களில் கம்ப ராமாயாணப் பகுதிகள் வரும் போதுதான், முதலியாரவர்கள் கம்பராமாயாணத்தைப் பார்க்கவும் படிக்கவும் நேர்ந்தது. கம்பரது கவிதையின் உண்மையான உயர்வை அன்று அறிந்த முதலியாரவர்கள் இன்றுவரை, கம்பரது கவிகளைப் படிப்பதும் அவருடைய கவிகளுக்கு உண்மையான பொருள் கண்டுபிடித்து அதை உலகோர்க்கு எடுத்துரைப்பதுமே தமது வாழ்க்கையின் இலட்சியமாகக்கொண்டு உழைத்து வருகிறார்கள். அவர்களது முயற்சியின் பலனே, இன்று நமக்குக் கிடைத்திருக்கும் "கம்பராமாயண சாரம்" என்னும் அரிய பெரிய நூலாகும்.*

---

* இந்நூலைப் பற்றி விரிவான விமரிசனம் பின்பு கூறப்படும்.

## 5. டாக்டர் சாமிநாதையர் நட்பு.

இன்று நம்மிடையே வாழும் தமிழ்க் கிழவர் இருவர். ஒருவர் முதலியாரவர்கள், மற்றொருவர் டாக்டர் சாமிநாதையரவர்கள். இருவரும் எண்பதாண்டு நிறைந்தவர்கள். நல்ல தமிழ்ப் புலமை வாய்ந்தவர்கள். தமிழ்த் தாய்க்கு அருந்தொண்டு ஆற்றியவர்கள். தமிழ்த் தாயின் பழம் பணி துலக்கிய பெருமை நமது ஐயரவர்களது என்றால், அத் தாய்க்குப் புதுப்பணி பூட்டிய பெருமை நமது முதலியாரவர்களைச் சாரும். இவ்விரண்டு கிழவர்களும் அரை நூற்றாண்டாக அளவளாவிப் பழகிய நண்பர்கள். 1890-ல முதலியாரவர்கள் கும்பகோணம் காலேஜில் போதகாசிரியராயிருந்த தம் நண்பர் S. T. கள்ளபிரான் பிள்ளையவர்களைப் பார்க்கப் போயிருந்தபோதுதான் முதன் முதல ஐயரவர்கள் பழக்கம் கிடைத்தது. இருவரையும் ஒருங்கே கூட்டி வைத்தவர்கள் அப்பொழுது அககலாசாலைத் தலைமையாசிரியராயிருந்த சாமி ஐயரவர்கள். இந்தச் சாமி ஐயரவர்கள் திருநெல்வேலி இந்து கலாசாலைப் பிரின்சிபலாக இருந்த காலத்தில் அவர்கள் மாணுக்கராக முதலியாரவர்கள் இருந்திருக்கிறார்கள். அப்பொழுது ஐயரவர்கள் புதிதாக வெளியிட்டிருந்த சிந்தாமணியையும் பத்துப் பாட்டையும் முதலியாரவர்கள் வாங்கி வந்து படிக்க ஆரம்பித்தார்கள். தமது உத்தியோக முறையில் கும்பகோணம் போகும்படி நேர்ந்த காலங்களிலெல்லாம் முதலியாரவர்கள் ஐயரவர்களைப் பார்ப்பார்கள். முதலியாரவர்கள் கவித் திறனையும், தமிழறிவையும் அறிந்த, திருவாவடுதுறை யாதீனத்து மகா சன்னிதானம், ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகரவர்கள் ஐயரவர்கள் மூலமாக, முதலியாரவர்களை மடத்திற்கழைத்து அளவளாவியிருக்கிறார்கள். அப்படி ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக

சுவாமிகளைப் பார்த்தபொழுது, 'முதலியாரவர்கள் சில பாட்டுக்கள் பாடியிருக்கிறார்கள்.'* இப் பாட்டுக்களை நாடக முறையில் அமைத்திருக்கின்ற ஒழுங்கையும் நயத்தையும் வியந்து சாமிநாதையரவர்கள் புகழ்ந்திருக்கிறார்கள். ஐயரவர்கள் முதலியாரவர்களின் உண்மையான தமிழ்ப் பற்றையும், கவிபாடும் திறமையையும் போற்றி எழுதியிருக்கும் கடிதங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல, எண்ணிறந்தவை; இவைகள் இன்றும் முதலியாரவர்களிடமிருக்கின்றன.

## 6. இலக்கிய நண்பர்கள்.

முதலியாரவர்கள் இயற்றியுள்ள நூல்கள் பல. அவற்றைப்பற்றி விரிவாகக் கூறுமுன் அவர்கள் வாழ்க்கையில், இலக்கியத் துறையில், அவர்களோடு பழகிய நண்பர்களைப்பற்றிச் சொல்லுவது அவசியம் என்று நினைக்கிறேன். முதலியாரவர்களுடைய இலக்கிய நண்பர் பலர். அவர்களில் முக்கியமானவர் ஐவர்:— திருநெல்வேலிக் கவிஞர் அழகிய சொக்கநாத பிள்ளை, மு. ரா. அருணாசலக் கவிராயர், பூண்டி அரங்கநாத முதலியார், Professor P. சுந்தரம் பிள்ளை, அ. மாதவையர். இவர்களில் அழகிய சொக்கநாத பிள்ளை அருணாசலக் கவிராயர் அ. மாதவையர் முதலியவர்களைப் பற்றி முதலியாரவர்களே எழுதியிருக்கிறார்கள்.§

### (i) அழகிய சொக்கநாத பிள்ளை

இவர் திருநெல்வேலிக் கடுத்த தச்சநல்லூரிலே, வேளாளர் குலத்திலே வன்னியப்ப பிள்ளையின் குமாரராகப்

---

* இப் பாடல்களை திரட்டித் திருவாவடுதுறை அம்பலவாண தேசிக மாலை என்ற பேருடன் வெளிப்படுத்தி யிருக்கிறார்கள்.

§ இவ்வ முறையே கரந்தைக் கட்டுரை, செந்தமிழ், ஆனந்த விகடன் தீபாவளி மலரில் வெளிவந்துள்ளன.

பிறந்தார். முதலியாரவர்களுக்கு இளமையில் கல்வி போதித்த வரும் அக்காலத்துத் தமிழ்ப் பள்ளிக்கூடத்து வாத்தியார்களுள்ளே சிறந்த கல்வியறிவும் போதிக்கும் திறமையுமுடையவருமாயிருந்த கணபதி வாத்தியார் இவருடைய சிறிய தந்தையார். இந்த அழகிய சொக்கநாத பிள்ளை, தளவாய் அரண்மனையில் தளவாய் இராமசுவாமி முதலியாரவர்களுத்திரவுப்படி சி. வை. தாமோதரம் பிள்ளையவர்களுடைய தொல்காப்பியப் பதிப்புக்கு, திருநெல்வேலிக் கவிராயர் வீட்டு ஓலைச் சுவடியைப் பார்த்துக் காகிதத்தில் பிரதியெழுதிக் கொண்டிருந்தபொழுதுதான் முதலியாரவர்கள் இவரை முதன் முதலில் சந்தித்தார்கள். இவரோடு பலர் அப்பொழுது பேசிக்கொண்டிருப்பார்கள். முதலியாரவர்களும இவர்களோடு சேர்ந்து பிள்ளையின் சுவையுடைய பேச்சைக் கேட்டு அனுபவித்துவந்தார்கள். இப்படியிருக்கையில் ஒருநாள் பழுத்த சைவமே உருவெடுத்தாற்போன்ற சைவக் கவிராயர் ஒருவர் பிள்ளையவர்களோடு பேசிக் கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் அங்கிருந்தோருள் ஒருவர், அவரை ஒரு பாட்டுக்குப் பொருள் சொல்லும்படி கேட்க, அவர் தாம் அப்பாட்டின் பொருள் அறியாமையை வெளியிடாமல், பொருள் கூறும் பாவனை புரிந்தார். இதை உடனிருந்து பார்த்த முதலியாரவர்கள் கவிராயர் போனபின் அவர் காட்டிய பாவனையை, "இருந்ததனை இருந்தபடி காட்டினார்"* என்று கூறினார்கள். இதைக் கேட்ட அழகிய சொக்கநாத பிள்ளை 'மிகவும் பொருத்தமாயிருக்கிறது' என்று வியந்து முதலியாரவர்களிடம் அளவளாவ ஆரம்பித்தார். முதலியாரவர்கள் அழகிய சொக்கநாத பிள்ளையின் முதற்பழக்கம் பெற்றது இப்படித்தான்.

---

* திருவிளையாடற் புராணம் "கல்லாலின்" என்ற பாட்டில் வருவது.

இவ்வழகிய சொக்கநாத பிள்ளை, அப்பொழுது திருநெல்வேலி முனிசிப் கோர்ட்டில் எழுத்தாளர் வேலையில் மாதம் பத்து ரூபாய்ச் சம்பளத்தில் அமர்ந்திருந்தார். தம் வருமானம 'மா சம்பத்து' என்று சிலேடைப் பொருள் படக் கூறும் வழக்கமுடையவர்; வறுமையின் கொடுமையை நன்கு அனுபவித்தார். மேலும் வீட்டிலோ மனைவி தீராத நோயுற்று நடமாட்டமில்லாமல் படுக்கையில் நெடுங்காலம் கிடந்தார். இவ்வளவு துன்பங்களுக்கும் இடையில் இவர் தம்மிடம வரும் எவர்க்கும இன்முகம் காட்டி விநோதமாகப் பேசி இன்பமூட்டும இயல்பினராயிருந்தது இவரது மன உறுதியை நன்கு காட்டுகின்றது. இந்த அழகிய சொக்கநாத பிள்ளை சவுக்கைப் புலவர்களுக்குள்ளே முதன்மையானவர். இவரும், வள்ளல் முத்துசாமி பிள்ளையும், கம்பரும சடையப்பரும் போல ஒற்றுமை மிக்க நண்பர்களாயிருந்து வந்திருக்கிறார்கள். இவர் முத்துசாமியா பிள்ளை பேரில் காதற் பிரபந்தமும், சிங்காரக் கவிதா மஞ்சரியும், இயற்றியிருக்கிறார். முத்துசாமி பிள்ளை தம்மீது இவர் பாடிய நூல்களுக்குப் பெரும் பொருளுதவியதன்றி, அவருக்குப் பணம் வேண்டும்போதெல்லாம உதவி செய்து வந்தார். இவர்களிருவரையும் ஒருவராகவே கொண்டு சவுக்கைப் புலவர்கள் பாடிய பாட்டுக்கள் அநேகம் உண்டு.

பூமகளும் நாமகளும் மாதரெனப் புகல்குறைவு போத
லன்றி
மாமிமரு மகளாத லாற்பகைஞ ரேனும்வசையு மாற
வேண்டித்
தாமுயரா டவராய்நன் னேயரா உலகின்முத்து சாமி
யென்னும்
தோமில்அழ கியசோக்க நாதனென்னும் பெயர்பெற்றுத்
தோன்றி ஞரால்.

என்ற நமது முதலியாரவர்கள் நிருப கவியே இதற்குச் சான்ருகும். இவர் எழுதிய நூல்கள் அநேகம். அவைகளில் காந்திமதியம்மை பிள்ளைத் தமிழ், முத்துசாமிப் பிள்ளை காதல், சிங்கார கவிதா மஞ்சரி, பதசாகித்யங்கள் குறிப்பிடத் தக்கவை.* இவருடன் முதலியாரவர்கள் நெருங்கிப் பழகி அதன் மூலமாய்ச் சவுக்கைப் புலவர்கள் நட்புரிமை பெற்று, கவி பாடும் திறம் பெற்ருர்கள் என்று முன்னமேயே சொல்லப் பட்டது. முதலியாரவர்கள் பாடிய கவிகளை, இவர் திருத்திக் கொடுக்கிற முறையைப்பற்றி, முதலியாரவர்களே சொல்வது வருமாறு. "யான் பாடும் பாட்டுக்களை எனக்குத் தெரிந்த கவிஞர்களிடத்துப் படித்துக் காட்டி, அவர்களால் சீர்திருத்தம் செய்யப் பெறுதல் என் வழக்கம். அப்படி சீர்திருத்தியோருட் பெரும் பாலாருடைய சீர்திருத்தத்தினுல் என் பாட்டுக்கள் தம் சொரூபம் மாறி அவர்கள் பாட்டுக்கள் என்று சொல்லும்படி ஆகிவிடுவது சகசம். அதனுல் கவிஞர்கள் மாற்றுதலின்றி யேற்றுக்கொள்ளும்படி பாடும் திறமையை யாம் என்றேனும் அடைவோமோ என்ற ஏக்கம் எனக்கு உண்டாகியிருந்ததுண்டு. என் பாட்டுக்கள் என் பாட்டுக்களாகவே இருந்து சிறந்திடும் வண்ணம் திருத்தஞ் செய்து மேற்கூறிய ஏக்கத்தை நீக்கி ஊக்கத்தை ஊட்டியவருள் இவரே முதல்வராவர்."

## (ii) மு. ரா. அருணசலக் கவிராயர்,

இவர் முன் கூறிய சவுக்கைப் புலவர்களில் ஒருவர். 12—2—39-ல் தான் இறைவன் திருவடி சேர்ந்தார். இவர் சிவகாசித் தலபுராணத்தையும் சிவகாசி யந்தாதி முதலிய பிரபந்தங்களையும், திருக்குறள் வசனம் என்ற அருமையான

* இவர் பாடிய பாட்டுக்களிலெல்லாம் சிங்காரசசுவை மிகுந்திருக்கும்.

நூலையும் இயற்றியுள்ளார். முதலியாரவர்கள் கம்ப ராமா யணத்திலே மிகவும் இனியவையாகவுள்ள கவிகளைத் தேர்ந் தெடுக்கும் காலத்திலே முதலைந்து காண்டங்களையும் உட னிருந்து படித்து உதவியவர். முதலியாரவர்களின் முதன் மனைவியாரின் சீமந்த முகூர்த்த அழைப்புப் பத்திரிகை பெற்றபோது இவர்,

"சீமந்தம் உனக்கெனக்கண் டுவகைமிக எமைமறந்த
செயலி னாலே
நாமந்த முகூர்த்தம் வர விலை."

என்று அழகிய நிருபமொன்று எழுதி முதலியாரவர்களுக்கு அனுப்பிவைத்தார்கள். அந்தப் பாட்டினை வியந்து அதற்குப் பதில் நிருபமாக,

"சீமந்தம் உனக்கெனக்கண் டுவகைமிக எமைமறந்த
செயலி னாலே
நாமந்த முகூர்த்தம்வர விலையென்றாய் கற்பனையே;
ஞாலக் கேட்டம்
போமென்றாய்த் தவன்இருப்ப நீயுறின்மீண் டும்கோடும்
புலியென் றன்னி
மாமன்று ளாடிதடுத் தமையின்வர வில்லைஇது
வாய்மை யாமால்"

என்று எழுதியிருக்கிறார்கள். இவ்வாறாகப் புலவர்களிடம் இவர்கள் நேரிலோ அன்றிக் கடித மூலமாகவோ அளவளாவ நேர்ந்த பொழுதெல்லாம், தமிழ்க் கவி யியற்றித் தமிழ் மாணவர்களுக்கு இன்பூட்டுகிறார்கள்.

### (iii) பூண்டி அரங்கநாத முதலியார்.

சென்னை இராசாங்கக் கலாசாலையில் கணிதப் பேராசிரியராக (Professor of Mathematics) இருந்து தமிழர்களுக்குப் பெரும் புகழை ஈட்டித் தந்த பூண்டி அரங்கநாத முதலியார் பெருமையை உலகறியும். அவர் அக்காலத்திலுள்ள பட்டதாரிகளின் அரசர் (Prince of graduates) என்று புகழ் பெற்றவர். அவரது அறிவுத்திறமையை வியந்தோதுவார் எல்லாரும் அவரை "அறிவுப் பெரும் பூதம்" (Intellectual Giant) என்றே குறிப்பாராயினர். கல்வியறிவில் மேம்பட்ட இந்த இலக்கிய நண்பரைப்பற்றி முதலியாரவர்கள் கூறியுள்ள விவரத்தைக் கீழே தருகிறேன். சென்னையில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் கம்பராமாயணத்தில் ஒரு பகுதியைப்பற்றி அரங்கநாத முதலியார் பேசியபொழுதுதான் முதலியாரவர்கள் இவர்களை முதன் முதல் பார்த்தது. கவிச் சக்கரவர்த்தி கம்பரின் காவியத்தை அறிந்து அறிந்து அனுபவித்து, அரங்கநாத முதலியார் செய்த பிரசங்கம் கேட்டார்ப் பிணிக்கும் தகையதாய் இருந்தது. மாரீசன் வதைப் படலத்தில் வருகின்ற,

> தேர்தந்த அல்குற் சீதை தேவர்தம் உலகின் இம்பர்
> வார்தந்த கொங்கை யார்தம் வயிறுதந் தாளு மல்லள்
> தார்தந்த கமலத் தாளைத் தருக்கினர் கடையச் சங்க
> நீர்தந்த(து) அதனை வெல்வான் நிலந்தந்து நிரம்பிற்
> றன்றே.

என்ற பாட்டை எடுத்துக்கொண்டு அரங்கநாத முதலியார் அன்று செய்த விரிவுரை இன்னும் தம் காதில் ஒலித்துக் கொண்டிருப்பதாக முதலியாரவர்கள் சொல்வது வழக்கம்.

அன்று முதல் முதலியாரவர்கட்கு இவரிடம் ஒரு பெரிய அன்பு ஏற்பட்டது. ஆனால், கால்நடை மருத்துவ இலாக்காவில் உள்ள ஒரு சிறிய உத்தியோகஸ்தர் இவர் போன்ற ஒரு பேராசிரியரை அணுகவும் அளவளாவிப் பேசவும் ஏற்ற காலம் பல வருடஞ் சென்றபின்பே வாய்த்தது. இந்தக் காலத்துக்குமுன் முதலியாரவர்கள், ஆங்கிலக் கவி யான மில்ட்டன் எழுதிய சுவர்க்க நீக்க முதற் காண்டத்தை விருத்தப்பாவில் எழுதி முடித்திருந்தார்கள்; அந்த நூலை வெளியிடுமுன், அரங்கநாத முதலியாரவர்களிடம், ஒரு, முக வுரை பெறவேண்டும் என்று விரும்பினார்கள்; ஆனால் அரங்க நாத முதலியாரைக் காணும் சமயம் கிடைப்பதரிதாயிருந்தது. ஒரு நாள் அவர் பரீக்ஷை விடைப் பத்திரங்களைத் திருத்திக் கொண்டிருந்த பொழுது நமது முதலியாரவர்கள் அவரைக் காணும் பாக்கியம் பெற்றுத் தாம் பாடியுள்ள நூலுக்கு முகவுரை விரும்பி வந்திருப்பதைத் தெரிவித்தார்கள். அரங்கநாத முதலியார், நமது முதலியாரவர்கள் மில்ட்டனை மொழிபெயர்க்க எண்ணிய துணிவினை வியந்துவிட்டு, அவர் கள் வாய்ப்பான பாகம என்று கருதுகின்ற ஒரு பகுதியை வாசித்துக் காட்டச் சொன்னார்கள். முதலியாரவர்கள், நூலுக்கு முன்னுரையாக அமைத்த தற்சிறப்புப் பாயிரத் தையே வாசித்துக் காட்ட அந்தப் பாக்களில்,

தேற்றி யென்னையுங் கலைபயிற்றியநன்றி சிந்தித்(து)
ஏற்ற அர்ப்பணம் அவற்(கு) *என இதைச்சமர்ப்
பித்தேன்

* அவற்கு— என தந்தைக்கு.

"புதல்வன் தந்தையை உவப்பிக்கும் நிமித்தத்துப்
புகன்ற(து)
இதுவே னும்உண்மை மனக்கோள்வ ரேனின்உயர்
புலவர்
குதலை வாய்மகார் ஈன்றவர் மகிழ்வுறக் குழறும்
அதனிற் குற்றம்ஆ யாமைபோல் இதனினும் ஆயார்"

என்ற பாட்டைக் கேட்டு மகிழ்ந்து, திரும்பவும் அந்தப் பாட்டையே வாசித்துக் காட்ட வேண்டினார்கள். தொன்று தொட்டுப் புலவர்கள் கையாளுகின்ற ஒரு முறையை விட்டு விட்டுப் பழையதொரு கருத்தைப் புதியதொரு முறையில் அமைத்துப் பாடியுள்ளதை வியந்து மகிழ்ந்தார்கள். பின்பு நூலின் சில பகுதிகளைக் குறிப்பிட்டு, அவைகளுக்குரிய மொழி பெயர்ப்புக்களை வாசிக்கச் செய்து கேட்டார்கள். அவைகளை முதனூலுக்குச் சற்றும் மாறுபடா வகையில், தமிழில் விருத்தப்பாவிலே மொழிபெயர்த்துள்ள, நம் ஆசிரியர் திறனை மெச்சி, சில நாட்களில் முகவுரை ஒன்று எழுதித் தருவதாக வாக்களித்தார்கள். ஆனால் வேலை மிகுதி யால், ஏற்ற பணியை முடிக்க அரங்கநாத முதலியாருக்கு அவகாசம் வாய்க்கவில்லை. முதலியாரவர்கள், இரண்டு மூன்று முறை கடிதமூலம் ஞாபகமூட்டினார்கள். ஒரு தடவை நேரில் பார்க்கச் சென்றும், பார்த்துப் பேசுவதற்குக் கூட அவகாசமில்லாமல் திரும்பிவிட்டார்கள். மறுமுறை முதலியாரவர்கள் அரங்கநாத முதலியாரைப் பார்ப்ப தற்கு முன், அந்தோ! அவர் காலன் வாய்ப்பட்டுவிட்டார். முதலியாரவர்களது கவி பாடுந் திறனையும், மொழி பெயர்ப்பின் மாண்பையும் உலகறியச் செய்யும் ஒரு அரிய சந்தர்ப்பத்தை அரங்கநாத முதலியார் இழந்தார்; ஆனால் அவரது முன்னுரை யின்றியே, சுவர்க்க நீக்க மொழி பெயர்ப்பு, டாக்டர் G. U. போப் போன்ற தமிழ்ப்

பேராறிஞரின் கவனத்தைக் கவரும் பெற்றி வாய்ந்துளது என்பது நாம் இன்று கண்டறிந்த உண்மை.

## (iv) Professor: P. சுந்தரம் பிள்ளை.

சுவர்க்க நீக்க மொழி பெயர்ப்புக்கு, முன்னுரை வேண்டி, ஆங்கிலம் தெரிந்த தமிழ்ப் புலவர்களைத் தேடித் திரிந்தபொழுதுதான், நமது முதலியாரவர்களுக்குத் திருவனந்தபுரம், மகாராஜா கல்லூரியில், தத்துவ சாஸ்திரப் பேராசிரியராயிருந்த (Professor of Philosophy) P. சுந்தரம் பிள்ளையவர்களின் பழக்கம் ஏற்பட்டது. இந்தச் சுந்தரம் பிள்ளையைத் தமக்கு நேரில் தெரியாததால், அப் பழக்கம் தம நண்பர் அ. மாதவையர் மூலம் முதலில் கடிதப் போக்கு வரவினால் உண்டாகியது. சுந்தரம் பிள்ளையும், சுவர்க்கநீக்க மொழிபெயர்ப்பைப் படித்துவிட்டு, அதைப் பற்றித்தான் சென்னைக் கிறிஸ்தவ கலாசாலைப் பத்திரிகையில் (Christian College Magazine) ஒரு விமரிசனம் எழுதுவதாக வாக்களித்திருந்தார். ஒரு வருஷ கால தாமதம் ஆகியும் அவர்களுக்கு எழுத அவகாசம் கிடைக்கவில்லை. பிள்ளையவர்கள் தாம் ஏற்ற இச் சிறு பணியை விரைந்து முடித்துத்தர ஒய்வு இன்மை குறித்து முதலியாரவர்களுக்கு எழுதிய கடிதத்தில்* அவர் அந்த நூலை எவ்விதம் மதித்திருந்தா ரென்பதை அறிகின்றோம்.

---

*Extract from the Letter of M. R. Ry. P. Sundaram Pillai Avl. M. A., M. R. A S., F. R. H. S.

I owe Mr. V. P. Subramania Mudaliar an apology for not having been able to review his able translation of Milton's Paradise Lost into Tamil verse of the Virutham metre, as I have been long promising that pleasure without having time to do it. I regard it a worthy product worthy of Mr. Mudaliar's known scholarship and of the subject he has taken up for translation. The ideas of the great English Epic Poet is well caught up and reflected in chaste Tamil verse. There can be no question that the endeavours made by Mr. Mudaliar to extend the scope of Tamil literature deserve the highest encomium & every encouragement.

ஆனால் சில நாட்களில், சுந்தரம் பிள்ளையவர்களை நமது முதலியாரவர்கள் குற்றாலத்தில் சந்திக்க ஒரு அரிய சந்தர்ப்பம் வாய்த்தது. நேரில பார்ப்பதற்கு முன்பு, அவர்களுக்குத் தாம் பாடிய நெல்லைச் சிலேடை வெண்பாவின் பிரதி யொன்றை முதலியாரவர்கள் அனுப்பியிருந்தார்கள். குற்றாலத்தில் சண்பகாடவி அருவிக்கரையில், அநேக பெரிய உத்தியோகஸ்தர்கள் சூழ்ந்திருந்தபோது சுந்தரம் பிள்ளையவர்களை முதலியாரவர்கள் நேரில் சென்று கண்டார்கள். பிள்ளையவர்கள் முதலியாரவர்களை அன்புடன் வரவேற்று முகமன் கூறி, அங்குள்ளவர்களுக்கு முதலியாரவர்களை அறிமுகப்படுத்தும் முறையில், "இவர்கள் தற்காலம் காணும் ஆங்கிலம் படித்த ஏனைய தமிழ்ப் புலவர்களைப்போலவா ரல்லர். சிறந்த தனித் தமிழ்ப் பண்டிதருள் ஒருவ ரென்னும்படி ஆங்கிலம் படித்தும், தமிழன்பும் பாண்டித்யமும் நிறைந்த ஒரு புலவர்" என்று கூறினார்கள். பின்னர் அங்குள்ள நண்பர்களும் பிள்ளையவர்களும் நெல்லைச் சிலேடை வெண்பாவிலிருந்து ஒரு பாட்டுச் சொல்லும்படி வேண்ட, அதற்கிணங்கி, முதலியாரவர்கள்,

கோலமனை கொண்கனையக் கொண்கனில்லை முன்னிலையில்
நீலவண னேர்வையேனு நெல்லையே—நாலிரண்டாத்
தொக்கவிருந் தோடிரண்டார் தூமுகமோவ் வொன்றனினும்
மிக்கவிருந் தோடிரண்டார் வீடு.*

---

* கோல (-அழகிய) மனை(வி) கொணகனை (புருஷனை). இல்லை—மனைவியை. முன்னிலையில்—நேரில். நீல வ(ண்)ணன் (—விட்டுணு) நேர்வை (ஒப்பாய்).

முன் இலையில் நீ லவணம் நேர்வை-முதலில் இலையில் நீ உப்பை முறையே படைப்பாயாக. சைவர்கள் பந்தியில் முதலில் உப்புப் படைக்கும் வழக்கம் இங்கே கூறப்பட்டது.

தொக்க (-கூடிய) இரும் (-பெரிய) தோள் இரண்டார், மிக்கு (-மிகுந்து) அவிரும் (-பிரகாசிக்கும்) தோடு இரண்டார்.

என்ற செய்யுளைப் படித்துக் காட்டினார்கள். கூடியிருந்தோர் எல்லோரும், பாட்டையும் பாட்டிலமைந்துள்ள சிலேடை மடக்குகளின் பொருளையும் பிள்ளையவர்கள் அறிவிக்க அறிந்து அனுபவித்தார்கள். பிள்ளையவர்கள் அந்த உத்தியோகஸ்தர் கூட்டத்திலே மறுநாள் சுவர்க்கநீக்க மொழி பெயர்ப்பை அரங்கேற்றும்படி கேட்டுக்கொண்டார்கள். இது முதலியாரவர்களுக்குக் கஷ்டமானதொரு காரியமாய் முடிந்துவிட்டது. இதற்காகச் சிறிதும் சிரமம் கருதாது, ஆங்கிலம் படித்த மாணவர்களிடத்திலுள்ள, அந்நூலின் மூலப் பிரதிகள் சிலவற்றைச் சேர்த்துக்கொண்டு, முதலியாரவர்கள் மறுநாள் அவ் உத்தியோகஸ்தர் குழுவிடைச் சென்றார்கள். அங்குள்ள ஒவ்வொருவர் கையிலும், ஒவ்வொரு ஆங்கிலப் பிரதியைக் கொடுத்துவிட்டு அதில் சில பாகங்களை முதலில் பொருள் விளங்கும்படி வாசித்து விட்டுப், பின்னர்த் தாமியற்றிய மொழிபெயர்ப்பிலுள்ள விருத்தப் பாக்களையும் வாசித்துக் காண்பித்தார்கள். இவ்வாறு முதலியாரவர்கள் அனுஷ்டித்த முறையினால் அங்கே கூடியிருந்த எல்லோரும், சுவர்க்கநீக்க மொழி பெயர்ப்பின் பெருமையினை அறிந்து அனுபவிக்க முடிந்தது. இந் நூலை வாசிக்க விரும்புகின்ற ஆங்கிலங் கற்ற ஒவ்வொருவரும் அனுஷ்டிக்கவேண்டிய சரியான முறை இதுவேயாகும். தமிழ்மட்டுங் கற்றோர், சுவர்க்க நீக்க முதற் காண்ட வசனத்தைப் படித்து அவ்வவ் வசனப் பகுதிக்குரிய விருத்தங்களைப் படித்தல் நன்று. இந் நூலின் சிறப்புப் பாயிரத்தில், "புதல்வன் தந்தை" யென்ற பாட்டு, பூண்டி அரங்கநாத முதலியாரை மகிழ்வித்ததுபோலச், சுந்தரம் பிள்ளையவர்களை,

கருத்தெலாம்ஒரு வான்கவி கருத்துக்கள் கருத்தை
விரித்த சொல்லெலாம் ஒருமுனி வியன்சொற்க ளாக
உரித்தின் எற்கிதில் கொளத்தக்க(து) உண்டென்றும்,
உதனில்
தரித்த கோதுகள் பொறுக்கென்றும் சாற்றல்பே தைமையே.

என்ற செய்யுளே பெரிதும் மகிழ்வித்தது.

இப்படி, குற்றாலத்தில் சுந்தரம் பிள்ளையவர்களைச் சந்தித்துப் பேசிப் பழகியபின், மறுமுறை, கிறிஸ்துமஸ் விடு முறையில், ரெவின்யூ போர்டாபீஸ் செக்ரெட்டரியாயிருந்த, ராஜரத்தின முதலியாரவர்கள் வீட்டில் சந்திக்க நேர்ந்தது. அப்போது அவரைச் சுற்றி, அறிஞர் பலர் கூடிக்கொண் டிருந்தார்கள். அப்போது ராஜரத்தின முதலியார் பிள்ளை யவர்களைப் பார்த்து, "இராமாயணக் கதையைப்பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று வினவினார்கள். அதற்குப் பிள்ளையவர்கள், "நான் சொல்லுகிற விஷயம் மத சம்பந்தமுடையதல்ல. ராம பக்தியிலும் விஷ்ணு பக்தி யிலும் நான் யாருக்கும் குறைந்தவனல்லன். ஆனால் நான் இப்போது சொல்லப்போவது வேறு விதமாகத் தோன்றும். இது பாரதம், ராமாயணம் முதலிய கதைகளைச் சரித்திர சம்பந்தமாகச் செய்த ஆராய்ச்சியில் கண்ட உண்மை," என்ற பீடிகையோடு இராமாயணத்தில் உள்ளுறையாய் அமைந்து கிடக்கும் தென்னிந்திய ஜாதி வரலாற்றை* விளக்கினார்கள். அப்படி அவர்கள் விளக்கிய கருத்துக்கள் அங்கிருந்த அன்பர்களிடையே ஒரு பெரிய உணர்ச்சியை உண்டுபண்ணியது. ஆனால் பிள்ளையவர்கள் இக் கருத்துக் களைக் கல்வியறிவுள்ள நண்பர்களிடம் சிறிது சிறிதாக

* இக்கருத்துக்களை "இராமாயணத்தின் உள்ளுறைபொருள் தென்னிந்திய ஜாதி வரலாறு" என்ற தலைப்பின் கீழ் நம் முதலியார் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். இதன் விரிவான விளக்கம் பின்வரும்.

வெளியிட்டு, அவர்கள் அக் கருத்துக்களை எவ்விதம் ஏற்றுக் கொள்கிறார்கள் என்று தெரிந்து பின்னர் அக் கொள்கைகளைப் பரப்புவதற்குக் கங்கணம் கட்டிக்கொண்டு கிளம்பப் போவதாகச் சொன்னார்கள். ஆனால், அவர்கள் நினைத்தபடி நிறைவேறுமுன் இறைவனடி சேர்ந்தார்கள். அவர்கள் ஆராய்ந்து சொன்ன அரிய கருத்துக்கள் அவர்களாலாவது அவர்களுடைய நண்பர்களாலாவது அச்சிட்டு வெளியிடப் பெறவில்லை. இந்த உண்மைகளை உலகறியச் செய்ய வேண்டுமென்ற அவா நம் முதலியாரவர்களுக்குப் பல நாட்களாக இருந்து வந்தது. முதலியாரவர்கள் ஒருமுறை இக் கருத்துக்களை, சேலம், "தக்ஷிணதீபம்" பத்திராதிபரிடம் சொல்ல, அவர், அக் கருத்துக்களை எழுதியனுப்புமபடி முதலியாரவர்களை வேண்டிக்கொண்டார். அவர் வேண்டுகோளுக் கிணங்கி, முதலியாரவர்கள், "சுரோதா" என்ற புனைபெயரோடு, இராமாயணத்தின் உள்ளுறைபொருள் என்ற தலைப்பின் கீழ்ச் சுந்தரம பிள்ளை யவர்களிடமிருந்து கேட்டதை அப்படியே எழுதியனுப்பினார்கள்.

இக் கருத்துக்களைப் பின்னர் Malabar Quarterly யில் திரு. பொன்னம்பலம் பிள்ளையவர்கள் வெளியிட்டதும அதற்கு, ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர் போன்ற அறிவாளிகளின் எதிர்ப்பு ஏற்பட்டதும்—அந்த மறுப்புக்களின் மேல் பலர் குறிப்புக்கள் எழுதியதும் ஒரு பெரிய கதை. இது சமபந்தமான கட்டுரைகளெல்லாம் தொகுக்கப்பட்டு Tamilian Antiquary-ல் விரிவாக வெளியிடப்பட்டிருக்கின்றன. சுந்தரம பிள்ளையவர்கள் பொதுவாகத் தமிழ் நாட்டிற்கும், சிறப்பாகத் தமிழ் மக்களுக்கும், செய்ய நினைத்த அருந் தொண்டைச் செய்து முடித்தவர்கள் நமது முதலியாரவர்களே யென்று கூறுதல் மிகையாகாது.

கிறிஸ்தவ மதக் கர்த்தா கிறிஸ்துநாத ராஞலும், அவர் இறந்தபோடு அம்மதம் இறநதுபோகாமல் உலகமெங்கும் பரவச்செய்த மகான் செயின்றுபாலா யிருந்ததுபோல, இராமாயண உள்ளுறை பொருளிற் குறித்த கொள்கைகளுக்குக் கர்த்தா சுந்தரம் பிள்ளையவர்கள் ஆஞலும, அவர்களோடு அக் கொள்கைகள் இறநதுவிடாமல், தமிழக முழுவதும் பரவச்செய்தவர் நம் முதலியாரவர்களே யென்பது சொல்லவேண்டியதில்லை.

(v.) அ. மாதவையர்.

பெருங்குளம், அ. மாதவையர் நமது முதலியாரவர்களோடு பல வருட காலம் நெருங்கிப் பழகிய வித்தியா நண்பர். இவர் கலால் இலாகாவில உத்தியோகம பெற்றுப் பல வருடம் உழைத்தவர். நல்ல தமிழ்ப் புலமையும் ஆங்கில நூற்பயிற்சியும் வாய்ந்தவர். தமிழ் வசன கர்த்தாக்களில் முக்கியமானவராக இன்றும் கருதப்படுகின்ருர் தெள்ளிய இனிய நடையில் வசனங்கள் எழுதி, தமிழ் மொழி வளம்பெறும்படி செய்த பெருமை இவருடையதாகும். இவர் எழுதிய நூல்கள் பல. தீவிர சமூக சீர்திருத்தவாதியான இவர், சமூகச் சீர்திருததத்திற்குரிய நூல்கள் பல வெளியிட்டிருக்கிருர். இவருக்கும நம் முதலியாரவர்களுக்கும் முதல் பரிச்சயம் ஆன முறையை முதலியாரவர்களே கூறுவதாவது: "எனது கலைச் செல்வ நண்பருள் ஒருவரான A. Y. நாராயணையரை நான் பல வருடங்களாக அறிவேன். அவர்களைக் கண்டு பேசுவதற்குத் திருவல்லிக்கேணியில அவர் வாழ்ந்து வந்த வீட்டிற்கு நான் அடிக்கடி போவதுண்டு. அப்படிப் போயிருநத சமயத்தில் மாதவையர் தம் தமையஞரான A. Y. நாராயணையரைப் பார்க்க வந்திருந்தார். தமையஞர் என்னை நோக்கி, "நீ விவேகசிநதாமணிப் பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்துவருகின்ருயே; அதில் மற்றவர்கள்

எழுதும் விஷயங்களையும் படித்திருப்பாயே, அவைகளைப் பற்றிய உன் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டார். நான் அதில் நல்ல கட்டுரைகள் வருகின்றன; அவைகளுள் சாவித்திரி சரிதம்* என்பது என்னை மகிழ்வித்து வருகின்றது என்றேன். அப்போது அவர் அதை எழுதுவது இவன்தான். இவன் என் தம்பி என்றார். எனவே, நான் அவர் கட்டுரைகளைப் பற்றி விவரமான மதிப்புரை கூறி அவரோடு அளவளாவினேன்." அதுமுதலாக, இவர்களிருவரும் இடையிடையே சந்தித்துக் கலந்து பேசியும், ஆங்கில நூல்கள் தமிழ் நூல்களை உடனிருந்து படித்தும் கடிதப் போக்கு வரவு நிகழ்த்தியும் வந்தார்கள். ஒருவர் இயற்றிய நூல்களை மற்றொருவர் பார்வையிட்டுத் திருத்தமுறச் செய்தும் வந்தார்கள். நமது முதலியாரவர்கள் ஆங்கிலக் கவி மில்டனியற்றிய பாரடைஸ் Paradise Lost என்னும் காவியத்தின் முதற்காண்ட மொழிபெயர்ப்பைத் தமிழில் விருத்தப்பாவில 'சுவர்க்க நீக்கம்' எனப் பதிப்பித்து வரும் காலை இடையே பம்பாய் மிருக வைத்திய கலாசாலையில் பயிற்சி பெறும்படி துரைத்தனத்தாரால் அனுப்பப்பட்டார்கள். அப்போது நமமாதவையர் அந்தப் பதிப்பு வேலையை முதலியாரவர்கள் வேண்டுகோளுக் கிணங்கி, மேற்கொண்டு முற்றுப்பெறச் செய்தார். அம்மட்டோடு அமையாமல் அந்த நூலைத் திருவனந்தபுரம் பேராசிரியர் சுந்தரம் பிள்ளைக்கு அனுப்பி, நல்லபிப்பிராயம் பெறுதல் முதலாக, அந் நூல் பிரபலமடைதற்கு வேண்டும் பிற முயற்சிகளும் செய்தார். அச்சமயத்தில் முதலியாரவர்கள் இவருக்கு,

---

* இந்தச் சாவித்திரி சரிதம்தான் பின்னர் சில வேறுபாடுகளுடன் பத்மாவதி சரித்திரம் என்னும் நாவலாக வெளிவந்தது.

இன்சுவர்க்க நீக்கத்துக்(கு) யான்பெற்ற தாயாக
மன்செவிலித் தாயானாய் மாதவா!—முன்சோலஞ்நூற்(கு)
யான்கொண்ட அன்புக் கிரட்டிபூண் டாதரிப்பாய்
மீன்கொண்ட நீர்ப்புவியின் மேல.

என்றொரு வெண்பா எழுதி யனுப்பினார்கள்.

உடுமலைப்பேட்டையில் நிகழ்ந்த ஒரு பூகம்பத்தைப் பற்றித் தம் நண்பரான மாதவையருக்குத் தாம் அறிவித்த விதத்தைப் பற்றி நமது முதலியாரவர்கள் கூறுகின்றது வருமாறு: "மிருக வைத்திய இலாகா உத்தியோகஸ்தனாக, நான் கோயமுத்தூர் ஜில்லா உடுமலைப்பேட்டைத் தாலூகாவில் வேலை பார்த்துக்கொண் டிருந்தபொழுது அங்கே ஒரு பெருத்த பூமி அதிர்ச்சி நிகழ்ந்தது. அது பெரிய ரயில் வண்டித் தொடர் வேகமாக இருப்புப் பாலத்தின் மீது செல்லும்போது உண்டாகும் ஓசைபோன்ற ஓசையோடு நிகழ்ந்தது. அந்த அதிர்ச்சி இந்தியாவெங்கும் பரவியதாயினும் உடுமலைப்பேட்டைத் தாலூகாவிலும் அதையடுத்துள்ள இடங்களிலுமே கட்டடங்களை இடித்து வீழ்த்தி உயிர்ச் சேதம் விளைவித்தது. அன்றி அத் தாலூகாவில் முதற் பேரதிர்ச்சிக்குப் பின்பு சிற்றதிர்ச்சிகள் பல, சில மாதம் வரை உண்டாகிக்கொண் டிருந்தன. அக் காலம் குளிர் மிகுந்த பனிக்காலமாயிருந்தும் ஜனங்கள் கட்டடங்களிலே தங்க அஞ்சி, இரவும் பகலும் வெளிப்புறங்களில் வாழ்ந்து வந்தார்கள். பிள்ளைப் பேறுகள்கூட வெளிப்புறங்களில் திரை மறைவிலே நிகழ்ந்தன. அந்தப் பூமி அதிர்ச்சிக் காலத்தில் இவருக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் யான் எழுதிய பாட்டுப் பின்வருவது:

"யானை முதுகிருப்பார், யானைமதங் கொண்டுரறி
மேனி குலுக்க, அஞ்சி மெய்ந் நடுங்கல்—மானப்பூ
கம்பத்தால் இங்குள்ளார் கம்பித் துறுதுன்பம்
கம்பர்க்கே சொல்லரிது காண்" என்பது.

(உரறி—முழங்கி, மான—போல, கம்பித்து—நடுங்கி)

முதலியாரவர்களுக்கும், மாதவையரவர்களுக்கும் நடநத ரசமான சம்பாஷணை ஒன்று, இருவரும் எவவளவு தூரம், கம்பராமாயண ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதை விளக்கிக் காட்டும. இருவரும் உடனிருநது படித்துகொண்டிருந்த ஒரு சமயத்தில, முதலியாரவர்கள், "தமிழ் இலக்கியங்களுள் கம்பராமாயண மொன்றிலேதான் மில்டனுடைய காவியங்களிலும் ஷேக்ஸ்பியருடைய நாடகஙகளிலும காணப்படும் பலவகை நயமான பகுதிகள் போன்ற பகுதிகள் மிகுதியாகக் காணப்படுகின்றன." என்று கூற, அதற்குப் பதிலாக மாதவையர், "அதுவே என் அபிப்பிராயமும. ஆனால் பிரசங்க தோரணையான பகுதிகள் (Oratorical passages) கமபராமாயணத்தில் இலலை," என்று கூறினர். முதலியாரவர்கள், அவர் கூறியதை மறுத்து, "இல்லை, சில பகுதிகள் இருக்கின்றன. ஒரு பகுதியை இபபோது காட்டுகிறேன்" என்று கூறிவிட்டு, உடனே கம்பராமாயணத்தின் கரன் வதைப் படலத்தில் "வச்சையாம்" என்ற பாட்டு முதலாக "ஆர வாழ்க்கை" என்ற பாட்டு முடிவாகவுள்ள பகுதியைப் படித்துக் காட்டியபோது, அவர் மிக்க வியப்பும் பெரு மகிழ்ச்சியும் அடைந்தார்.

இவ்வாறு இவர் பலமுறைகளில் நமது முதலியாரவர்களோடு பழகி, அவர்களுடைய இலச்கிய நண்பர்களுள்ளே சிறநதவராயும், அவர்களோடு நெருங்கிய தொடர்புடையவராயும இருந்து வந்திருக்கிறார். இவர், நம் முதலியாரவர்களிடம் தோழமை கொண்டிருநதாலும் இவர் தாம் எழுதிய விஜயமார்த்தாண்டம் என்னும் நூலை இவர்களுக்கே உரிமையாக்கித் தமது அன்பை வெளியிட்டிருக்கிறார்.* இவர்

---

* விஜயமார்த்தாண்டத்தின்—உரிமையுரை

உயர் தொண்டை மண்டலத்(து) ஊற்றுக் காட்டுக்
கோட்டத்து நீவளூர் நாட்டுக் கண் ஆற்றூர்

ஜனசாரச் சீர்திருத்தத்தில் தீவிரமான பற்றுடையவரா யிருந்து, இயன்றவரை அத் திருத்தங்களை நடை முறையில் அனுட்டித்தவர். காலஞ் சென்ற கவி சுப்பிரமணிய பாரதி யாரும் இவரும எல்லாச சீர்திருத்தங்களிலும ஈடுபட்டார் கள் ஆனாலும், அவர் அரசியல சீர்திருத்தத்திற்கும், இவர் ஜனசாரச் சீர்திருத்தத்திற்கும, தம ஆயுளை அர்ப்பணம பண்ணியவர்கள். சென்ற தலைமுறைக் காலத்தில சர்வஜன

---

நத்தத்து வாழ்வு நணணுமாப் பூதியார
கோத்திரத் தொன்மைக குடிப்பிறப்பாளன்;
தீநதமிழ் வழஙகும் பாண்டி நன் னாட்டுள்
வெள்ள காற்பதி வள்ளலாம பழனி
யப்ப னளித்த சுப்பிர மணிய வேள்;
திருத்தகு நெல்லைச சிலேடை வெண பாவும்
மிகு சுவைக கோபபி விருததமும் நவின்றும,
சோதில் கீதையைக் கும்மியா யோதியும,
ஆஙகிலம் நின்று பாஙகுறப் பெயர்த்துப்
பாக்களார் சுவர்கக நீககமும வசன
மென்னடைக் கல்வி விளக்கமும அளித்தும்
நற்றமிழ் வளாக்கும் நாவலன்; அனறியும
செய்குதற் கருமையும செயதபிற் காப்பும்,
பிறைமதி யன்ன நிறைதரு பெற்றியும,
பயில்தொறும நூலென இனிக்கும பான்மையும்,
ஒத்த உணர்ச்சியின உற்ற கிழமையும
அக நெகு மெய்ம்மையும, அல்ல லுழப்பும,
மிகுதியின் மேற்சென் றிடிக்கு மேனமையும்
உடுக்கை யிழநதோன் ஒண்கையின உதவியும்
கொட்பின் றொலலுழி ஊன்றுறு குணமும்
சொல்லிற் புனையினும் புல்லெனு மெனமையும்
மற்றெலா நலனும மன்னிய நட்பினன்;
ஆயவென் அன்பற் காக்கினன்
வாமந நாவல் உரிமை வாழியே.

மார்க்கபுரம்
11—7—1903

அ. மா.

ரஞ்சகமாகக் கவிகளெழுதிய சுப்பிரமணிய பாரதியாரும் அவ்வாறே வசனங்கள் எழுதிய மாதவையரும தமிழ்த் தாயின் இரு கண்மணிகளாக விளங்கினார்கள் என்று நம் முதலியாரவர்கள் கூறுவது ஒரு சிறிதும மிகையாகாது.

# முதலியாரவர்கள் தமிழ்ப்பணி

முதலியாரவர்கள் தமிழ் மொழிககுச் செய்துள்ள தொண்டினை இன்று யாவரும போற்றுகிறார்கள். அவர்கள் செய்த தொண்டைத் தமிழர் மறந்தாலும் தமிழ் அவர்களை மறவாது. அவர்கள் அடக்கம, காரணமாக, தாம் தமிழுக்குத் தொண்டு செய்யவேண்டும் என்ற எண்ணத்தோடு ஒரு காரியமும் செய்யவில்லை யென்றும், தமக்கு இளமையிலிருந்தே தமிழ் மொழியின்மீது இருந்த பிரியமே, தம்மைத் தமிழ் நூல் படித்தற்கும் தமிழில் புத்தம் புதிய நூல்கள் இயற்றுதற்கும் காரணமாயிருநதது என்றும் கூறுகின்றார்கள். தாம் உண்பதும உறஙகுவதும எவ்வளவு இயற்கையாய் நிகழ்கின்றனவோ, அவ்வாறே தாம் தமிழ் நூல்களைப படித்தலும், எழுதுதலும் என்று அவர்கள் கூறும்பொழுது, 'இப்படி, இயற்கையிலேயே தமிழில் ஆர்வமகொண்டிருக்கும ஒரு சிலர் மட்டும இன்று நம்மிடை இருந்தால் போதுமே' என்று நாம் எண்ணவேண்டி யிருக்கிறது.

முதலியாரவர்கள் தமிழ் உலகுக்கு எழுதி உதவிய நூல்கள் பல. தாம உத்தியோகமேற்ற இலாக்கா சமபநதமாகக் கால்நடை மருத்துவ நூல்களை ஆங்கிலத்தினின்று தமிழில் பெயர்த்தும், தாம் முப்பது வருட காலத்

திற்கு மேல் உழைத்து அடைந்த அனுபவங்களை எல்லோரும் அறியும்படி சிறு சிறு புத்தகங்கள் வெளியிட்டிருக்கிறார்கள். இவ்வாறு பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழ் மொழியில் மொழி பெயர்த்தது மட்டுமல்ல, இன்னும் இறவாத புகழுடைய புது நூல்களை இயற்றிய பெருமையும் நம் முதலியாரவர்களுக்கு உரியது. ஆங்கிலக் கவிச் சக்கரவர்த்தி மில்ட்டன் எழுதிய சுவர்க்க நீக்கத்தின் முதற் காண்டத்தைத் தமிழில் விருத்தப்பாவில் மொழி பெயர்த்ததும், ஆங்கிலப் பேராசிரியரான ஹெர்பெட் ஸ்பென்சர் எழுதிய கல்வி விளக்கத்தின் முதற் பகுதியை மொழி பெயர்த்ததும் நாம் அறியாதவை யல்ல. மேலும், அகலிகை வெண்பா, கோம்பி விருத்தம் முதலிய நூல்களை இயற்றி வெளியிட்டு, தமிழ் உலகில், தாம யார்க்கும் இளைக்காத ஒரு கவி என்ற புகழையும் நாட்டிக்கொண்டார்கள். இவற்றை யெல்லாம்விட அவர்கள், தமிழ் மக்களுக்குச் செய்த பெரிய தொண்டு ஒன்றிருக்கிறது. தமிழ்க் கவி யுலகத்திலே ஏக சக்ராதிபத்தியம் செய்துவரும், கவிச் சக்கரவர்த்தி கம்பரின் இராமாயணத்திலுள்ள இனிய கவிகளைத் தேர்ந்தெடுத்து அக் கவிகளுக்கு விளக்கவுரை முதலியன எழுதிக் 'கம்பராமாயண சாரம்' என்னும் நூலை வெளியிட்டிருக்கிறார்கள். கம்பராமாயணத்திலே, இனிய கவிகளைத் தேர்ந்தெடுக்கும் சிரமத்தைவிட, எந்தெந்தக் கவிகளை விட்டுவிடுவது என்ற சிரமந்தான் அதிகம என்று கூறலாம். ஆகவே, அவர்கள் தேர்ந்தெடுக்காத இனிய கவிகளின் கருத்துக்களையும் கதைத் தொடர்ச்சியான வசனத்திலே அமைத்திருக்கிறார்கள். ஆகவே, கம்பராமாயண சாரத்தை, நன்றாய் வடித்துப் பிழிந்தது, தமிழ்ப் புலவர்களுக்கும், தமிழ் மாணவர்களுக்கும் அவர்கள் அளித்துள்ள விருந்து எனலாம். அது என்றும் சுவைத்து இன்புறத்

தக்கதாயிற்று. இவ்வாருக, முதலியாரவர்கள், ஒரு நல்ல கவியாகவும், ஒரு அரிய மொழிபெயர்ப்பாளராகவும், ஒரு பெரிய உரை யாசிரியராகவும அமைநது தமிழுக்கும தமிழ் மக்களுக்கும சென்ற இரண்டு தலைமுறைகளுக்கு மேலாகவே தொண்டு செய்து வந்திருக்கிருர்கள். இன்று அவர்கள் எண்பத்திரண்டாண்டு நிரமபியவர்களாயினும், சிறிதும் தளர்வில்லாமல் தமிழ் நூல்களைப் படிப்பதிலும், தமிழ் நூல்களை எழுதுவதிலும் ஆர்வங்காட்டி வருகிருர்கள்.

இவ்வாறு இவர்கள் நூல் ஆசிரியராக அமைந்து செய்துவருகிற தொண்டைக் காட்டிலும், இன்னும் அருமையாகச் செய்த ஒரு சேவையைக் குறிப்பிடாது செல்ல என் மனம் இடநதரவில்லை. இன்று அண்ணுமலை நகரில், தமிழுக்கெனப் பல்கலைக் கழகம் அமைந்திருப்பது முதலியாரவர்கள் செய்த சேவையில் ஒன்று என்று கூறிஞல் அது பலருக்கு ஆச்சரியமாயிருக்கும். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் மூலகர்த்தர்களில இவர்கள் பெயர் காணப்படாது போகலாம். ஆனல், சென்னை இராசாங்கத்தார் தமிழுக்கு ஒரு தனிப்பட்ட பல்கலைக் கழகம் அவசியமா என்று விசாரணை செய்ய ஒரு கமிட்டி ஏற்படுத்தி, விசாரணை செய்துவநதார்கள். அக் கமிட்டியின் அங்கத்தினர் சிலர் 'தமிழ்மொழி தனியே இயங்கும் தன்மையுடையதன்று, அறிவியல் நூல்கள் இதுவரை தமிழில் இல்லாததே அதற்குச் சான்று' என்ற கொள்கையாளராக இருந்தார்கள். நமது முதலியாரவர்கள் இக் கமிட்டியார் முன்பு சாட்சியம் சொன்ன பின்பு தான், அவர்கள் எண்ணம் மாறுபட்டது. இவர்கள், தமிழகத்தில் தமிழ் மொழியிலேயே பாடங்கள் நடத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையோடு, ஒரு வயித்திய கலாசாலை (Medical College) ஏற்படுத்திஞலும்,

அப்படிப்பட்ட கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் உபயோகித்தற்கு வேண்டிய அறிவியல் நூல்கள், தமிழிலே நெடுங்காலத்திற்கு முன்னமே எழுதப்பட்டுள்ளன என்று கூறிவிட்டு, அக்கூற்றை ருசுப்படுத்த, பல ஆண்டுகளுக்கு முன்னே இலங்கையில் இருந்த ஒரு வயித்திய கலாசாலையில் உபயோகப்படுத்தி வந்த (Anatomy) அங்காதிபாத சாஸ்திரம், (Medicine) மருத்துவம், (Surgery) ரணவைத்தியம், (Midwifery) பிரசவ நூல் முதலிய புஸ்தகங்கள் தம்மிடமிருந்தவைகளை அக் கமிட்டியார் முன் வைத்துவிட்டார்கள். இக் கிழவர், சொல்லளவில் அன்றிச் செயலளவிலும் நிரூபித்துக் காட்டியவுடன், அக் கமிட்டியார் வேறு ஒன்றும் சொல்ல வகையற்றவர்களாய், தமிழ்மொழிக்கென்று ஒரு பல்கலைக் கழகம் நிறுவுதல் நியாயமானதென்றும், அப்படி நிறுவினால் அதற்குரிய நூல்களை எழுதலாமெனறும் தீர்மானித்தவர்களாய்ச் சென்னைக்குத் திரும்பினார்கள். முதலியாரவர்கள் சாட்சியம்தான், கமிட்டியார் மனத்தில் கொண்டிருந்த கொள்கைகளை மாற்றுவதற்கு, முதற் காரணமாயிருந்தது. இம் மனமாற்றமே, பின்பு செட்டி நாட்டுப் பெருந்தகை ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் ஒரு பெருந் தொகையைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கென உதவிய போது, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நிறுவக் காரணமாயிருந்தது. இவ்வண்ணாமலைப் பல்கலைக் கழகம் தன்னுடைய தமிழ்ப் பரீக்ஷாதிகாரிகளின் கூட்டத்திற்கு முதலியாரவர்களையே சில காலம் தலைவராக் கொண்டு கவுரவித்துள்ளது. சென்னைப் பல்கலைக் கழகத்தாரும், முதலியாரவர்கள் பெருமையை உணராமலில்லை. சென்ற இரண்டு வருஷங்களுக்கு முன் தமிழ்ப் பேராசிரியர்களைத் தேர்ந்தெடுக்கும் ஒரு கூட்டத்தில் முதலியாரவர்களையும் அங்கத்தினராக நியமித்திருக்கிறது. இவ்வாறு இவர்கள்

சென்னை அண்ணாமலை முதலிய பல்கலைக் கழகங்களால் இன்னும் போற்றப்படுவதொன்றே, இவர்களது சேவையின் சிறப்பை விளக்கும் தமிழ்ப் பெருங் கிழவரான இவர்கள், இன்னும் பல வருஷங்கள் இன்றேன இருந்து தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் பணி செய்துகொண்டிருக்கும் வண்ணம், தமிழ்த் தெய்வத்தை நெஞ்சார வாழ்த்துவதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய அறியேன்.

## பொதுஜன சேவை.

முதலியாரவர்கள் இராசாங்க உத்தியோகத்தில் கால் நடை மருத்துவ இலாக்காவில் அமர்ந்து சேவை செய்யும் பொழுதும் பென்ஷன் பெற்றபின்னும், தமிழ் மக்களுக்கு நல்ல நூல்களை அளித்துத் தொண்டு புரிந்தார்கள். இத்துடன் அமையாது, 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற அப்பர் அருள்வாக்கிற் கிணங்க, இராசாங்க உத்தியோகத்திலிருந்து விடுதலை பெற்ற பின்பும், ஸ்தல ஸ்தாபனங்களில் கௌரவப் பதவிகள் ஏற்றுப் பொதுஜனங்களுக்கு வேண்டிய நன்மைகள் புரிந்திருக்கிறார்கள். 1916-ம்வருடம் திருநெல்வேலித் தாலூகா போர்டின் அங்கத்தினராய் நியமிக்கப்பட்டார்கள். 1919-ம் வருடம், அந்தத் தாலூகா போர்டின் உதவித் தலைவர் பதவியடைந்து, பின்னர் மறு வருடம் தலைவர் பதவிக்கு நியமிக்கப்பட்டார்கள். இவர்கள் தாலூகா போர்டு தலைவராவதற்கு முன் உத்தியோகத்தரான (Ex Officio) தலைவர்களே யிருந்தார்கள். இவர்கள்தான் தாலூகா போர்டின் பிரதம நியமனத் தலைவர். (First Nominated President of the Taluk Board). பொருளாதார சம்பந்தமாக ஷை தாலுகாப் போர்டு தோன்றின காலந் தொட்டு இன்று வரையும் எந்தத் தலைவரும் செய்திராத தனிச் சிறப்பான தொண்டு ஒன்று இவர்கள் செய்

திருக்கிறார்கள். நெடுங்காலமாக முனிசிபாலிட்டியார் குறை சொல்லி வந்ததற்குக் காரணமாய், சுகாதார விரோதமாய், அசுத்தமான தண்ணீர், சேறு, குப்பைகளுக் கிடமாய்க் கிடந்ததும், திருநெல்வேலி ரெயில்வே ஜங்ஷனுக்கு மேற்கிலுள்ளதுமான காலி இடத்தையும் உபயோகப்படாதிருந்த வேறு சில இடங்களையும் சுத்தமாக வைத்திருத்தல் முதலிய நிபந்தனைகளோடு குத்தகைக்கு விட்டுத் தாலூகா போர்டுக்கு எச் செலவுமில்லாமல் ஏறக்குறைய வருஷத்துக்கு ஐயாயிரம் ரூபாய் புத்தம் புதிய வரும்படி நிரந்தரமாக வரும்படி செய்திருக்கிறார்கள்.* இவர்கள் தாலூகா போர்டில் தலைவராயிருக்கும்போதுதான், காலஞ்சென்ற, கனம் மந்திரி Sir T. N. சிவஞானம் பிள்ளையவர்கள் ஜில்லா போர்டு தலைவராயிருந்தார்கள். இருவரும் ஒத்துழைத்த காரணமாகவே ஜனங்களுக்கு அநேக நன்மைகள் செய்ய முடிந்தது. பின்னர் ஸ்தல ஸ்தாபனங்களிலுள்ள அங்கத்தினர்களிடையே போட்டிகளும், அதனால் அந்தந்த ஸ்தாபனங்களில் ஒழுங்கின்மையும் ஏற்படத் தொடங்கியதும், உண்மைக்கும் ஒழுக்கத்திற்கும் உறைவிடமான முதலியாரவர்கள், இனித் தாம் ஸ்தல ஸ்தாபனங்களின் மூலமாகப் பொதுஜன சேவைசெய்வது இயலாத காரியமென நினைந்து விலகிக்கொண்டார்கள். இப்படி இவர்கள் ஸ்தல ஸ்தாபனங்களிலிருந்து விலகிக்கொண்டாலும், இராசாங்கத்தார் இவர்களது உதவியை விட்டுவிடத் தயாரா யிருக்கவில்லை. 1922-ம் வருஷம், ஜில்லாக் கலெக்டராயிருந்த லயனல்

---

* இந்த வரும்படிக்குரிய இடத்தின் பாத்தியதையைப்பற்றி தற்போது வழக்கேற்பட்டிருக்கிறதென்றாலும், அது, பாழாய்ச் சுகாதாரவிரோதமாயிருந்த இடத்தைச் சுத்தமுள்ளதாகவும் பெருத்த வருஷாந்தர வரும்படி தருவதாகவும் முதலியாரவர்கள் செய்து முடித்த சிறந்த வேலையைச் சிறிதும் பாதிக்கமாட்டாது.

டேவிட்சன், (Lionel Davidson Esq.) துரையவர்கள் இவர்களது நேர்மையான நடத்தையையும் உயரிய ஒழுக்கத்தையும் அறிந்து, இவர்களைத் தென்காசிப் பெஞ்சு கோர்ட்டின் தலைவராய் நியமித்தற்கு வேண்டும் முயற்சிகள் செய்தார். இவர்களும் அப்பணியைத் தலைமேல் ஏற்று 1929-ம் வருடம் வரை அந்த உத்தியோகத்திலிருந்து பின்னர் விடுமுறை பெற்றார்கள். இவர்கள் அககாலத்து — "தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும் — பள்ளமெனும் பெருந்தகை"யா யிருந்தார்கள் என்பதை இவர்களோடு நெருங்கிப் பழகியவர்கள் அறிவார்கள். இவ்வாறு இவர்கள் செய்த பொதுஜன சேவையை மெச்சித்தான் 1926-ம வருடம் புதுவருஷ தினத்தன்று மாக்ஷிமைதங்கிய ஐந்தாம் ஜியார்ஜ் சக்கரவர்த்தி இவர்களுக்கு ராவ்சாகிப் பட்டமளித்துக் கவுரவித்தார்கள். அப்போது திருநெல்வேலியில் கலெக்டரா யிருந்த தம்பு துரைப் பெருமகனார் (A. McG. Tampoe Esq., M. A; I. C. S.) 1—5—26ல் தென்காசியில் ஒரு தர்பார் நடத்தி, இவர்களது சேவையைப் பற்றிப் பெரிதும் புகழ்நது பேசி அப் பட்டத்திற்குரிய சன்னதை அளித்தார். இவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து உயரிய பட்டங்கள் பலவும் பெற்று மகிழவேண்டுமென்பதே எம பேரவா.

# முதலியாரவர்கள் நூல்கள்

# முதலியாரவர்கள் நூல்கள்.

## முன்னுரை.

"புத்தம் புதிய கலைகள் — பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே — அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை"

"சொல்லவுங் கூடுவ தில்லை — அவை
சொல்லும் திறமை தமிழ் மொழிக்கில்லை
மெல்லத் தமிழினிச் சாகும் — அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்"

என்று ஒரு "பேதை" யின் கூற்றாகக் கவி பாரதி, "தமிழ்த் தாய்" என்று மகுடமிட்டுப் பாடினார். இது, இன்றைக்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே, ஆங்கிலங் கற்ற தமிழர், தமிழைப் பற்றிக்கொண்டிருந்த அபிப்பிராயம் ஆகும்.

ஆனால், இன்று அவர்கள் தமிழை எவ்விதம் மதிக்கிறார்கள் என்பதை, "வெகு சீக்கிரத்தில் தற்கால அறிவு முழுவதையும் தமிழில் கொடுத்துவிடலாம் என்பது என் நம்பிக்கை; பிறமொழிகளின் உதவியின்றியே தமிழில் எந்த விஷயத்தைப்பற்றிவேண்டுமானாலும் எழுதிவிட முடியும்" என்று நமது பிரதம மந்திரி கனம் சக்கரவர்த்தி ராஜகோபா

லாச்சாரியார் அவர்கள் கூறுவதைக்கொண்டறியலாம். 'தமிழில் பேசத் தெரியாது', என்று சொல்வதே கவுரவம் என்று கருதிய காலம் போய், 'எல்லோரும் தமிழ் நாட்டிலே தமிழர்களிடையே தமிழில்தான் பேசவேண்டும்' என்ற காலம் வந்து விட்டது. அரசியல் தலைவர்கள் எல்லோரும் தமிழில் பேசித் தானே மக்கள் உள்ளங்களைக் கவர்கின்றார்கள். தமிழ் நாட்டிலே இன்று எண்ணிறந்த பத்திரிகைகள் தோன்றித் தமிழர்களால் ஆதரிக்கப்படுவதே தமிழர்களின் விழிப்புக்கு ஓர் உதாரணமாகும். அரசியல், இலக்கியம் என்பவைகளைப் பற்றி மட்டுமல்ல, பொருளாதாரம், சாஸ்திரம், சங்கீதம், சிற்பம், சித்திரம் முதலிய அருங்கலைகளனைத்தையும்பற்றித் தமிழர்களுக்குத் தமிழில் தெரிவித்துவிடலாம் என்ற எண்ணமே, நம் தமிழ் எழுத்தாளர்களிடம் பரவியிருக்கின்றது. இன்று தமிழ் இலக்கிய உலகில் ஒரு மறு மலர்ச்சி ஏற்பட்டிருக்கிறதென்றே சொல்லலாம்.

இத்தகைய மறுமலர்ச்சிக்கு மூலகாரணர்களும் இல்லாமல் இல்லை. அவர்களில் ஒருவரே நம் முதலியாரவர்கள்.

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும் — கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"

என்று பாரதி பணித்ததற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரேயே நமது முதலியாரவர்கள் தமிழ்த் தாய்க்கு அரிய கலைச் செல்வங்களைத் தேடித் தந்திருக்கிறார்கள். 'பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழில் மொழி பெயர்க்கவேண்டுமா? இறவாத புகழுடைய புது நூல்களைத் தமிழ்மொழியில் இயற்றல்வேண்டுமா? இதோ நான் இருக்கிறேன்', என்று கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு

தமிழருக்கும் தமிழன்னைக்கும் தொண்டுசெய்ய முன்வந்தவர்கள் நமது முதலியாரவர்கள். இவர்களது புலமை, திறமையான புலமையாயிருத்தல் கண்டே, இவர்களைத் தமிழ்நாட்டில் மகா மகோபாத்தியாய டாக்டர் சாமிநாதய்யரவர்கள் போன்றவர்களும் வெளிநாட்டில் டாக்டர் G. U. போப் ஐயர் முதலியோரும் புகழ்ந்திருக்கிறார்கள்.

இவர்கள் தமிழாசிரியராக இருக்கவில்லை. மேடைகளில் வீரப் பிரசங்கங்கள் நிகழ்த்தவில்லை. இராசாங்க சேவையில் ஈடுபட்டிருந்தபொழுது, தமிழில் அரிய நூல்களை எழுதி வெளியிட்டார்கள். அந் நூல்கள் இன்று தமிழ்த் தாய்க்குப் புதிய பணிகளாய் அமைந்து அழகுசெய்கின்றன. தாம் ஒரு நல்ல வசனகர்த்தா என்பதையும், இனிய கவிஞர் என்பதையும், முதன்மையான மொழிபெயர்ப்பாளர் என்பதையும, அரிய பெரிய உரையாசிரியர் என்பதையும் இவர்கள் தமது வெளியீடுகளால் விளக்கியுள்ளார்கள்.*

சுவர்க்கநீக்கம், கோம்பி விருத்தம் முதலியவை மொழிபெயர்ப்பு நூல்கள் ஆனாலும் அவைகளும் முதலியார் அவர்களின் கவிதா சக்தியைக் காட்டுவனவாயுள்ளன.

---

* As a responsible gazetted officer in the Veterinary Department, you have rendered yeoman service especially by the diffusion of useful knowledge regarding Veterinary subjects by the publication of series of works. As a vigorous prose writer, translator, commentator and a poet, you have set an example which is as unprecedented as it is difficult to be followed. In fact, you have placed the tamil world under deep debt of gratitude"

Diwan Bahudur S. Bavanandam Pillai,

I. S. O., O. B E., F. R. H. S. (Lond.) M. R. A. S. (Lond.)

**(Asst Commissioner of Police), MADRAS** 27-7-1928.

அகலிகை வெண்பா, நெல்லைச்சிலேடை வெண்பா, அம்பலவாண தேசிகமாலை, தனிக்கவித் திரட்டு முதலிய நூல்கள், முதலியாரவர்கள் எத்தகைய அருமையான கவி என்பதை விளக்கும். கம்பராமாயணத்தில் உள்ள இன் கவிகளையெல்லாம் திரட்டி அவைகளுக்கு உரை யெழுதிக் கம்பராமாயண சாரம் என்னும அழகிய பெயரோடு, வெளி யிட்டிருப்ப தொன்றே அவர்கள் எத்தகைய சிறந்த உரையா சிரியர் என்பதை உலகுக்கு அறிவிக்கும். கால்நடைமருத்துவ நூல்கள், ஹெர்பேர்ட் ஸ்பென்சர் எழுதிய கல்வி விளக்கம் மிலிட்டனுரது சுவர்க்கநீக்கம் முதலிய நூல்கள் அவர்களது மொழிபெயர்ப்புத் திறனை விளக்கப் போதியனவாகும். இவ்வாறு பல துறைகளிலும் வல்லவர்களாய்ப் பல நூல்களை எழுதி எண்பத்திரண்டாண்டு நிரம்பிய இந்த வயோதிக நிலையினும் தமிழுக்குத் தொண்டு செய்கின்றுர்கள் என்றல், அவர்களைத் தமிழர் போற்றுதிருக்க முடியுமோ. நான் அவர்கள் நூல்களை முழுவதும் நன்கு கற்றவனென்று பெருமை பாராட்டிகொள்ள முடியாது. எனினும் அவர் களோடு பல வருடங்களாக நெருங்கிப் பழகியவன் என்ற தன்மையிலும் அவர்கள் எழுதிய நூல்களை என் அலுவலில அவ்வப்போது ஏற்படும் ஒப்வு நேரங்களில் விரும்பிக் கற்பவன் என்ற முறையிலும் அவர்கள் இயற்றிய நூல்களைப் பற்றியும் ஒரு சில வார்த்தைகள் சொல்லக்கூடும் என்று கருதி அந் நூல்களைப்பற்றி எழுதப் புகுகின்றேன்.

# அகலிகை வெண்பா

"அகலிகை வெண்பா" என்ற பெயரைக் கேட்ட அளவிலேயே, இந்நூல், கௌதம முனிவரின் மனைவியான அகலிகையின் சரித்திரத்தைச் சொல்லும் ஒரு நூல் ஆகவும், அந்நூல் முழுவதும் தமிழ்ப் பாக்களில் முதற்பாவாகிய வெண்பாவில் ஆக்கப்பட்டிருக்க வேண்டுமென்றும் அறியலாம். முதலியாரவர்களின் தமிழ்ப் புலமையின் சிகரத்தை எட்டிப்பார்க்க விரும்புபவர் இந்நூலைப் படித்தல் வேண்டும். அவர்கள் கற்பனைத் திறமும், சுவை நயமும் இந்தநூலில் நன்கு விளங்குகின்றன. "வெண்பாவிற் புகழேந்தி" என்பதுதான் பல நூற்றாண்டுகளாகத் தமிழர் கண்ட உண்மையாக இருந்துவந்தது. அப்படிப்பட்ட புகழேந்தியும் முதலியாரவர்களின் வெண்பாக்களின்முன் நாணித் தலைகுனிய வேண்டியதுதான். இதுவே இக்காலத்திய தமிழறிஞர் கருத்து.*

'அம்மி மிதித்து அருந்ததி பார்ப்பது' நம் நாட்டில் கல்யாண வீட்டில் நடக்கும ஒரு பழைய கிரியை. கல்யாண மாப்பிள்ளை, மணமகளுக்கு, கற்பிழந்த காரிகையான அகலிகை கல்லாய்ப் போனதையும், கற்பொழுக்கத்தில் சிறந்து விளங்கிய அருந்ததி வானுலகத்தில் நட்சத்திரமாக விளங்குவதையும் எடுத்துக்காட்டுவது இக் கிரியையின் நோக்கம். கௌதமரிஷியின் மனைவியான அகலிகை இந்திரனால் வஞ்சிக்கப்பட்டு, அவனால் கற்பழிக்கப்பட்டாள் என்பதும், அப்படிக் கற்பிழந்த அகலிகையைக் கௌதம முனிவர்

* முதலியாரவர்களை நானறிந்த முறை - என்ற முன்னுரையில் அறிஞர்கள் கருத்துக்களைக் குறிப்பாகத் தந்திருக்கின்றேன்.

கல்லாய்ப் போகும்படி சபித்துவிட்டார் என்பதும், பின்னர் தசரதன் மகனை இராமனது பாதஸ்பரிசம் பெற்று, சாபம் நீங்கி, தன்னுருவம் அடைந்து, பழையபடி கௌதம முனிவர் மனைவியாக வாழ்ந்தாள் என்பதும், நாம் இராமாயண மூலம் அறிந்த ஒரு சிறு கதையாகும். ஆனால் இக்கதையைப் பலரும் பலவிகற்பப்பட அமைத்துரைத்துள்ளார்கள்.

கற்பிழந்த அகலிகை, எப்படி வணங்கப்பெறும் பஞ்ச கன்னியரில் ஒருத்தியாக எண்ணப்படுகிறாள் என்பது இன்றுவரை விவாதத்திற்கிடமானதாகவே இருந்து வருகிறது. இன்றும் நம்மில் வடநாட்டார் தங்கள் பெண் மக்களுக்கு "அஹல்யா பாய்" என்று பெயரிட்டு அழைக்கிறார்கள். அகலிகை கற்பிழந்தவளானால் அவள் இவ்வாறு போற்றப்படுவாளா என்பது கவனித்தற்குரியது. வான்மீக முனிவர் சொல்லும் அகலிகை கதையைப் படிப்பவர் அகலிகை மாசற்றவள் என்று கூறத் துணியமாட்டார். திருவானைக்காப்புராணத்தில் உள்ள அகலிகை கதையைப் படிப்போமானால், அவளை எவ்வளவு கேவலமான ஒரு பெண்ணாய் அதன் ஆசிரியர் வான்மீகரைத் தழுவி வருணித்துள்ளார் என்று காணலாம். "கௌதமன் எனும் பெயர் கலந்த மாதவன்" "அகலிகை எனும் பெயர் அணங்குதன்னொடும்" வாழ்ந்து வருகின்றான். பொன்னுலகாளும் புரந்தரன் இவ்வகலிகை மீது காதல் கொண்டு, அக்கௌதம முனிவனது உருவெடுத்து அத்தையலை அணுகுகின்றான். அம்மங்கையை அடுத்து, முனி உருவில் வந்திருந்தாலும், தான் இந்திரன் என்று வெளிப்படையாகச் சொல்லி

"கருதலர் போரினல் காயம் நீங்குறத்
திருவளர் அமுதம்தெண் கடலிற் பெற்றுளேன்
உருவிலி போரினல் உயிர்உ காமைநின்
உருவளர் அமுதம் மிக் குதவுக" — என்று

இறைஞ்சுகின்றான். அகலிகையும் இந்திரன் குறிப்பறிந்து, நாணத்தை விட்டுத் தானும் அவன் மேற்கொண்ட காதலைத் தன் கண்களிலே காட்டி "இந்திர னே நமை யிரக்கின் றான் எனப் புந்தியில் அரும்பிய பொருவில் ஓகையள்" ஆகின்றாள். இருவரும் காதற் கலவியிற் களிக்கின்றார்கள்.

"காதல்மோட் டரும்பிமெய்க் காமச் செவ்வியின்
ஏதமில் மலர்மலர்ந்(து) இன்பத் தேன்கொழித்(து)
ஊதகக் களிப்பளி உலாவ, இந்திரப்
பாதவம் படர்ந்தது, பசும்பொன் மென்கொடி".

என்று அகலிகையை வர்ணிக்கின்றார், திருவானைக்காப் புராணத்தார். இக்கதை, கவிச்சக்கரவர்த்தி கம்பரால் கையாளப்படும் பொழுது புதியதோர் உருவும், அரியதாம் பொலிவும் பெற்றுவிடுகின்றது. கோதமன் மனைவியான அகலிகையை அடைய விரும்பிய இந்திரன் அக்கோதமன் உருவத்துடனேயே சென்றான் என்பதை

"மையலால் அறிவு நீங்கி மாமுனிக்(கு) அற்றஞ் செய்து
பொய்யிலா உள்ளத் தான்றன் உருவமே கொண்டு புக்கான்"

என்று கூறுகின்றார் கம்பர். பொய்யுடை யுள்ளத்தனான இந்திரன் பொய்யிலா உள்ளத்தனான கோதமன் வடிவத்தை மட்டும் கொண்டு, அகலிகை தங்கியிருந்த பர்ணசாலையுட் புகுந்து, அவளோடு, அந்த உபாயத்தினால் தானே, காம இன்பத்தை நுகர்ந்த நிலையில், அவ்வகலிகையும், இது தன் கணவனான முனிவனுடன் முன்னெல்லாம் அனுபவித் தறியாத ஓர் புதிய இன்பம் என்று உணர்ந்தனளாயினும், அவ்வின்பம் தக்க தென்றும், தகாதது என்றும் ஆராய்ந் தறிய வலியற்றவளாய் அவ்வின்பத்திலேயே மனம் லயித்துத் தாழ்ந்தனள் என்பதை,

புக்கவ ளோடும் காமப் புதுமண மதுவின் தேறல்
ஒக்கஉண் டிருத்த லோடும் உணர்ந்தனள் உணர்ந்த பின்னும்
தக்க(து) அன்றென்ன ஓராள் தாழ்ந்தனள்" என்று எடுத்துரைக்கின்றார் கம்பர். இவ்வாறு தன் உடம்பாடு சிறிதும் இன்றிப் பிறரொருவனால் வஞ்சிக்கப்பட்ட அகலிகையை "நெஞ்சினாற் பிழைப்பிலாள்" என்ற சிறந்த மொழிகளால் கம்பர் அழைக்கின்றார்.*

இனி, நம் முதலியாரவர்கள் தம் அகலிகை வெண்பாவில் சொல்லும் கதை, அகலிகை, இந்திரன் என்று தெரிந்தே உடன்பட்டாள் என்ற வான்மீகர் கதையிலும இந்திரனை முனிவனென்று நினைந்தே போகந் துய்த்தனள் என்ற கம்பர் கதையிலும் சிறப்புடையதாக அமைந்துள்ளது. கோதமனை வஞ்சனையால் வீட்டைவிட்டு அகற்றி "கோதமனே போல உருக்கொண்டு," தன் மனையகத்துப் புகுந்த இந்திரனை "முனிமீண்டு வந்தான்" என நினைநது அகலிகை வரவேற்றாள். காமக்குறிப்புடன் முனி உருவில் வந்த இந்திரன், அவள் கையைப் பிடிகக, அவளைத் தொட்ட உடனேயே, அவன் பரிசம கோதமன் பரிசத்தினின்று வேறா யிருந்ததை உணர்ந்து, மகளிர்க்கியல்பாயுள்ள கணவனன்றிப் பிறரொருவன் தொடுதற்குச் சகியாத பயிர்ப்பு (-அருவருப்பு) உற்று, இது வஞ்சமென்றறிந்து "சீவிட்டிடு" என்று கோபத்தோடு பேசுகின்றாள். இவ்வாறு தன் வீட்டினுட் புகுந்து, தன் கையைப்பற்றியவனை இநதிரன் என்று உணராமல் "எங்கோன் நிற் காணின் என்ஆம்! என்றறியாய்; இந்திரனும் – எங்கோன் வெங்கோபத் தீயினின்றும் மீளானே" என்று அகலிகை எச்சரித்தபொழுது, அந்த

* அகலிகை வெண்பா மூன்றாம் பதிப்பு முகவுரை பக்கம் 18 பார்க்க.

"அமரர் நன் கோவே இப்போ(து) ஈங்(கு) உன்னை டிருக்கின்றான் என்று இந்திரன் தன்னை அறிவித்துக் கொள்கிறான். அகலிகைக்கும் இந்திரனுக்கும் வாதம் நடக்கிறது. இந்திரனை அகலிகை தன் விருப்பிற்கு இணங்கமாட்டாள் என்று அரிந்து வலிந்து தன் கருத்தை முடிக்க விரைகின்றான். இவ்வாறு தன்னை கற்பளிக்க இந்திரன் துணிந்து விட்டதை அறிந்த அகலிகை, மனம் பதைபதைத்துச் சோர்வுற்று நினைவிழுந்து விழுந்து விடுகின்றாள்.

ஒரு புலி தான் தின்னக் கருதிப் பிடித்த மானைத் தின்ன ஆரம்பித்தபோது, அந்த மான் பயத்தினால் உணர்வற்றுச் செத்தாற்போற் கிடந்தாலும் அதை அப் புலி தின்னாமற் சும்மா விட்டுவிட்டுப் போகாதவாறு, இந்திரனும், மூர்ச்சையுற்றுக் கிடந்த அகலிகையினிடத்துத் தன் கருத்தை முடித்துக்கொண்டான். இவ்வாறு இந்திரன் தன் காம வேட்கையைத் தணித்துக்கொண்டது அகலிகையின் பிணத்தைத் தழுவியதாக ஆகுமே ஒழிய, அகலிகையையே தழுவியதாகக் கூற இயலாது. இதுதான் முதலியாரவர்கள் சொல்லும் கதை. முதலியாரவர்கள் சொல்லுகிற, உளக் கற்புக்குப் பங்கமின்றி உடற்கற்பை மட்டும் இழந்த அகலிகை தான், பஞ்ச கன்னியரில் ஒருத்தியாய் இருக்கமுடியுமே தவிர, வான்மீகரது அகலிகை இருக்கமுடியாது என்பது வெளிப்படை. பழைய நூல்களிலே எழுந்த ஒரு கதையை தமிழ் மக்களின் ஒழுக்க வழக்கங்களுக்குக்கேற்ப மாற்றியமைத்து, அக்கதா நாயகியின் தூயதன்மையைப் பலரும் போற்றும்படி செய்த பெருமை நம் முதலியாரவர்களையே சாரும். இக்கதை யமைப்பைப் புகழ்ந்து கூறாத புலவர் இல்லை.*

*The Story of Ahalya is well-known to Hindu readers. From a puranic point of view, Ahalya was vio-

lated by Indra but from the Tansait expressions "Ahalva Tara" meaning Indra, as explained by the great vedic commentator Bhatha Bhaskara Missa, there was reason to believe that the story was only an allegory. Whether the story was only an allegory or not Ahalya was considered worthy of being worshipped by Sri Rama and the celestials. The story of Ahalya has been told by some of the greatest Tamil poets. Some said that she was deceived by the statagens of Indra, who appeared before her in the form of her husband Goutama Rishi and another famous poet said - and in this he followed the great Sanscrit poet Valmiki - that she knew that it was Indra who had come to and felt immensely pleased that even the great Indra, the god of the celestials had succumbed to her beauty and come to her feet. But Mr. Mudaliar has followed a third course and related in short pathetic language how Indra seized and rainshed her, in spite of her piteous supplications and in doing so Mr. Mudaliar wonderfully adopted some ideas from "the Rape of the Lucree" of Shakespeare the great English poet.

*Justice, 27-11-20.* Rao Bahadur P. I. Chinnasami Pillai

* The special characteristic of the theme is that it is full of human interest and affords a wide scope for the conflict of deep routed feelings in human nature. Thus it is a theme which can never fail to inspire interest in us so long as human nature is constituted as it is. The author besides choosing a proper subject for his poem has taken pains to delineate in detail the various phases of thought that may surge in the mind of an ideal woman placed in a most trying situation under the sudden clutches of one who set the realisation of his passion above his life and honour. The one point that should excite the admiration of every reader is the fidelity to consistency which the author has made a point of keeping up throughout the poem. Ahalikai is accordingly to Hindu notions, one of ideal Indian woman for chastity and it is therefore highly essential that her chastity should not least be stained by the betrayal of any moral weakness on her part. The idea that she fell into a trance at the thought of her escape from the grip of Indra,

இவ்வாறு இவர்கள் கதையை மாற்றியமைப்பதற்குக் காரணம் இலலாமல் இல்லை. தமிழ் மாதரின் கற்பொழுக்கத்தின் பெருமை பலரும் அறிந்த தொன்ருகும். "தங்கள்நா யகரில் தெய்வம் தவம்பிறி திலைஎன் றெண்ணும் மங்கைமார் சிந்தையை" வியந்து வியந்து கூறுவார் கம்பர். "கற்புடைப் பெண்டிர் பிறர் நெஞ்சு புகார்" என்பர் மணிமேகலையார். இத்தகைய கொள்கை யுடைய தமிழ் நாட்டிலே எழுகின்ற எந்த நூலும் பெண்மை நலத்திற்குப் பழுது காட்டாத ஒரு நூலாகவே யிருத்தல் வேண்டும். வான்மீகர் கதையையே மூலமாகக் கொண்டு, இராம கதையை எழுதிய கம்பரும் இவ் வுண்மையை மறந்தவர் அல்லர். இவ்வாறிருக்க, நம் முதலியாரவர்கள் பஞ்ச கன்னியரில் ஒருத்தியாய அகலிகை கதையைச் செப்ப முனைந்தபொழுது அகலிகையை ஒரு சிறு மறுவும அடையாவண்ணம் காக்க முற்படுகின்ருர்கள். அகலிகை அறிவிழந்து, பிணமபோல் கிடந்த நிலையிற்ருனே இந்திரனுல் கற்பழிக்கப்பட்டாள் என்று கூறுகின்ருர்கள். அகலிகையும் தனக்கு இப்பழி வந்து சேர, தான் முன்னர் என்ன தவறு செய்தேனே என்று ஆற்றுகின்ருள்.

"பின்ன முறப் பத்தினி நற் பெண்டிர் பிறர் நெஞ்சுபுகார்
என்ன நிறைப் பெற்றியினை ஏற்றமா — நன்னருணர்
முத்தமிழோர் கூறும் முறை தேர்ந்தும் தேரார் போல்
இத்தவறேன் செய்தேனே யான்."

என்பது அகலிகையின் பிரலாபம்.

---

next to impossible, shows at her best. Thus Ahalikai inspite of the incident stands an untamished model for chastity. For presenting the story in this fashion, the critical world is much obliged to the author.

*22-4-1921 Justice,* K. Subramania Pillai, M. A., M. L.
Tagore Law Lecturer.

"வஞ்சன், உடல்நிறையை மாற்றினான் அன்றிஉன்றன்
நெஞ்சின் நிறைசிறிதும் நீங்கிலது"

என்பது கௌதமர் அவளுக்களிக்கும் ஆறுதல்.

ஆங்கில நாடகாசிரியரான ஷேக்ஸ்பியர் எழுதியுள்ள லுக்கிரீசைக் கற்பழித்தல் (Rape of the Lucrece) என்ற நூல் ஆங்கிலம் கற்ற மாணவர்களுக்கு ஒரு நல் விருந்து. கோலாட்டைன் (Collatine) என்பவனுடைய அழகிய மனைவியான லுக்கிரீசு (Lucrece) என்னும் பெண்ணை டார்க்குவின் (Tarquin) பலாத்காரமாய் கற்பழித்ததையே கூறும் அக்கதை.

அக்கதையில் டார்குவின், லுக்கிரீசு படுத்துத் தூங்கிக்கொண்டிருந்த அறையை நாடும்போது, அவன் மனதில் எழுந்த எண்ணங்களையும், லுக்கிரீஸ் டார்க்குவின் இடம், தன் கற்புக்குப் பங்கம் விளைக்காமலிருக்க வேண்டி மன்றாடுதலையும், பின்னர் டார்க்குவினால் பலவந்தமாய்க் கற்பழிக்கப்பட்டபின் லுக்கிரீசின் புலம்பலையும விரிவாக ஷேக்ஸ்பியர் கூறியுள்ளார். இந்நூலைப் படித்த முதலியாரவர்கள் இந்த நூலில் மேல் நாட்டு அறிஞரான ஷேக்ஸ்பியர் எழுதி யமைத்திருக்கும் கருத்துக்களைத் தமிழ் மக்களும் அனுபவிக்கவேண்டும் என்ற கருத்துடன் ஒரு தமிழ்க் கதையையே சிருஷ்டித்துவிடுகிறார்கள். இத்தமிழ்க் கதைக்கு மூலமாக, வான்மீகரும் கம்பரும் சொன்ன அகலிகை கதையை எடுத்தமைத்துக் கொள்கிறார்கள். "இந்நூலி லுள்ள பாட்டுக்களுள், நான் முதன் முதல் இயற்றியவை சில. இவைகளை யியற்றியபோது, இப்பாக்களை ஒரு நூலின் பகுதியாக்கலாம் என்றாயினும், எப்போதாயினும் வெளிப் படுத்தலாம் என்றாயினும் கருதாமல், கேவலம் பொழுது போக்காகவும், கற்புடையாளொருத்தி கற்பழிய நேர்ந்த

சமயத்தில் பொறுதற்கரிய மனவருத்தமடையும் அதி பரிதாப மான கட்டத்தை வருணிக்கவும் கருதியே, இயற்றினேன். இவ்வாறியற்றிச் சிலகாலஞ் செல்ல, அகலிகை கதையை ஒரு சிறு நூலாக இயற்றலாம் என்றும், அதனில் நான் முதலில் பாடிய பாட்டுக்களை இடைப் பெய்து இணைக்கலாமென்றும் ஒரு நினைவு தோன்றியது. அந் நினைவின் முற்றுப் பேறே இந்நூல்'' என முதலியாரவர்கள் தாம் இந்நூல் எழுத நேர்ந்த சந்தர்ப்பத்தை மிகவும் இயற்கையாகச் சொல்லு கிறார்கள்.

"What win I if I gain the thing I seek?
A dream, a breath, a froth of fleeting Joy.
Who buys a minutes mirth to wail a week?
Or sells eternity to get a toy?
For one sweet grape, who will the vine destroy?
O what fond beggar, but to touch the crown
Would with the sceptic straight be strucken down?"

என்று ஷேக்ஸ்பியர் டார்க்குவின் மனதில் எழுந்த நினைவு களைச் சித்திரிக்கின்றார். நம் முதலியாரவர்களது அகலிகை யோ,

"இறைபொற் கிரீடஞ்சூ டிச்சையோடு தொட்டவ்
இறைசக் கரத்தால் இறந்த—அறிவற்ற
ஏழை எனத்தகா எண்ணமோடேற் பற்றினுய்
ஏழை உனைப் போல் இலை" என்றும்,

"தருவினைச் சார் வுற்றுத் தழைக்கும் கோடியை
ஒருகனிக்கே கோய் தொழித்தல் ஒக்கும்—கரவோடுற்றே
செய்திடுவான் நீ புகுந்த தீய செயல்; ஆதலினல்
வெய்தேனநீ என்னை விடு. என்றும், இந்திரனது

தகாத செயலைக் கண்டித்து உரைக்கின்றாள்.

"இன்னே நீ சம்மதித்தால் யார் அறிவார்? உன் கொழுநன்
உன்மீதே சந்தேகம் ஒன்றும் உறுன்"
"நின் இசைவை யான் தூற்ற நேர்கி லேன்; நீ தூற்றுய்;
பின் இதனை எங்ஙன் பிறர் அறிவர்?" என்று இநதிரன்
அகலிகையிடம் பேசுவதாக அமைத்திருக்கும் செய்யுட்களின் அடிகள்,

"But if thou yield, I rest they secret friend
The fault unknown is a thought un-acted"

என்று ஷேக்ஸ்பியரது டார்க்குவின் லுக்கிரீசிடம் சொன்னதை ஞாபகப்படுத்துகின்றன. ஆங்கிலம் கற்ற தமிழ்ப் புலவரான முதலியாரவர்கள் இவ்வளவு நயமாக மேல்நாட்டு நாடகாசிரியன் ஆங்கில அறிஞர்களுக்களித்த கருத்தையெல்லாம் தமிழ் மாணவர்களும் அன்பர்களும் அறிந்து அனுபவிக்கும்படி கொடுத்தது தமிழ் மக்களின் பாக்கியம என்றே சொல்லலாம்.

கம்பரது ராமாயணம் ஓர் இதிகாச காவியமாயிருந்தாலும் அக் காவியத்தில் வரும் பாத்திரங்களை நடத்தும் முறையாலும் பாட்டுக்களை யமைத்துள்ள சந்தத் தொழுங்காலும் அந்நூலை ஒரு சிறந்த நாடகம் என்றே கூறலாம். கம்பர் காவியத்தில் நாடகக் காட்சிகள் ஒன்றல்ல இரண்டல்ல எண்ணிறந்தவைகளை நாம் கண்டு மகிழ்கின்றேம. திரைச் சிலையும் அரங்க மேடையும் இன்றி நாடகம் இயற்றும் நல்லியற் கவிஞனை கம்பரைப்போலவே, நமது முதலியாரவர்களும் அகலிகை கதையை நயக்கத்தக்க ஒரு நாடகமாக நடத்திக் காட்டுகிறுர்கள். இந்திரன் நடத்தும் தர்பாரும் அவன் கொலுவிருக்கையில், அவன் உள்ளத்தில் எழுகின்ற உணர்ச்சிகளும் நம் மனக் கண்முன்னே முதல் முதல் காட்டப்படுகின்றன.

"அவள்உருவே நோக்க அவள்குரலே கேட்க
அவள் அருகே எப்போதும் ஆர,—அவள் நிழலே
போலப் பரிவோடவள் போம்எங்கும் போக, யான்
சாலப் பிரியமுளேன் தான்" என்று,

*இந்திரன் நினைத்ததாக ஆசிரியர் கூறும்பொழுது, அவன் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சியின் வேகம் இத்தன்மையது என்பதை நாம் அறிகிறோம்.*

"வேகின்றேன்! வேகின்றேன்! வெவ்வியதோர் தீப்பற்றி
வேகின்றேன்! அந்தோ! விளிந்தேனே!—வேக,
நரகத்தீத் தானும் நலியுமோ இந்த
விரகத்தீப் போல வெகுண்டு?" என்று,

*இந்திரன் ஓலமிடும்போது, நாம் அவனுக்காகப் பரிந்து இரக்கம் காட்டக்கூடத் தயாராய்விடுகிறோம்.*

*முனியுருவுடன் இந்திரன் அகலிகையிருந்த ஆச்சிரமத்தையணுகி ஒரு தந்திரத்தால் முனிவனை வீட்டினின்றும் அகற்றி உள்ளே புகுகின்றான். அகலிகையும் முனிவனே மீண்டு வந்தான் என வரவேற்கின்றாள். ஆனால் இந்திரன் நெருங்கி அவள் கரத்தைப் பிடிக்கவே பெண்களுக்கு இயற்கையாயுள்ள பயிர்ப் பென்னும் உணர்ச்சியால் தன்னோடு அப்பொழு திருப்பவன் தன் கணவன் அல்லன் என்பதை உணர்ந்து* "சீ விட்டிடு" *எனக் கூறிப் பின்னிடைகின்றாள்.* "விம்மினாள் வெய்துயிர்த்தாள் வேர்த்தாள் விதிர் விதிர்த்தாள் அம்மினாள் செய்வதறியா" *ளாய் மயங்குகின்றாள்.*

"மேக மின்றி, மின்னின்றி வெள்ளிடிமேல் வீழ்ந்தாற்
போல்
மா கொடுந் துன் பாம் விபத்து வந்ததே - ஆ! கெடுவேன்!
முன்னறிந்து தப்ப முடியவில்லை, சாகவில்லை,
என்ன தஞ்சம் உண்டிங் கெனக்கு."

என்று, அகலிகை அப்பொழுது தன் மனத்துள் ஆற்று வதைக் கவி கூறும்போது நாம் அகலிகைக்காகப் பெரிதும் இரங்குகின்றோம்.

இன்னும் இந்திரனுக்கு, இவன் நியாயங்களையெல்லாம் பன்னிப் பன்னி எடுத்துரைத்துத் தன்னை விட்டுவிடும்படி பரிந்து வேண்டுவதெல்லாம் படிப்பவர் உள்ளத்தை உருக்கி விடும் தன்மையன.

"விருதுகள்வெம் மாசுபடும் வீரம் பழுதாப்
பொருவயிர வாள்மழுங்கிப் போகும் — செருவிலுயர்
சூரனலன், சோரன் எனத் துன்னார்கள் தூற்றுவரால்
வீர! எனை விட்டு விடு" என்றும்,

"மன்னர் குலிசீ! விடு," "விட்டி டென்னை, விட்டே விடு" என்று பலவாறு கூறும்போது அவள் உள்ளமாம் வீணையில் எழுகின்ற சோக நாகத்தை நாம் கேட்கின்றோம். அகலிகை இவ்வாறெல்லாம் காம வெறிகொண்டு நின்ற இந்திரனைத் தடுக்க எண்ணியது,

"வெற்பின்உச்சி நின்றுருண்டு வீழ்பெரிய பாறை இடை நிற் புறக்கை கோண்டு தடுப்பதையே ஒக்கும்" என்று இந்திரன் கூறும்போது அவள் தன் வலியற்ற தன்மையை உணர்தலை நாம் உணர்கின்றோம். தன்னால் இந்திரனைத் தடுக்கவலியற்றவளாய் மயங்கி, அறிவிழந்து, விழுந்துகிடந்த அகலிகையிடம் "செயத்தக்க தீது, செயத்தகா தீது என்(று) யுத்தத்தம் காதலிலும் உண்டோ" என நினைந்தவனாய்த் தேவராசன் தனது கருத்தை முடித்திட்டான் என ஆசிரியர் நயமபடச் சிறிதும் விரசமின்றி உரைக்கின்றார். இவ்வாறே அடியிலிருந்து முடிவுவரை பாத்திரங்களை நடத்துகின்ற முறையாலும், கவியமைத்துள்ள மொழிகளாலும் நம் முன் ஒரு நாடகம் நடப்பதையே காண்கின்றோம். இந்நூலில்

வருகின்ற பாத்திரங்களையும் அவர்கள் பேசுவதையும் ஆசிரியர் நடத்திவைக்கின்ற முறையால், ஒவ்வொரு பாத்திரத்தைப் பற்றியும் நாம நினைக்கும்போது நாமும் அந்த அந்தப் பாத்திரமாகவே ஆகிவிடுகின்றோம். இதை நன்குணர்ந்த நண்பர், T. K. சிதம்பரநாத முதலியாரவர்கள் B. A., B. L., Ex Commissioner, H. R. E. Board.

"மன்னும் உலகியல் தேர் வண் சுப் பிரமணியன்
பன்னும் அகலிகை வெண் பாப் பொருளை —
உன்னுவோர்
எல்லாம் அகலிகையா, இந்திரனாக், கோதமனாக்
கல்லாவும், ஆவார் கனிந்து"

என்று அழகாக எடுத்துரைக்கிறார்கள்.

இந்நூலின் நயங்களை யெல்லாம் விரிவாக எடுத்துரைக்கும் ஆற்றல் எனக்கில்லை. ஆனாலும், இந்த நூலில் காணும் ஒரு சில நயமான பாட்டுக்களைத் தமிழ் அன்பர்கள் அறிந்து அனுபவிக்கும்படி செய்துவிடவேண்டும் என்னும் அவாமட்டும மிகுதியாக உடையேன்.

"நல்லார லார் உளத்தும் நல்லார் உளத்தினிலும்
பொல்லா நினைவு புகல் இயல்பே — நல்லார் தாம்
புக்கஉடன் அந்நினைவைப் போக்கிடுவர், பொல்
லாதார்
மிக்குறைய விட்டிடுவர் வேட்டு"

என்று சொல்லும்போது ஆசிரியர் ஒரு சிறந்த உண்மையை மட்டுமேயல்ல, மானிடராய்ப் பிறந்தவர்கள் ஒவ்வொருவரின் தினசரி வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களையே குறிக்கின்றார் என்று சொல்லலாம்.

"புதிய மலர்தோறும் புக்கு நறுந் தாதும்
மதுவும் நறுமணமும் வாரி — எதிரும்
வசந்த இள மென் காலும் வாட்டும் எனை: வெல்லம்
கசந்திடுதல் வாய்க் குற்றம் காண்."

என்று ஆசிரியர் விரகதாபம் அடைந்துள்ள இந்திரன் வாய்ப் பெய்து கூறுவது நன்கு படித்து ருசிக்கத் தக்கதாகும்.

இன்னும், 'அகலிகை இந்திரனால் உற்ற தோஷத் திற்குப் பரிகாரமாக, அவள் கல்லாக மாறும்படி செய்கிறார் கவுதமர். இவ்வாறு தன்னைக் கல்லாகப் போகும்படி, தன் கணவன் இட்ட சாபத்தை அகலிகை கனிவுடன் ஏற்றுக் கொள்ளும விதத்தை விளக்க விரும்பிய ஆசிரியர்,

"இணையில் பொறை எம்பெருமான் இன்னருள் என் என்! கேன்
உணர்வுளதேல் துன்பும் உளதேன்(று) — உணர் வதிலாக்
கல்லாக என்று கருணை வெள்ளத் தாழ்த் தினன்என்
பொல்லாத குற்றம் பொறுத்து"—

என்று கவியமைத்துள்ளார்கள். இக்கவி இந்நூல் முடி விற்குச் சிகரமாய் அமைந்து கற்போர் மனத்தை அப்படியே கனிய வைத்து விடுகின்றது. இன்னும் எத்தனையோ அருமை யான பாடல்கள் நூல் முழுதும் நிரம்பியிருக்கின்றன. விரி வஞ்சியே இத்துடன் நிறுத்துகின்றேன்.

கடைசியாக, இந்நூலின் நடையைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்லாமலிருக்க என் மனம் இசையவில்லை. உண்மையாக, கவிபாடும் சக்தி வாய்ந்தவர்கள், வெண்பாப் பாடுவதில் உள்ள கஷ்டத்தை அறிவார்கள். தமிழ் இலக் கியத்தில், தனி வெண்பாக்களால் ஆகிய நூல்கள் ஒரு சில

என்பதே இதற்குப் போதிய சான்ருகும். வெண்பா என்னும் பெயர் தாங்கி வெளிவந்த நூல்களில் முத்தொள்ளாயிரம், பெருந்தேவனுர் பாரதம், நளவெண்பா முதலிய சிலவே இன்று பிரசித்தமாயுள்ளவை. முத்தொள்ளாயிர வெண்பாக்களின் உயரிய தன்மையை, அதை அறிந்து அனுபவிப்பதோடு மட்டுமன்றிப் பிறரையும் அனுபவிக்கும்படி செய்யும, நண்பர் திரு. T. K. சிதம்பரநாத முதலியார் அவர்களிடமே, தமிழ் அன்பர்கள் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். "அகலிகை வெண்பாவைப் படிக்குங்கால், பண்டை முத்தொள்ளாயிரம் முதலிய வெண்பாக்களின் ஞாபகத்தை அடிக்கடி உண்டாக்குகின்றது". என்று அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் திரு. பண்டிதமணி கதிரேசச் செட்டியாரவர்கள் கூறுவதே இந்நூலிற் காணும் வெண்பாக்களின் நயத்திற்குப் போதிய மதிப்புரையாகும். "ஆசிரியர் இந்நூலில் கையாண்டுள்ள எளிய நடை, என் போன்ற தமிழ் மாணவர்களையும் கூட ஊக்குவிக்கும் தன்மையன என்ருல், அதிகம் கூறுவானேன். இந்நூலில் கையாளப்பட்டுள்ள கதையையும் பாட்டுக்களின் நடையையும தமிழறிந்த அன்பர் யாவரும ஒரு முகமாகவே புகழ்கின்ருர்கள். *"

"அகலிகை வெண்பாவில் காணும் வெண்பாக்களைப் படித்துப் பார்த்தேன். அவை சொல்வளமும், பொருள் வளமும் அமைந்து நிரம்ப நன்ருக இருக்கின்றன. இந்நூலிற் காணும் செய்யுட்கள் விரைவிற் பொருள் படுவதாக இருந்தும், ஒவ்வொரு செய்யுளும் இரண்டு முறைக்குக்

---

* I extremely appreciate the simplicity of the style and the suggestive fecundity of thought with which you have transformed the common place tale of moral laxity

குறையாமல் படிக்கும்படி செய்கின்றது. நூல் முழுவதையும் மெல்லப்படித்துப் பூர்த்தி செய்தேன். ரஸபுஞ்சமாக இருக்கிறது. தமிழ்ப் பாஷையை நன்றாகக் கற்றவர்கள் இதுவரை எதிர்பாராத ஓர் ஆனந்தத்தை இதனால் அடைவார்கள் என்று நிச்சயிக்கிறேன்". என்று டாக்டர் சாமிநாத அய்யரவர்கள் கூறும் பெருமை இந்நூலுக்கு வாய்த்திருக்கிறது. இதைவிட வேறு பெருமையும இவ்வாசிரியருக்கு வேண்டுமோ?

---

into a pathetic tragedy of ethical importance in which nobler passions and higher ideals of Indian woman-hood struggle with all their native vigour only to suffer defeat and be ultimately wrecked in the rocks of tumultious circumstance. It is not the triumph of un-principled man-hood, but the weak helplessness of the gentler folk even demanding the help-ful protection of the stronger sex that is most prominently brought-out in your version of the tale"

M. JEEVARATNAM.
[7—2—1915] Secretary to Government.

It is a very happy success in the attempt at clothing modern original and western mixed ideas in a Tamil Poem without losing at the same time the genius, the characteristic sweetness and individuality of the Tamil language or its pristine pictures. It is a lovely poem which I dare say, provoke imitations worthy of such ambition.

S. S. BHARATHI M A., B. L.,
Professor of TAMIL,
[16—9—15] Annamalai University.

Mr. Mudaliar has given us a poem of considerable beauty, tender and pathetic and most felicilous in its language and great in all directions in the Leromes' wrath, her scorn, and above all in her great sorrow. Mr. Mudaliar has to be Congratulated as an accomplished and distinguished Tamil poet of the present day.

Rao Bahadur P. I. Chinnaswami Pillai.

# கோம்பி விருத்தம்.

"சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன் தமிழ் நூல் ஆராய்ச்சி ஒருவிதமாகத்தான் இருந்தது. ஒரு நூலைக் கையிலெடுத்தவுடன் இதற்கு முதல் நூல் எது? இதற்கு ஸமஸ்கிருதத்தில் ஏதேனும் ஆதாரமுண்டா? என்றெல்லாம் விசாரிப்பார்கள். அத்தகைய முதல் நூலாவது ஆதாரமாவது இல்லாத நூலைக் கண்டனம் செய்வார்கள், அல்லது புறக்கணித்துவிடுவார்கள். தமிழில் எழுதிய எந்தப் புராணமும் எந்தப்பிரபந்தமும் வடமொழி நிழற்கீழ் ஒதுங்கலாமேயன்றி மற்றப்படி தனித்து நிற்க முயன்றால் ஆராய்ச்சியாளருடைய நெற்றிக் கண்ணால் வெந்து நீறாய்ப் போவதைத் தவிர்த்து வேறு போக்கில்லை. ஆகவே தமிழ் நூல் எழுதப் புகுவோர் அநேகமாய்ச் சூத புராணிகர் கைத்தாங்கலின்றிக் காலெடுத்து வைக்கத் துணிய மாட்டார்கள். கவிகளுக்குச் சூத முனிவர் அருள் கிடைத்தவுடன் அவர்கள் ஒரே பறப்பாக ஆகாயத்தில் பறந்து விடுவதுதான். எவ்வளவாகத் தாழ்ந்து வந்தபோதிலும் சந்திரமண்டலத்தைச்சுற்றி வட்டமிடுவதே யொழியக் கீழே இறங்குவது கிடையாது. அவர்களுடைய அற்புதக் கவி நயங்களெல்லாம் சாமான்ய மக்கள் கண்ணுக்கு எட்டாமலேபோய்விட்டன.

"அப்படிப்பட்ட காலத்தில் சாதாரணப் பொருளான பச்சோந்தியை விஷயமாகக் கொண்டு நகைச்சுவை தோன்ற எழுதிய ஆங்கிலப் பாட்டொன்று மாணவர்க்கு ஏற்படுத்தியுள்ள பாடப் புத்தகங்களில் காணுவதாயிருந்தது. அதை ஆங்கிலம் பயின்ற மாணவரும் மற்றையோரும் ஒருவாறு அனுபவித்துப் பாராட்டி வந்தனர். அந்த ஆங்கிலக் கவியைத்

தழுவி நூதன விஷயங்கள் பல சேர்த்துத் தமிழ் முறையில் நூலொன்று இயற்றினால் அது தமிழர் பலர் அநுபவிகக இடந்தரும் என்று எண்ணி இந்நூலாசிரியர் கோமபி விருத் தத்தை இயற்றினார்கள்.

"நூல் வெளி வந்ததும், புலவர்களேயன்றித் தமிழ் வாசிக்கும பழக்கமில்லாத மற்றையோரும் என் போன்ற மாணவருங்கூட வாசித்து அநுபவிக்கும்படியாக ஏற்பட்டது. தமிழ்ச் செய்யுளில் அமைநதிருநத போதிலுமை அதையும் அநுபவிக்க இயலும் என்று சிலர் வார்த்தையாடத் தொடங் கினார்" என்று திரு. T. K. சிதம்பரநாத முதலியாரவர்கள் இந்நூலின் பதிப்புரையில் எழுதுகிறார்கள். பண்டைத் தமிழ் இலக்கியத்தில் "நரிவிருத்தம", "எலிவிருத்தம்" என்ற சிறு நூலகள் இருக்கக் காண்கின்றோம். இதுபோலவே ஆங்கிலங் கற்ற தமிழரான நமது முதலியாரவர்கள் மெர்ரிக் (T. Merric) என்ற ஆங்கிலப் புலவர் எழுதிய 'The Chameleon)' என்ற ஒரு சிறு பாட்டைப் படித்தவுடன், தமிழ் இலக்கியத்தில் ஒரு "கோம்பி விருத்தமும்" இருக்கட்டுமே என்று நினைத்து, இந்நூலைப்பாட ஆரம்பித்திருக்கவேண்டும். ஆங்கிலப்பாட்டைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்திருக் கிறார்கள் என்று சொல்வதைவிட ஆங்கிலப் பாட்டுக்களின் கருத்தமைத்துப் புதியதாகவே ஒரு நூல் வெளியிட்டுவிட்டார் கள் என்றே கூறலாம். ஆங்கிலப் பாட்டறியாத ஒரு தமிழன் இந்நூலைப் படிப்பானேயானால், அது, தமிழிலே எழுதி, தமிழச்சிலே வார்க்கப்பட்ட ஒரு நூலாகவே கருதுவான். அத்தகைய முறையில் புத்தம் புதிய நூலாகவே, இந்நூலின் கவிகள் அமைந்துள்ளன. *

* "Though the grand work of the Poem is apparently taken from the story "Chemelon", the treatment of the

ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள கோம்பியின் கதைக்கும் நம் முதலியாரவர்கள் எழுதியுள்ள கோம்பியின் கதைக்கும், வால்மிகி ராமாயணத்திற்கும் கம்பராமாயணத்திற்கும் உள்ள வித்தியாசம் எவ்வளவோ, அவ்வளவு வித்தியாசம் உண்டு *

இரண்டு யாத்திரிகர்கள் போகும் வழியில் பலபல பேச்சுக்கள் பேசுகிறார்கள். ஒரு யாத்திரிகன் பச்சோந்தி ஒரு அபூர்வ பிராணி யென்ற பீடிகையோடு ஆரம்பித்து

---

subject is quite original. The ideas are in harmony with those of modern thought while the style is classical and the metre is in strict conformity with the canons of Tamil prosody.

Mr. E. S. M. SENATHI RAJA, L. L. B., Bar-at-Law
MADRAS.

Your Kombi Viruttam was really a mental feast to me. It is likely to exile the Nari and Eli Viruttams to find shelter in the ambushes of forests and the holes in the walls sitting majestically in the divine throne of lofty green trees adorned with diamonds of flowers and emeralds of fruits under the expensive canopy of heaven embedded with brilliant stars.

Mr. Rao Bahadur C. D. DAMODRAM PILLAI,
B. A., B. L.

It is not a mere rendering from the English but has been so altered and worked upon to suit the genius and tradition of the Tamil language that one who does not look at preface & notes will at first sight take it for an Original poem.

[The Christian Patriot]

அதன் நீலநிறம் எவ்வளவு அழகானது என்று வர்ணிக்கிறான். இதைக்கேட்ட மற்றொருவன் "ஐயோ, அது நீலநிறமா? அது பச்சை நிறமுடையதல்லவா" என்று கூறுகிறான். இருவரும் தாம்தாம் சொன்னதையே சாதிக்கிறார்கள். வாய்ச்சண்டை முற்றிக் கைச்சண்டைக்குக்கூட வருநிலையை எட்டிவிட்டது. அந்த நேரத்தில் அவ்விடத்தில் மற்றொரு பிரயாணி வந்து சேர்கின்றான். இவர்கள் வாதத்தைக்கேட்டு, அவன் சிரித்து விட்டு, இப்படி வீண்வாதம் ஏன் செய்கிறீர்கள். நீங்கள் சொல்கிறபடி அதன் நிறம் நீலமுமல்ல, பச்சையுமல்ல-நல்ல கறுப்புத்தான் என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறான். தான் சொல்லுவதை வலியுறுத்தத் தன்னிடம் அப்போது, அதற்கு முந்தினநாளே பிடித்து வைத்திருக்கும் பச்சோந்தியே இருக்கிறதென்று இறுமாப்போடு கூறித் தன்னிடமிருந்த பச்சோந்தியை வெளியே எடுத்துவிடுகிறான். அப் பச்சோநதியோ, இம்மூன்று பேரையும் பயித்தியக்காரர்களாக்கிவிட்டு, வெள்ளை நிறமுடையதாகக் காணப்படுகிறது. இவர்கள் எல்லாம் அப்படியே ஆச்சரியப்பட்டு நிற்கும்போது அப்பச்சோந்தி "மக்களே நீங்கள் எல்லோரும் சொன்னது சரிதான்; எல்லோரும் சொன்னது தப்பும்தான். நீங்கள் எதைக்குறித்தும் இனிமேல் பேசும்போது, நம்மைப்போலவே மற்றவர்களும் கவனமாய்ப் பார்க்கக்கூடியவர்களே என்பதையும், ஒரு பொருளைப் பார்ப்பதற்கு எவரும் தம் கண்ணால் பார்ப்பதைவிடப் பிறர் கண்ணால் பார்ப்பதற்குப் பிரியப்படமாட்டார் என்பதையும நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்". என்று சொல்லிக்கொண்டே ஓடிவிட்டது. இதுதான் ஆங்கில ஆசிரியர் Merrick சொல்லும் கதை. நம் முதலியாரவர்களோ இக்கதைக்கு ஒரு பொருள் கற்பிக்கின்றார்கள். அப்பொருளின் உண்மையையும் வள்ளுவர் குறளிலிருந்தே எடுத்துக்காட்டுகிறார்கள்.

"எப்பொருள் எவரெவர் இடத்துக் கேட்பினும்,
அப்பொருள் மெய்ப்பொருள் அறிதல் மெய்யறி(வு)
இப்புவி தனில் என எண்ணி டாது யாம்
தப்புறு கலாஞ் செய்து தாழ்வை யுற்றனம்"

என்று யாத்திரிகள் முடிவுக்கு வந்ததாகக் கூறும் நயம் கவனிக்கத்தக்கது.

இதுமட்டுமோ :- இன்னும் இப்படியே பச்சோந்தி நிறம் மாறி மாறிக் காட்டும் நிலையை விளக்க அவர்கள் எடுத்துக்காட்டும உவமைகளெல்லாம் படித்துப் படித்துச் சுவைக்கத் தக்கன. கடல், ஆறு, குளம் இவைகளிலுள்ள தண்ணீர் சூரிய வெப்பத்தால் நீராவியாகி, பின்பு மேகமாய் மேகத்திலிருந்து மழையாகவும், ஆலங்கட்டியாகவும் விழு வதேயன்றி மூடுபனி முதலிய பல உருவங்களாகவும் மாறு கின்ற தன்மைக்கு உவமை கூறும்பொழுது நாம் மகிழாமல் இருக்கமுடியாது.

"பாரில் ஆர் கலி நதி பட்ட மாதியிற்
சேரும் நீ ராவியாய்த் திரிந்து மேகமாய்
மாரியாய் ஆலியாய் மற்றும் பல்லுரு
ஆருமால் அதனையும் அன்ன(து) இன்னதே"
(ஆர்கலி - கடல். பட்டம் - குளம்)

என்றும் கவி அமைத்துள்ள முறையைப் பாருங்கள். இன்னும் "தெய்வம் ஒன்றையேபற்றி விவகரிக்கும் சமய வாதிகள் தாம் தாம் அறிந்தது மட்டுமே உண்மை யென்று சொல்லி அந்த ஏக வஸ்து அவர்கள் எல்லாரும் சொல்லும் எல்லாத் தன்மைகளும் உடையதாய் அவைகளைக் கடந்து நிற்கும் என்பதை அறியாத சமய வாதிகளை, நம் யாத்திரிகர்களுக்கு ஒப்பிட்டு,

"பரம் பொரு ளொன்றையே பற்றிப் பேசுறும்
தரந்தர மான பல் சமயத் தர்க்கர் தாம்
தெரிந்தது தான் உண்மை யென்பர் செப்பெலாம்
பொருந்தும் அஃ(து) என்றெணுர் அவரும் போன்றனர்"

என்று கூறுவது,

"தோள்கண்டார் தோளே கண்டார் தொடுகழற் கமலமன்ன
தாள் கண்டார் தாளே கண்டார் தடக்கை கண் டாருமஃதே
வாள் கொண்ட கண்ணுர் யாரே வடிவினை முடியக் கண்டார்
ஊழ் கொண்ட சமயத் தன்னான் உருவுகண் டாரை யொத்தார்".

என்று ராமனைப் பார்த்த பெண்கள் அடைந்த நிலையைக் கவிச் சக்கரவர்த்தி கம்பர் கூறும் பாட்டை நினைவுறுத்து கின்றது. இக் கோம்பியின் கதையால் அறியும் நீதிக்கு இவ்வளவு. *

இனி, இக்கதை யமைப்பைப் பார்ப்போம். கோம்பி விருத்தக் கதையில், ஒரு பாலைவனம் விரிவாக வருணிக்கப் படுகின்றது. இப் பாலையிடையே பயணஞ்செய்த இரு

---

* The moral of it all is that "One object has many aspects and is affected by circumstances of time and place; but men who know not this affirm that what they themselves see is real.

*May 1898,* Christian College Magazine.

The moral of this tale is quite familiar to Tamil readers and they use various, other similies to express the same truth. Our author collects a number of them and expresses them in various ways in the last 20 verses.

*April 1898* The Hight of Truth.

பிரயாணிகள் ஒரு சோலையை (Oasis) அடைகின்றார்கள். அச்சோலையிலுள்ள தடாகத்தில் நீருண்டு, களைப்பு நீங்கிய அந்தப்பிரயாணிகளுக்குக்கவித்துவ உணர்ச்சி உண்டாகிறது. தெளிந்த நீரையுடைய தடாகத்திலே தோன்றும் நீலவானம், தான் முன்கண்ட கோம்பியின் நீலநிறத்தை ஒத்திருக்கின்றது என்று ஒருவன் கூறுகின்றான். அவன் சொன்ன உவமை பொருத்தமற்றது - ஏனெனில் கோம்பியின் நிறம் பச்சையே யென்று வாதிக்கத் தலைப்படுகிறான் மற்றொருவன். "இன்று காலை, சூரிய வெளிச்சத்திலே பார்த்தேன்" என்கிறான் ஒருவன். "இல்லை, நானும அதை ஒரு சோலையின் நிழலில் நேரில் பார்த்தேன்" என்கிறான் மற்றொருவன். இவ்வாறு இவர்களுக்குள் சொற்போர் கைப் போராகும் நிலையில் வந்து விடுகின்றது. அந்தத் தறுவாயில் வருகின்றான் மூன்றாம யாத்திரிகன். அவன் இவர்கள் வாதத்தைக் கேட்கிறான். தான் கண்ட ஓந்தி கருநிறமுடையதென்பது அவன் வாதம். தன் வாதத்தை நிரூபிக்க வேண்டித் தன்னிடமுள்ள ஓந்தியை வெளியே விடுகின்றான்.

"கண்ணெதிர் விடுக்கவும் காம ரூபியும் — வெண்ணிற மாயுற", வெளிப்பட்ட விந்தையைக் கண்டு மூவரும் அதிசயிக்கிறார்கள்.

> "பலபல உறுப்பையும் தொட்டுப் பார்த்துத் தாம்
> மலைவற அவரவர் மனங்கொள் அங்கம் நேர்
> அல(கு) உரல் சுள(கு) உலக்கை யொப்(பு) யானை"

என்று சொல்லிய, யானை காணச் சென்ற குருடரைப் போல் நிற்கின்றார்கள். இதிலிருந்து பல நீதிகளை அறிந்து கொள்கிறார்கள். கோம்பியைப்பற்றிப் பேச, பாலையையும், அதனிடையுள்ள ஒரு சோலையையும், அச்சோலையிடையுள்ள

ஒரு தடாகத்தையும் வருவித்து, அத் தடாகத்தில் கண்ட நீல வானத்தின் நிறத்தைக் கோம்பிக்கு ஒப்புமை கூறி, ஆரம்பிக்கின்ற முறை, அழகுற அமைந்துள்ளது.

பாலை வருணனை - நம் இலக்கியங்களில் பலவிடத்தும் மலிந்து கிடக்கின்றது. "செந்நே ருப்பினைத் தகடு செய்து பார் செய்த தோக்கும்" என்பார் செயங்கொண்டார். "எரி சுடர்க் கடவுளும் கருதின் வேம் உள்ளமும் காணில் வேம் நயனமும்'' என்பார் கம்பர். நம் ஆசிரியரோ,

"பெரியவர் கோபத்திற் பிறந்த சாபத் தீ
அரிவையர் கற்புத் தீ, அன்பர் துன்புறப்
புரி தரு பிரிவுத் தீ பொறுமைத் தீ இவை
ஒருவழித் தோக்கென உளதப் பாலையே''

என்று பாலையை வர்ணிக்கின்றார். பாலைத்தீயின் வெம்மை, பாலையைப் பார்க்காத நம் உள்ளத்தில்கூட வந்து இப் பொழுது தாக்குகின்றது என்று சொல்லலாம்.

கதை யமைப்பாலும், கதையினால் கற்பிக்கும் நீதியாலும், மற்றும், பாலை, சோலை, தடாகம் தென்றல் இவற்றின் வருணனைகளாலும், இந் நூல் பல்லோர் புகழும்படி இருக்கின்றது. இந்நூலில் அமைந்துள்ள சொல் நயத்தையும், பொருள் நயத்தையும் பாராட்டி எழுதும டாக்டர் சாமிநாதையரவர்கள் இதைப் படிக்கும்பொழுது இடையிலே வைத்துவிட்டு வேறொன்றைச் செய்தற்கு மனம் வரவில்லை என்று கூறுகின்றார்கள். இந்நூலில் வருகின்ற வருணனைகள், இதுவரைக் கேட்கப்படாத புதிய கற்பனைகளாக அமைந்துள்ளதைக் கண்டு, உடுமலைப்பேட்டை M. R. கந்தசாமிக் கவிராயரவர்கள் அதிசயிக்கின்றார்கள். தமிழ் இலக்கியத்தை, இந்நூல் வளம்படுத்துகின்ற தென்பதை

ஞானபோதினிப் பத்திராதிபர் அறிந்து அறிந்து மகிழ்கின்றார். *

இன்னும் இலங்கைக் கவர்ணரின் தமிழாசிரியராயிருந்த திரு. குமாரசிங் முதலியாரவர்கள், கவிகளின் அமைப்பையும், அக்கவிகளில் பிறமொழி கலவாத முறையையும் போற்றி, இந்நூலின் பெருமையை வியந்துரைக்கின்றார்கள்.

இந்நூலின் பெருமைக்கு இன்னும் நான் வேறு சான்று காட்ட விரும்புகின்றேனில்லை.

---

* It is a book of beautiful similies, most of which are very apt and clearly illustrative and drawn directly from nature, both animate & inanimate. This interesting poem inculcating *audi alteran parten* is a substantial addition to the Tamil poetic literature and must commend itself to the lovers of Tamil, old & young.

*April 1898* GNANABOTHINI

It compares favourably, in sweetness and sentiments, with similar works of recognised merit in our extensive Tamil literature, while it bears many marks of originality. The purity of diction has struck me specially as worthy of commendation. I note with pleasure that you have not followed the tendency of the times to introduce foreign elements into our literature, even when there is no necessity for so doing, and thus to cultivate a style which, at the present rate of corruption, is likely before long so seriously to affect the historic individuality of our language as to render the existing literature almost un-intelligible and useless, and that wherever Sanskrit words occur in the text they are presented in Tamil guise. It is this, more than anything else, from a strictly literary point of view that adds to grace and charm of "*Kombi Viruttam*". I consider your work a valuable contribution to our literature.

Mr. K. C. B. Kumarakula Singh Mudaliar
Tamil interpreter to H. E. the Governor of Ceylon.

# நெல்லைச் சிலேடை வெண்பா

தமிழ்க் கவி நயமறிந்தோர், தமிழ்ப் பாக்களின் சுவையைத் திராட்சாபாகம், கதலிபாகம், நாளிகேரபாகம், என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்துக் கூறுவர். திராட்சைப் பழம், கதலி வாழைப்பழம, தேங்காய் ஆகியவைகளைச் சுவைத்து அனுபவித்தவர்கள் இநதப் பாகமுறையை நன்கு அனுபவிப்பார்கள். செம்பாகமான முறையில் சிறிதும் சிரமமின்றி அனுபவிக்கக் கூடிய தமிழ்ப் பாட்டுக்கள் — திராட்சா பாகப் பகுதியுள் அடங்கும். சிறிது சிரமப்பட்டுப் பின்னர்ப் பொருள் தெரிந்து அனுபவிக்கக் கூடிய பாட்டுக்கள் கதலி பாகப் பகுதியாகும் — மிகுந்த சிரமப்பட்ட பின்னரே சுவையறியத்தக்க முறையில் அமைநதுள்ள செய்யுட்கள். நாளீகேரப்பகுதியிற் சேரும். இந்த முறைகளை நமது முதலியாரவர்கள் நூல்களுக்கு அமைத்துப் பார்த்தால், அகலிகை வெண்பா, திராட்சாபாகமாகவும், கோம்பிவிருத்தம் கதலி பாகமாகவும், நெல்லைச் சிலேடை வெண்பா — நாளீகேரபாக மாகவும் இருக்கக் காணலாம்.

"இந் நெல்லைச் சிலேடை வெண்பா, திருநெல்வேலி என்னும் ஸ்தலத்தை முன் பாதியில் சிலேடை வகையால் சிறப்பித்தும் அத்தலத்தில் எழுந்தருளிய சிவபிரானைப் பிற்பாதியில் திரிபு வகையால் சிறப்பித்தும், கூறப்பெற்ற நூறு வெண்பாக்களையுடையது. சிலேடையும், திரிபும் செம்பாகமாகவே அமைக்கப் பெற்றிருத்தலால், சிறிது

ஊன்றி நோக்கிற் பொருள் காண்டல் எளிதே. பொருள் புலப்பட்டவுடன் மனத்தில் எழும் பெருமகிழ்ச்சிக்கு வரம்பு காணல் அரிதாம்". * என்று மு. ரா. கந்தசாமிக் கவிராயர் கூறியவாறு இந்நூலின் பொருட்சுவையும், சொற் சுவையும் அறிந்து அறிநது அனுபவிக்கத் தக்கவை.

"அருண் மணங் கமழும் பொருளின் சுவையும்
மறைதரு சொற் சுவை யமைவும்
மருவுற விசைத்த சிலேடையின் வியப்பும்,
வாய்த்தநற் கற்பனை வனப்பும்
தருபத மதுரங் கொழித்திடும் பொலிவும்
சார்திரி புயமகத் தகவும்
தெருட்டரும் யாரும் புகழ் தர நெல்லைச்
, சிலேடை வெண் பாத்தமிழ்"

என்று திருநெல்வேலி, கவிராஜ நெல்லையப்ப பிள்ளையவர்கள் கூறுவதே இந்நூலின் பெருமைக்குப் போதிய சான்றாகும். இப்புகழுக்கு இந்நூல் முழுதும் உரியதென்பதற்கு உதா ரணங்களாக இரண்டு பாட்டுக்களை மட்டும் எடுத்துச்சொல்ல விரும்புகின்றேன்.

"தேறு சைவ ருங் கணவர்த் தீர்ந்தோரும் வெண்
ணிலவில்
நீறு புனைந்திடூஉ நெல்லையே — மாறன்
அடிற்சுவடு வேய்ந்தார் அடியார் சிரமேல்
அடிச்சுவடு வேய்ந்தா ரகம்.

என்பது நெல்லைச் சிலேடை வெண்பாவில் காணுகின்ற நல்ல தொரு பாட்டு.

* விவேகபாநு — பத்திரிகை.

வெண்ணிலவினீறு = வெள்ளிய பிரகாசத்தையுடைய விபூதியை

புனைந்து இடும் = அலங்கரித்துத் தரித்துக் கொள்ளும் சைவர்களையும்

வெண்ணிலவின் = வெள்ளிய சந்திரனது கிரணத்தால்

நீறுபு னைந்திடும் = நீறி வருந்துகின்ற காதலரைப் பிரிந்துள்ள பெண்களையும் சிலேடையில் வைத்துக் கூறிய நயம் அரியத்தக்கதாகும். மற்றும் —

மாறன் அடிச்சுவடு ஏய்ந்தார் = பாண்டியன் பிரம்பினால் அடிக்க அந்த அடித் தழும்பைத் தாங்கினவர்

அடியார் சிரமேல் அடிச் சுவடு வேய்ந்தார் = அடியார் தலைமேல் தம் அடிச் சுவட்டை அணிந்தார்

என்று கூறும்பொழுது அத்திரிபு நம்மைக் கவிச்சுவையை அனுபவிக்கும்படி செய்து விடுகின்றது. திரிபு என்றால் எப்படி இருக்கவேண்டும் என்று எழுந்த கேள்விக்கு "பாட்டைப் படிக்கவேண்டும் பின்பு அந்த பாட்டின் அடிகளில் திரிபு இருக்கிறது என்று எடுத்துக்காட்டியவுடன் அப்படியா? இதில் திரிபும் இருக்கிறதா என்று வியந்து மகிழவேண்டும். அப்படிச் சொற்கள் அமையும்படி பாடுவது தான் நல்ல திரிபாகும்". என்று சின்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் சொல்லியதாக நம் முதலியாரவர்கள் அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கிறேன். இந்த அழகான திரிபு இலக்கணத்திற்கு நம் முதலியாரவர்களின் இந்நூல் மிகவும் பொருத்தமாய் அமைந்துள்ளது என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. இத்துடன் இப்பாட்டின் கடையடி,

இரண்டும்

"சேல் பட்டழிந்தன செந்தூர் வயப்பொழில், செங்
கடம்பின்
மால் பட்டழிந்தன மங்கையர் மாமனம், மாமயிலோன்
வேல்பட்டழிந்தன வேலையும் சூரனும்வெற்பும், அவன்
கால் பட்டழிந்தன என்தலை மேல்அயன்
கையெழுத்தே"

என்ற செய்யுளை நினைப்பூட்டும் போது, இறைவன் திருவடிப் பெருமையை நாமெல்லாம் உணரும்படி செய்கின்றன.

இத்துடன் திருவனந்தபுரம் Prof. P. சுந்தரம் பிள்ளையவர்களின் உள்ளத்தைக் கவர்ந்த மற்றொரு செய்யுளைக் கூறாது செல்ல என் மனம் இடந்தரவில்லை.

கோலமனை கோண்கனையக் கோண்கனில்லை முன்
னிலையில்
நீலவண நேர்வையெனு நெல்லையே—நாலிரண்டாத்
தோக்க விருந் தோடிரண்டார் தூமுக மோவ் வோன்
றனினும்
மிக்க விருந் தோடிரண்டார் வீடு.

ஒரு தலைவி, தன் தலைவனை நேரில் பார்த்து, நீலவண்ணனை நீ நேர்வாய் என்று சொல்வதும், அத்தலைவன், அத்தலைவியைப் பார்த்து, முன் இலையில் நீ லவணம (உப்பை) நேராக வைப்பாயாக என்று சொல்வதும சிலேடைப் பொருளில் அமைநதுள்ளது, பொருள் நயத்தோடு சிறிது வேடிக்கையாகக்கூட இருக்கிறது. பின்னர் எட்டுத் திக்கும இரும் தோள் திரண்டவராகிய நெல்லையப்பர் (மிக்கு அவிரும தோடு இரண்டார்) அன்றலர்ந்த செநதாமரைபோன்ற . இதழ்கள் இரண்டு உடையவர் என்று சொல்லுமபோது சொல நயமும் பொருள் நயமும் பொருநதியிருத்தல் காண்கின்றோம்.

தற்காலத்தில், சிலேடை, யமகம, திரிபுகள் தமிழ் அனபர்களால் ஒதுக்கித் தள்ளப்படுகின்றன. அப்படிப்

பாடுவது கழைக் கூத்தாடியின் வேலையைப் போன்றதே தவிர உண்மையான கவிதையல்ல என்பதும் சிலர் வாதம். அது உண்மையே. உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளை சப்த சித்திரங்களாலே உணர்ச்சி ததும்பச் சித்திரிப்பதுதான் உண்மைக் கவிதையாகும். தமிழ் இலக்கணத்திலே சொல்லணியும் ஒரு இடம் பெற்றுத்தான் இருக்கிறது என்பதை மறவாது, நேயர்கள் இந்தச் சிலேடை, யமகம், திரிபுகளை, நோக்கினால் அவர்கள் அவைகளை வெறுக்கவேண்டிய நியாயமில்லை. பொருள் நயமும், சொல் நயமும் நிறைந்த சிலேடைகளைத் தாங்கிய, இந் நெல்லைச் சிலேடை வெண்பாவும் தமிழ் இலக்கியத்திலே ஒரு இடம் பெறத்தான் வேண்டும். அதுவும் ஆங்கிலங் கற்ற ஒரு தமிழர் இவ்வளவு அழகாகச் சிலேடை, திரிபு நயம் அமையப் பாடுகின்றார் என்றால் கேட்பானேன். "இத்தகைய சிறு பிரபந்தங்கள் பாடுபவரது கவித்திறமையை நன்றாகக் காட்டவல்லன. ஆங்கில 'விற்பன்னராகிய முதலியாரவர்களியற்றிய இந்நூல் மிகச் செவ்விதின் அமைந்து விளங்குதலைக் கண்டு வியக்கின்றோம். இவைகளையெல்லாம் விரிப்பதிலும் சுருங்கச் சொல்லுமிடத்து முதலியாரவர்களைச் சிறந்த தமிழ்க்கவி என்றே முடிக்கலாம்" என்று செந்தமிழ் ஆசிரியர் கூறுவது முற்றிலும் பொருத்தமானதே.

ஓ

# கம்பராமாயண சாரம்

முதலியாரவர்கள் தமிழன்னைக்குச் செய்த தொண்டுகள் பல. அத்தொண்டுகளிலெல்லாம் சிறந்ததொரு தொண்டாகக் கருதப்படவேண்டுவது அவர்கள் கம்பராமாயண சாரம் வெளியிட்டதேயாகும். "தமிழ் நாட்டில் தமிழறிவுடைய யாவரும் தெரிந்து படித்தற்கு இன்றியமையாத நூல்களுள் கம்பராமாயணம் ஒன்று. இந்நாட்டினர் கம்பராமாயணப் பிரசங்கத்தை மிகச் சிறப்பாக மதிக்கின்றனர். இது சுவையினால் தமிழ் உலகைத் தன்வசப்படுத்தியிருக்கின்றது. இதனை எத்தனை வகையில் ஆராய்ந்து பார்த்தாலும் சலிப்புண்டாவதில்லை. அப்படியே கம்பராமாயணத்தின் தொடர்புடைய நூல்கள் எத்தனை வெளிவந்தாலும் அது தமிழ் நாட்டாருடைய ஆதரவுக்கு உரியனவாகும்" என்று டாக்டர் சாமிநாதையரவர்கள் கூறுகின்றார்கள். கம்பராமாயணம் பலரும் போற்றத்தகுந்த ஒரு அரிய நூல்தான். ஆனால் அப்புத்தகத்தின் பருமையையும், அந்நூலில் காணப்படும் பாட்டுக்களின் எண்ணிக்கையையும பார்க்கும்போது, பல்வேறு துறைகளில் பாடுபடும தமிழ் மாணவன் ஒருவனுக்கு, அந்நூல் முழுவதையும் படித்து முடித்து, அந்நூலில் காணப்படும் தமிழ் கவிகளின் சுவையை அறிந்து அனுபவிக்க முடியுமா என்பது சந்தேகம். அப்படிப்பட்ட மாணவர்களுக்கு அந்நூலில் உள்ள சாரமான பாட்டுக்களையெல்லாம் பொறுக்கியெடுத்துக்கொடுப்பதுடன் மட்டும் அமையாது அப்பாட்டுக்களில அமைந்துள்ள அரிய நயங்களையும் எடுத்துக்காட்டி அனுபவிக்கும்படி செய்தால் அத்தகையதொரு சேவையை என்னென்று சொல்வது?

ஆங்கிலத்தில் எண்ணிறந்த புலவர்கள் அருமையான பாடல்கள் பல பாடியுள்ளார்கள். ஆங்கிலப்பேராசிரியர்களைத் தவிர ஆங்கிலம் கற்ற பிற மாணவர்கள் எல்லாரும் அந்தப் புலவர்களின் பாடல்களின் நயங்களை யெல்லாம் அறியச் சாத்தியமன்றுதான். பால்கிரேவ் (Palgrave) என்ற அறிஞர் இத்தகைய மாணவர்களுக்காக 'The Golden Treasury' என்ற ஒரு தங்கப் பொக்கிஷத்தைத் தந்திருக்கின்றார். இந்த நூலை எல்லா ஆங்கிலமாணவர்களும் சிரமமின்றிப்படித்து முடித்துவிடுதல் இயலும். இந்நூலைப் படித்துமுடித்தவர்கள் ஆங்கிலக் கவிச்சுவையை முற்றிலும் அறிந்துவிடுவார்கள் என்று கூடக் கூறிவிடலாம். அத்தகைய அருமையான தமிழ்க் கவிகளின் தொகையமைத்து ஒரு நூல் தமிழகத்தில் இன்னும் வெளிவரவில்லை. விரைவில் அத்தகையதொரு நூல் வெளிவர வேண்டுமென்பதே என் விருப்பம். இதைப் போலவே ஆங்கிலப் புலவரும் நாடகாசிரியருமான சேக்ஸ்பீயர் எழுதிய நூல்கள் எண்ணிறந்தவை. அவரியற்றிய நாடகங்களையும் ஏனைய நூல்களையும சேர்த்து ஒருவர் படித்துவிட்டேன் என்று கூறுவது சிறிது கஷ்டசாத்தியமான காரியமதான். ஆனால் இந்த சேக்ஸ்பீயர் நாடகங்கள் காவியங்கள் இவைகளில் காணப்படும் அருமையான பகுதிகளையெல்லாம் திரட்டி ஒரு அறிஞர் 'Beauties of Shakespeare' என்ற பெயருடன் ஒரு நூல் வெளியிட்ட பின்னரே சிறிதே அவகாசமுடைய ஆங்கிலம் கற்ற மாணவர்களும் சேக்ஸ்பீயரின் கவிதா சக்தியையும், நாடகத்திறனையும் அனுபவிக்க முடிந்ததென்னலாம். கவிதா சக்தியிலோ நாடகத் திறனிலோ அன்றி நூலின் அளவிலோ கம்பர் சேக்ஸ்பீயருக்கு இளைத்தவ ரல்லர். அப்படியிருக்கத் தமிழகத்திலே எல்லோரும் கம்பராமாயணம படித்து முடிப்பது அருமையாகவே யிருந்தது. காரணம் — நூலின் அளவும் பாட்டுக்களின் எண்ணிக்கையுமே யென்னலாம். இப்படிப்பட்ட நாளிலே நம் முதலியாரவர்களைப்

போன்ற ஒரு ஆசிரியர்-கம்பனை-எல்லாத் தமிழ் மாணவர்களும் அறிந்து அனுபவிக்கும்படி செய்துவிடுகிறேன் என்று மார்தட்டிக்கொண்டு, அந்நூலில் உள்ள அருமையான இன்கவிகளையெல்லாம் திரட்டித் தருவதாயிருந்தால், அத்தகைய ஒரு பணியை என்னென்று போற்றுவது? முதன் முதற் "கம்பராமாயண இன்கவித்திரட்டு" என்ற தலைப்போடு சில பாட்டுகளை மட்டுமே முதலியாரவர்கள், 'செந்தமிழ்ப்' பத்திரிகையில் இன்றைக்கு பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு பதிப்பித்த பொழுது அது தமிழ் மக்களின் உள்ளத்தில் எத்தகைய உணர்ச்சியை உண்டுபண்ணியிருக்கவேண்டும் என்பதை நான் எடுத்துக்கூறவேண்டியதில்லை. இத்தகைய ஒரு திட்டத்தை அக்காலத்திலே தூத்துக்குடியில் சப்ஜட்ஜாயிருந்த ஸ்ரீ C.V. கிருஷ்ணசாமி அய்யரவர்கள் எப்படி வரவேற்றார்கள் என்பதைமட்டுமே நான் சொன்னால் அதுவே போதுமே. "இன்றைய தினமே எனக்குக்கிடைத்த செந்தமிழ் 21-ம் தொகுதி 1ம் பகுதியில் நீங்கள் எழுதியிருக்கிற கம்பராமாயண இன்கவித்திரட்டின் முன்னுரையைப் படித்து வெகு ஆனந்தமடைந்தேன். நேற்றிரவு இவ்வூர் ஆனந்த நடராஜ கான சபையின் முதல் வருடக்கொண்டாட்டத்தில் நான் அவைத் தலைமை வகித்தேன். என் முடிவுரையில் கம்பராமாயணம் வெகுமேன்மையான காவியமாயிருந்தாலும் அது வெகு விரிவாக இருப்பதனால் இக்காலத்தில் எல்லாத் தமிழபிமானிகளும் படித்து ஆனந்திக்கச் சாவகாசமில்லை என்றும், அந்தப்பெரிய காவியத்தில் உள்ள இன்கவிகளை ஆங்கிலத்தில் சேக்ஸ்பியர் மகாகவியின் கவிகளை Beauties of Shakspeare என்று தேர்ந்தெடுத்துப் பதிப்பித்ததுபோல் பதிப்பிக்கவேண்டும் என்றுமே, இந்தச் சத்கருமத்தைச் செய்யும்படி ஈசன் அருள் புரியவேண்டும் என்றும் நடராஜாவைப் பிரார்த்தித்தேன். இவ்வளவு சீக்கிரம் பிரார்த்தனை நிறைவேறுமென்று நான் கனவிலும் எண்ணவில்லை. தாங்கள் எத்தனித்த காரியம் மிகவும்

மெச்சத்தக்கது. இனி ஒவ்வொரு பாதமும் செந்தமிழ்ப் பத்திரிகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப் பேன். சர்வேஸ்வரன் தங்களையும தாங்கள் எடுத்துக் கொண்ட காரியத்தையும் அனுக்கிரகிப்பார் என்று நபபு கின்றேன். தங்களை எனக்குத் தெரியாதபோதிலும் தங்க ளுடைய நன்முயற்சியினால் ஆனந்தப்பட்டு எழுதினேன்" என்பதுதான் 4—1—1923ல் அய்யரவர்கள் முதலியாரவர் களுக்கு எழுதிய கடிதம்.

இந்நூலின் அருமை இவ்வாறிருக்க இந்நூல் எழுத நேர்ந்த காரணத்தைப்பற்றி முதலியாரவர்கள் சொல்வதை நாம் கேட்போம்.

"நான் திருநெல்வேலி வித்துவான் அழகியசோக்கநாத பிள்ளையவர்களுடன் அளவளாவிக் கலந்து பேசிக்கொண் டிருந்த ஒரு சமயத்தில், அவர்கள், கம்பராமாயணம குகப் படலத்தில் 'சுற்றத்தார்' என்ற கவி முதலிய எழு பாட்டுக் களை யெடுத்துக் காட்டித் 'தமபி! இநதப் பகுதியைப் படித்துப் பாருங்கள்' என்றார்கள். அவர்கள், கவியியற்று வதிற்போலக் கவிச்சுவை யுணர்வதிலும் பேர்பெற்றிருநத தனால், அவர்கள் காட்டிய பகுதி சிறந்ததாகத்தான் இருக்கு மென் றெண்ணி, அதனை - ஒரு முறையன்று - இரு முறை கவனமாகப் படித்துப் பார்த்து, 'நன்றாகத்தா னிருக்கிறது. ஆனால், நீங்கள் எடுத்துக்காட்டும்படியான அதிசயம ஒன்று மில்லையே!' என்றேன். அவர்கள், இது கம்பராமாயணத்திற் சிறந்த பகுதியென்று பலர் சொலலக் கேட்டிருக்கிறேன்' என்றார்களேயன்றி, அதில் இன்ன இன்ன விசேட நயங்க ளிருக்கின்றனவென்று சொன்னார்களில்லை.

அப்பகுதியில், என்னவோ சில ஆழ்ந்த உட் கிடைப் பொருள்கள் இருத்தல் வேண்டும், இல்லாவிட்டால், அது

சிறந்த பகுதியென வழங்கும் பிரபலம் பெற்றிராதென்று எண்ணி, இடையிடையே அப்பகுதியை ஊன்றிப் படித்து வந்தேன். உரையோடு கூடிய அயோத்தியா காண்டப் புத்தகங்கள் கிடைத்தவைகளிலெல்லாம் அப்பகுதிக்குக் கூறப்பட்டுள்ள உரைகளைப் பல முறை படித்துப்பார்த்தேன். பல வித்துவான்களிடம் அப்பகுதிக்குப் பொருள் கேட்கவுஞ் செய்தேன். இந்த முயற்சிகளால் நான் முதன் முதற் கண்ட சாதாரணமான பொருள்க ளன்றிப் புதுமையான பொருள்க ளொன்றும் தெரிந்தபாடில்லை. ஆயினும், அப் பகுதி படிக்கப் படிக்க இனிமை குன்றாதிருந்ததால், ஊடே ஊடே அதனைப் பொழுதுபோக்குக்காகப் படித்துக்கொண்டிருந்த ஒரு சமயத்தில் 'சுற்றத்தார்' என்ற பாட்டின் உட்கிடைப் பொருள் திடீரெனப் புலப்பட்டது.

அப்பொருள் புலப்பட்டதோடு, 'அது, மிகவும் இனிமையானது ; நிச்சயமாகக் கம்பர் கருதியது; அதை முன்னோர்கள், கண்டுதான், ' சுற்றத்தார்" என்ற பாட்டுடன் தொடங்கும் பகுதி சிறந்த பகுதி யென்று சொன்னார்கள். பின்னோர்கள், அதன் உள்ளுறை புதையற் பொருளை உணராமல், "சிறந்த பகுதி" "சிறந்த பகுதி" என்று கிளிப்பிள்ளைகள் போலச் சொல்லி வந்திருக்கிறார்கள். முன் காலத்தில் அநேகர் அறிந்திருந்த அரும் பொருள், சில காலம் மறைந்திருந்த கிரகம் திரும்பத் தோன்றினாற்போல, இப்போது தோன்றியிருக்கிறது. இவ்வாறே கம்பராமாயணம் முழுவதையும் ஆழ்ந்து ஆராய்ந்தால், கம்பர் காலத்தார் தெரிந்திருந்த அரும்பொருள்கள் மறைந்துபோனவை பல, திரும்பக் கண்டு பிடிக்கப்படலாம். "சுற்றத்தார்" என்ற கவி போன்ற இனிய கவிகளைத் தேர்ந்தெடுத்துத் திரட்டி அவற்றின் உரைகளை ஊன்றியுணர்ந்து தெளிவாகவும் எளிதாகவும் எழுதி வெளியிடல் வேண்டும்' என்ற எண்ணங்கள் தோன்றின. அந்த

எண்ணங்களின் தூண்டுதலே, கம்பராமாயண இன்கவித் திரட்டும், உரையும், கதைத் தொடர்ச்சியும் 'செந்தமிழ்'ப் பத்திரிகையில் வெளியாவதற்குக் காரணமாயிருந்தது. அந் நூல், இப்போது கம்பராமாயண சாரம் என்ற பெயருடன் வெளியிடப்படுகின்றது" என்று முதலியாரவர்கள் இந் நூலின் முன்னுரையில் கூறுகின்றார்கள். இத்தகைய நூலில் இன்று ஐந்துகாண்டங்கள் வெளியாகியிருக்கின்றன. இன்னும் ஒரு காண்டம் மட்டும் வெளிவர வேண்டியிருக்கிறது. முதலியாரவர்களது தளரா ஊக்கம் இன்னும் சில வருடங்களில் அந்தக் காண்டத்தின் சாரத்தையும் தமிழ் மக்களுக்கு தரும் என்பதே என் நம்பிக்கை.

இந்நூலிற் காணும் அருமையான கருத்துக்களை எடுத்துக் காட்டும் ஆற்றல் என் போன்றவர்களுக்கு இல்லை. என்றாலும் தமிழ் மாணவனென்றமுறையிலும் கம்பன் கவிகளைக் கற்கவேண்டும் என்ற ஆவல் மிகுதியும் உடையவனென்ற முறையிலும் நான் அறிந்து அனுபவித்த நயங்களைமட்டும் எடுத்துச் சொல்லும் விருப்பம் உடையேன். இந்த "இன் கவித் திரட்டில்" எந்த இன்கவிகளைச் சேர்ப்பது என்ற சிரமத்தைக் காட்டிலும் எந்த இன்கவிகளை விடுவது என்ற சிரமந்தான் முதலியாரவர்களுக்கு அதிகமாக இருந்திருக்கவேண்டும். ஆனால் அப்படி விடப்பட்ட இன்கவிகளின் பொருள் நுட்பங்களை யெல்லாம் அவர்கள் தேர்ந்தெடுத்த இவ்வின்கவிகளுக்கு இடையிடையே எழுதப்பட்டுள்ள வசனப் பகுதியில் வெளியிட்டுக் கம்பராமாயண சாரத்தை மாணவர் கொஞ்சங்கூட ஒழுகிப்போகும்படி விடாமல் உண்டு மகிழும்படி செய்து விடுகிறார்கள். இந்தக் கம்பராமாயண சாரத்தைப் படித்து அனுபவித்தவர் கம்பரது இராமாயணம் முழுவதையும் படித்து அனுபவித்த இன்பத்தை அடைவர் என்பது திண்ணம்.

இந்த நூலில் முதலியாரவர்கள் கம்பராமாயண இன்கவி களைத் திரட்டித் தந்ததோடு அமையாமல் அந்தக் கவிகளில் காணும நயங்களை எல்லாம் பொருள்சொல்லு முறையில் விரி வாக எடுத்துரைத்திருக்கின்றார்கள். அப்படிப் பொருள்சொல் லுபோது, தமது உள்ளத்தில் வேரூன்றியிருக்கும தம் சொந் தக் கருத்துககளை அப்பாட்டுக்களின் மேல் ஏற்றிச் சொல் லும் பிற உரையாசிரியர்களைப் போலல்லாமல், கமபர் என்ன கருத்தமைத்துப் இப்பாட்டைப் பாடியிருப்பார், அந்தக் கருத்தை உலகோர் இதுவரை அறிநது கொண்டார்களா? அப்படி அவர்கள் அறியாதிருந்தனராயின் அவர்கள் அறிந்து கொள்ளுமபடி செய்வதுதானே நாம் செய்யவேண்டிய முக்கிய காரியம என்று நினைந்தவர்களாய் அதற்காகவே பல நாட்கள் அல்ல, பல வருடங்கள் உழைத்து அநேகம் பாட்டுக்களுக்கு, இதுவரை தமிழாசிரியர்கள் காணாதிருந்த அரிய கருத்துக்களையெல்லாம் கண்டெடுத்து வெளியிட்டுத் தமிழ் மாணவர்களைப் பெரிதும் கடமைப்படுத்தியுள்ளார்கள். இதுவரையும் மனிதர் அறியாத அறிவுகளை மனித அறிவுக் களஞ்சியத்தில் சேர்த்தல் (adding something to the human knowledge) என்ற கொள்கைதான் முதலியாரவர் களிடம் அமைந்திருந்தது.

உதாரணமாக 'சுற்றத்தார் தேவரொடும் தொழநின்ற கோசலை' என்று கம்பர் சொல்லும்போது, எதற்காக இப் படிச் சொல்கின்றார் என்று சிறிதும் சிந்தியாமல், உபசார மாகச் சொல்லுவதாகவே பல உரையாசிரியர்கள் கருதி வந்திருக்கிறார்கள். "வேந்தர் வைகும் முற்றத்தான் முதற் றேவி" யானதனால் சுற்றத்தார் தொழுகின்றார்கள். "மூன் றுலகும் ஈன்றானை முன்னீன்றானைப் பெற்றதாகிய பெருஞ் செல்வம் படைத்த பெரியாள்" ஆதலினால் தேவர்கள்

தொழுகின்றார்கள் என்று கம்பர் அந்தப் பாட்டிலேயே உய்த்துணரவைத்திருக்கின்றார் என்று முதலியாரவர்கள் நயம்பட எடுத்துக் காட்டும்போது நாம் மகிழ்வது மட்டும் அன்று ஆச்சரியம் கூட அடைகிறோம். இன்னும், இராமதூதுவனாக வந்த அனுமனை அசோக வனத்தில் கண்ட சீதை,

"ஊழி ஓர் பகலாய் ஓதும் யாண்டெலாம் உலகம் ஏழும்
ஏழும் வீவுற்ற ஞான்றும் இன்றென இருத்தி"

என்று வாழ்த்திய வாழ்த்தின் அருமையை எடுத்துச் சொல்லும்போது, ஒருவர் கூனாய், நொண்டியாய்க் குருடு செவிடுமையாய்க் குட்டம் க்ஷயம் குன்மம் முதலிய கொடிய நோய்கள் பலவற்றின் வாய்ப்பட்டுத் தளர்ச்சி மிகுந்த முதிர்ச்சியடைந்து பொறுக்கமுடியாத வருத்தம் வளர அதனால் ஒரு நாள் ஒரு யுகம்போல நீள, இறந்தவினிலும் இறத்தல் நன்றென்னும்படி வாழ்நாட்களைத் தள்ளிக்கொண்டு சிரஞ்சீவியாக வாழலாம்: அப்படிப்பட்ட வாழ்விலுள்ள கேடுகள் அனைத்தையும் விலக்கவும் இப்போது அனுமானிடத்துள்ள நலங்களெல்லாம் நிலைக்கவும், அவனைச் சீதை என்றும் இன்றென இருத்தி என வாழ்த்தினாள் என்று விரிவுரை செய்கின்றார்கள். இன்றென இருத்தி - என்று கம்பர் இக்கருத்தைக் கொண்டே கூறியிருப்பார் என்பதில் ஐயமுண்டோ?

இப்படித் தனித்தனியாய் முதலியாரவர்கள் பாட்டுக்களுக்கு விரிவுரை எழுதும் நயங்களையெல்லாம் சொல்லிக்கொண்டே போனால் அதுவே 'ஒரு கம்பராமாயணம்' ஆகிவிடுமென்று அஞ்சுகிறேன்: இனிக் கம்பர் கருத்திது தான் என்று முதலியாரவர்கள் அறுதியிட்டுக் கூறும் ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் எடுத்துச் சொல்லிவிட்டு இவ் விமரிசனத்தை முடித்துக்கொள்ள நினைக்கின்றேன். கம்பராமாயணத்தின் முதற்செய்யுளான 'உலகம் யாவையும்

தாமுள ஆக்கலும்" என்று தொடங்கும் கடவுள் வணக்கப் பாட்டிற்கு விரிவுரை சொல்லுதலை வியாஜமாகக் கொண்டு கம்பரது கடவுட் கொள்கையை ஆசிரியர் அவர்கள் விரிவாக எடுத்துரைக்கிறார்கள். கடவுள் சமயங்களெல்லாவற்றையும் கடந்த பரம்பொருள் என்பதும் கடவுளின் ஓரோர் அம்ச பூதரே ஒவ்வொரு சமயத்தாரும் கொண்டாடுகின்ற கடவுள் என்பதும் கம்பர் கொண்ட கடவுட்கொள்கையாகும். இராம கதையிலே, விட்டுணுவின் அவதாரமான ராமனைப் புகழும் முகத்தால விட்டுணுவைப் பரம்பொருளாகக் கொண்டு பல முறை கூறியுள்ள கமபர் சிவனைப்பற்றிப் பேசநேர்ந்தபொழு தெல்லாம் அவனையே பரமபொருளெனக் கருதும்படி கூறி யிருக்கிறார். எச்சந்தர்ப்பத்தில் எந்த மூர்த்தியின்பால் பரம் பொருள் முனைந்து நிற்கின்றதோ அந்தச் சந்தர்ப்பத்தில் அநத மூர்த்தியைப் பரமபொருளென்று உபசரித்துக் கூறும் முறையாலே, ராமனை "யாரினும் உயர்நதமூலத்திருவராமொரு வர் ஏகமூர்த்தி" என்று அழைக்கின்றார். பிரமா, விட்டுணு, சிவன் எனற மூன்று திரிமூர்த்திகளுக்கும் அப்பாற்பட்ட வனே பரமபொருள். அப்பரம்பொருளே ராமனாக அவதரித் துள்ளான் என்ற கருத்தை உள்ளடக்கி,

"செங்கண்மால் நான்முகன் சிவன்என்றே கோலோ
எங்கள் நாயகனையும் நினைந்தது" என்றும்

முளரிமேல் வைகுவான் முருகற்றந்த அத்
தளிரியல் பாகத்தான், தடக்கை ஆழியான்,
அளவில் ஒன்றுவரேயன்றி ஐயமில்
கிளவியர் தனித்தனி கிடைப்பரோ துணை"

என்றும் கம்பர் கூறும் நயத்தை நாம் அறியும்படி ஆசிரியர் செய்துவிடுகின்றார்கள். "கம்பர் உயிருக்குயிராகவும், உணர் வுக்குணர்வாகவும் ஒப்புயர்வற்றதாகவும் கொண்ட கடவுள் எவ்வெத்தொழிலையும் நடத்துவோரையும் நடத்துவிக்கும்

முழுத்தனிமுதற் கடவுளாய்ச் சமயாதிகள் தத்தம் மதங்களில் அமைவதாக அரற்றி மலைந்தனர் ஆகும்படி செய்து நின்ற சமயாதீதப்பழம்பொருளான பரமபதியேபாம்" என்று ஆசிரியர் முடிக்கும்போது, எவ்வளவு அழகாக் கம்பரது கடவுட் கொள்கையை நாம் எல்லாம் அறியும்படி செய்துவிடுகின்றார்கள்.

இனி - 'வாலிவத நியாயத்தை' *எடுத்துக் கூறும் பொழுதும் நம் முதலியாரவர்கள் தம் ஆராய்ச்சித் திறனைப் பெரிதும் காட்டுகின்றார்கள் என்று கூறலாம். இராமன் மறைந்து நின்று தன்மேல் அம்பெய்து வீழ்த்தியதைப் பல

---

* "நேருமன்று மறைந்து நிராயுதன்
மார்பின் எய்யவோ வில்லிகல வல்லதே."

என்றதற்கிடமாக, இராமன் மறைந்துநின்று வாலியைக் கொன்றது, அநியாயமானதென்றும், அநியாயமன்று, நியாயமானதே யென்றும், வான்மீக ராமாயணம் தோன்றிய நாள்தொட்டு இந்நாள் மட்டும், பல்லாயிர வருடங்களாக, ஓய்வின்றி நிகழ்ந்துவந்த விவாதம், இனித் தலையெடாதபடி நிர்விவாதமாக முடிந்த முடிவுபெறும்படி செய்துவிட்டது, கம்பராமாயண சாரத்தில் வாலிவதைப் படலத்தில் வாலிவத நியாயம் என்ற தலைப்பின்கீழ் உள்ள அருமையினும் அருமையும் உண்மையினும் உண்மையுமான உரையென்பதும் இந்த உரைப்பகுதி ஒப்புயர்வற்றதென்பதும் அறிஞர் பலருடைய அபிப்பிராயம்.

இலக்கிய ஆராய்ச்சி யுலகத்தில், வாலிவத நியாயாநியாய விவாத சம்பந்தமாக முதலியாரவர்கள் விவரித்துச்செய்த முடிவு, மேலைக் கண்டத்து விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சி யுலகில், உயிர்கள் முந்திய உயிர்களினின்றே உண்டாகின்றனவா? (முந்திய உயிரினின்று பிறவாமல்) தாமே உற்பத்தியாகக்கூடியனவா? என்ற நீண்டகால வாதப் பிரதிவாதத்தை டிண்டால் என்ற விஞ்ஞான சாஸ்திர மேதாவி யாரும் என்றும் மறுக்கமுடியாதபடி முடிவுபெறச் செய்ததுபோலு மென்று சொல்லலாம். (பேராசிரியர் டிண்டால் இயற்றிய "வாயு மண்டல மிதப்புப் பொருள்" Floating matter of the Air—என்ற நூலைப் பார்க்க).

படப் பழித்துரைத்த வாலியே பின்னர் அந்த இராமன் இவ்வுலகிலே அறத்திறன் அழியும்படி ஒன்றும் செய்யான் என்று எண்ணி அவனை வணங்கினன் என்று கம்பர் சொல் லிதை எடுத்துக்கொண்டு மோட்சமடையும் பக்குவம் முற்றி யவர்களுக்கு முத்தியளிக்க விரும்பிய பரம்பொருள், மனித வடிவத்துடன் வாலியின் எதிரே ராமனாகத் தோன்றித் தன் அருட்பார்வையால் அனுக்கிரகித்து அவனுக்கு ஞான திருஷ்டி யளிக்க, அந்த ஞானதிருஷ்டியினாலே வாலி இராமனை நோக் கியபோது தன்னை இராமன் மறைந்து நின்று அம்பெய்து வீழ்த்திய செயல் உயிர்கள் செய்யும வினைக்கும் வினைசெய் விதத்துக்கும தக்கவாறு பலனூட்டும் பரம்பொருள் தருமா னுசாரமாகச் செய்த நீதிச்செயலென்று அனுமானமாகவன் றிப் பிரத்தியட்சமாகத்தெரிந்தான் என்று முதலியாரவர்கள் கூறுகின்றார்கள். வாலி, தன்முனைப்பின்றி மனம் அடங்கத் தற்போதம் கழன்று பரபோதம அடைந்து சீவன் முத்த னான் என்பதைக் கம்பர் - "அவியுறும் மனத்தனாகி" என்ற தனாலும், "ஆவிபோம் வேலைவாய் அறிவு தந் தருளினாய்" என்பதனாலும் பெறவைத்தார் என்று நயம்படக் கூறுகின்றார் கள். இவ்வாறு கம்பரது ராமாயணத்தில் மறைந்துகிடந்தன வும், இதுவரை உலகோர் கண்டுகளியாதனவுமான பல அரு மையான இனிய அரிய கருத்துக்களை இக்கம்பராமாயண சாரம் என்னும் நூலின் வாயிலாக முதலியாரவர்கள் தந்து உதவு கிறார்கள். இதுபற்றியே 'மதிநுட்பமும் நூலறிவும் உடைய இவர்கள் இளமை தொடங்கியே கம்பராமாயணத்தைப் படித்து இன்புற்றதுடன், அந்நூலை எத்தனையோ முறை ஆழ்ந்து ஆராய்ந்து படித்திருத்தலின் அப்பொழுதப்

பொழுது கண்ட அரிய பொருள்களைத் தொகுத்து இப் புத்தகப் பகுதியில் வெளியிட்டிருக்கிறார்கள். பல காலம் தேர்ந்து தேர்ந்து இன்புற்று வெளியிடப்படுவதாதலின் இப்புத்தகம் முதலியாரவர்களுடைய பலவகை ஆற்றல் களையும் ஆராய்ச்சி முறைகளையும் தெரிவிக்கின்றது" என்று டாக்டர் சாமிநாதையர் அவர்கள் இந்நூல் முகவுரையில் எழுதுகின்றார்கள். இதுவரை கம்பர் கவியைப் படித்துணராத மக்களுக்கு, ஒரு புதிய உலகத்தையும், படித்துச் சுவைத்த மாணவர்களுக்கு இன்னும் புதிய புதிய இன்பங் களையும், இந்நூல் காட்டும் என்ற பொருள்பட, சுவாமி விபுலானந்தர் அவர்கள் எழுதுகிறார்கள்.*

பத்திரிகைகளிலும், கடிதமூலமாகவும் வந்த மதிப்புரை களோ கணக்கில.

* In conclusion, one can confidently say that this book will open the portals of the wide expanse "that deep browed Kamban ruled as his demesne" to those that have not yet entered into those vast realms and to the fortunate few who have entered herein, the book will serve as a guide to lead them to spots of fresh delight.

—*Swami Vipulananda.*

★

# சருவசன செபம்.

இதுதான் முதலியாரவர்கள் எழுதியுள்ள நூல்களி லெல்லாம் உருவததில் சிறியது. ஆனால் இதைவிட ஓர் அருமையான நூலை முதலியாரவர்களைத் தவிர மற்றவர் களால் தமிழருக்கு உதவ முடியாது. சம்பத்து ராய சயின ரின் எதிரிடைகள் இசைவுறுதல (Confluence of opposites by Champat Rai Jain) என்ற நூலின் இறுதிப் பகுதியை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதே இந்நூல்.

"எவ்வேந் நாட்டினர் எவ்வெவ்வினத்தினர்
எவ்வெவ் மதத்தினர் எனினும் ஆண்பெண்ணெனும்
இருபாலினர்க்கும் ஏற்ற பிரார்த்தனை"

என்று முதலியாரவர்களே இந்த நூலுக்கு முகவுரை எழுதுகிறார்கள். நூற்றுமுப்பததேழு அடிகளால் நிரபபிய இந்தச் செபம,

"மண்முழுவதும் ஒருமனையா, மண்வாழ்
மக்கட்டோகுதி அம் மனைவளர் குடியாக்
குணிப்பரு நாடா அக்குடியில் உள்ளாரா,
(ஒருகுடி உள்ளவர் ஒருவரோடொருவர்
போராடிடல் ஒருபோது மின்றி
அன்போடு வாழ்தல் அறநெறி ஆதல்போல்)
ஒரு நாட்டினர் மற்றொரு நாட்டினரோ(டு)
அமர்புரிவதை ஒழித்(து) அன்பராய் வாழ்தல்
அறநெறியென அறிந் தடைக நல் வாழ்வே"

என்று முடிகின்றது. இத்தகைய அறவுரை யுத்த கோஷம் கோஷிக்கும் கீழ்நாட்டிலும் மேல்நாட்டிலும் இன்று எவ்வளவு அவசியம என்பது நான் சொல்லவேண்டியதில்லை.

"நல்லோர் இணக்கமே நான் இணங்கிடுக;
நல்லோர் நினைவே நான் நினைந்திடுக;
நல்லோர் உரையே நான் உரைத்திடுக;
நல்லோர் நடையே நான் நடந்திடுக;

* * * *

உயிர்களை வருத்தல் ஒழிவேனாக;
உயிர்போமெனினும் மெய் உரைப்பேனாக;
களவினைக் கனவிலும் கருதேனாக;"

என்றெல்லாம் ஒருவன் உண்மையான பக்தி சிரத்தையோடு செபம் பண்ணுவானானால் அவன் பெறும் பேற்றை என்னென்று சொல்லுவது.

"வாழ்வு வரின் இறுமாந்திடேனாக;
தாழ்வுறு மேனின் மனம் தளர்ந்திடேனாக;
செய்தற்குரிய சிறிய கடனையும்,
எய்தற்குரிய பயனை எண்ணாமல்,
அப்பயன் அடைந்திட அவாவுவார் யாரினும்
விருப்போடு செய்யும் விழுமியேனாக"

என்ற ஆறு சிறு அடிகளில், உலகோர் போற்றும் உயரிய நூலான பகவத் கீதையின் பொருளெலாம் அடங்கியுள்ளதன்றோ?

பகைவர்க்கும் அன்புசெய் பண்பினேனாக என்று ஆசிரியர் செபம் செய்ய நம்மைத் தூண்டும்போது, க்வுதம புத்தன் கழறிய உரையெலாம் நமக்கு விளக்கமுறுகின்றது.

பகையைப் பகையால் பாற்ற முயலல்
தழலைத் தழலால் தணித்தல் போலாம்;
அழலை நீரால் ஆற்றல் போல
அன்பால் பகையை ஆற்றலே ஏற்றதாம்;
பலத்தைக் கொண்டு பகையை வென்றோன்
உடலையே வென்றோன்; உளத்தை வென்றோனலன்.
அன்பால் பகைவனை ஆட்கொண் டவனே,
உடம்போ(டு) உள்ளமும் ஒருங்காட் கொண்டோன்.
பலத்தால் வெல்லப் பட்ட பகைவன்
சமயம் வாய்க்கில் சலஞ் சாதிப்பன்;
அன்பால் வெலப்பட் டவனோ
உற்றுழி உதவும் நற்றுணை யாவனே."

என்று கவுதமபுத்தர் கருத்தை அமைத்து முதலியாரவர்களே, பகைவர்க்கும் அன்புசெய் பண்பினேனாக என்ற அருமையினும் அருமையான அடிக்கு விரிவுரை செய்திருக்கின்றார்கள்.

இப்படியே, இந்நூலில் உள்ள அடிகள் முழுவதையும் நான் சொல்லித் தமிழன்பர்கள் அறிவதைவிட, அவர்களே நேரில் படித்து அதன்படி யொழுகப் பிரயத்தனப்பட்டு, அந்நூலால் நற்பயன் பெறவேண்டும் என்று சொல்வதன்றி வேறு சொல்ல அறியேன். "The sentiments expressed are so ennobling and the verse flows with such inspiring cadence that I am simply delighted with the piece. It already bears that stamp of perfection which cannot be improved" என்று காலஞ்சென்ற கனம் மந்திரி Sir T. N. சிவஞானம் பிள்ளையவர்கள் இந்தச் செபத்தைப் பற்றி எழுதுகிறார்கள். "எளிய நடையில் எவ்வளவு உயர் கொள்கைகள்! சிறிய அறையொன்றில் அநந்தமான ஐசுவரியத்தைப் பார்ப்பது போலிருக்கிறது" என்று திரு. பி. ஸ்ரீ ஆச்சாரியார் அப்படியே ஆச்சரியப்படுகின்றார்.

# சுவர்க்க நீக்கம்

## முதற் காண்டம்.

"இவ்வுலகத்திலுள்ள மக்கள் ஒவ்வொருவர் வீட்டின் தலைவாசல் தோறும் ஒரு மோட்டாரை நிறுத்துவேன்" என்று மோட்டார் கம்பேனி அதிகாரியான ஹென்றி போர்டு (Henry Ford) என்ற துரைமகனார் சொல்லுகிறார். அது போலவே நமது தமிழ்க் கவிராயர் ஒவ்வொருவரும், ஊருக்கொரு தல புராணமும், கோவிலுக்கு ஒரு அந்தாதியுமாகப் பாடி, தமிழ் இலக்கியத்தை "வளம்படுத்தி" விட்டார்கள். இப்புலவர்கள் எல்லாம் "ஆடுசாபிட்டியில் அவதரித்த அஷ்டாவதானம் மகா வித்துவான் அம்மையப்ப பிள்ளை*யவர்களின்" ரகத்தைச் சேர்ந்தவர்களேயாவர். தமிழ்ப் புலவர்கள் எல்லாம இப்படியே ஸ்தல புராணங் களும், அந்தாதிகளும், இரட்டை மணி மாலைகளும் பாடிக் கொண்டிருக்கின்ற காலத்திலே, ஆங்கிலம் கற்ற தமிழர் ஒருவர், ஆங்கில மகாகவியான மில்டன் எழுதிய சுவர்க்க நீக்கம் (Paradise Lost) என்ற அருமையான நூலைத் தமிழில் விருத்தப்பாவில் மொழி பெயர்த்து, தமிழ ரெல்லாம் அனுபவித்து விடும்படி கொடுத்துவிடுவது என்று ஆரம்பித்தால், அத்தகைய துணிவை என்ன என்று சொல்வது? இத்தகைய துணிச்சல் நமது முதலியாரவர்கள் போன்ற ஒரு "தமிழ்ப் புலிக்கே" ஏற்படும் என்பது நாம் அறிந்த உண்மை.

---

* ராஜமையர் — கமலாம்பாளில் வருகின்ற தமிழ்ப் பண்டிதர்.

மில்டன் எழுதிய, Paradise Lost, Paradise Regained என்பவைகள் ஆங்கிலத்தில் பெருங்காப்பியங்கள். இக்காப்பியங்கள், மொழி பெயர்க்கப்படாத மேல் நாட்டு மொழிகள் இல்லை என்றே சொல்லலாம். தமிழிலும், இந்த சுவர்க்க நீக்க நூல, வேதக்கண்ணு ஐயர் அவர்களால் "ஆதி நந்தவனப் பிரளயம" என்ற நாடக நூலாகவும், தாமஸ் வேதநாயக நாடாரவர்களால் "பூங்காவனப் பிரளயம்" என்ற அம்மானை நூலாகவும், மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. இந்நூலுக்கு எத்தனை மொழி பெயர்ப்பு இருந்தாலும் தகும் என்று கருதி, நமது முதலியாரவர்களும் விருத்தப்பாவில், இந்த சுவர்க்க நீக்கத்தின் முதற்பாகத்தை மொழி பெயர்த்துத் தந்திருக்கிறார்கள்.

Three poets in three distant ages born*
Greece, Italy and England did adorn
The first in loftiness of thought surpassed;
The next in majesty ; in both the last
The force of nature could no further go;
To make a third, she joined the former two"

என்று டிரைடன் (Dryden) என்ற ஆங்கிலப் பேராசிரியர் மில்டனைப் புகழ்கின்றார். இக்கருத்தை முதலியாரவர்கள் அப்படியே மூன்று பாகங்களில் மொழி பெயர்த்துத் தருகிறார்கள்.

"ஏன்ற ஒரோன்றுக்(கு), இடைநெடுங் காலங்கள் இறந்த
மூன்று காலத்துத் தோன்றினர் மூன்றுமா கவிஞர்;
ஈன்றவான் கிரீஸ், இத்தலி, இங்கிலாந்தென்னும்
ஆன்ற தேயங்கட்(கு) அணியென விளங்கினர் அனையார்;

---

* Written at the foot of White's portrait of Milton in the edition of 1688.

"முன்னர் உற்றவன் உயர்அர்த்த கவுரவ முதிர்ச்சி
தன்னில் ஒப்புயர் வற்றவன், தகு செய்யுள் நடையின்
உன்ன தத்தினில் அத்தகை யோன்நடு உற்ருேன்
பின்னு தித்தவன் இரண்டினும் எவரினும்
பெரியோன்;

"இயம்பும் முன்னேயோர் இருவரைத் தந்திட்ட
இயற்கை,
தியங்கி, அன்னதின் மிக்கது செய்யவல் லாதே,
தயங்கும் அம்முனோர் இருவர்கள் தம்மையும்
இயைத்து
வயங்க லுற்றமுன் ருவனே வகுத்தது மாதோ."

என்பவையே முதலியாரவர்கள் பாக்கள். ஹோமர் என்ற மகா கவியின் அர்த்த கவுரவத்தின் முதிர்ச்சியையும், வெர்ஜில் என்ற கவியின், செய்யுள் நடையின் உன்னதத்தையும், இவ்விருவரும் ஒருங்கு சேர்ந்தாலன்ன பெருமை வாய்ந்த, மில்ட்டனது கருத்து நடையிரண்டும சிறந்த காவிய நயத்தையும் முதலியாரவர்கள் டிரைடன் அடிச்சுவடுபற்றி எடுத்துரைக்கும் முறை வெகு அழகாக அமைந்துள்ளது.

இன்னும் இக்காப்பியத்திற்குப் பாயிரம கூற முகத்தால்,

"காதை நாயகன் கடவுளே; கதைநிகழ் களனே
மீத லத்தோடு, பாதலம், பூதலம்; விடயம்
பேதம் இறிமாந் தருக்கெல்லாம் உரித்(து) என"

ஆசிரியர் சொல்லும்போது, நாம் காப்பியத்தின் பெருமையை மட்டும் அன்றி அதைத் தமிழில மொழி பெயர்க்க முனைந்துள்ள முதலியாரவர்கள் பெருமையையும் அறிகிறோம். இம்மட்டோ, இமமொழி பெயர்ப்பு எவ்வாறமைந்துள்ளது என்பதை ஒரு அழகிய உவமையால் விளக்க

விரும்புகின்றார்கள் முதலியாரவர்கள். ஆங்கிலமும் அறிவு நூலும (Science) கற்ற முதலியாரவர்கள் மில்டனைச் சூரியனுக்கும், அவன் கருத்துக்களைச் சூரிய கிரணங்களுக்கும் தம் அறிவைச் சந்திரனுக்கும் சபையோரைப் பூமிக்கும் உவமை கூறி, சூரியனது கிரணத்தில் ஒரு சிறிதே பெற்று, அதை உலகத்தில சந்திரன் பரவச் செய்தது போல் இந்த மொழி பெயர்ப்பு அமைந்துள்ளது என்று கூறுகின்றார்கள்.

> " உரைமி லிட்ட ஆ தவன்கருத் (து)ஆயபே ரோளியுள்
> விரவும் ஓர்சிறி (து) எளியனேன் வெண்மதி மீதே
> அறிது வீழ்ந்த(து) அம்மதிநின்று பரவுவ தாகிப்
> பெரிய தாயவை யகமுற்ற(து) இம்மொழி பெயர்ப்பே"

என்பதுதான் முதலியாரவர்கள் பாட்டு. இப்பாட்டில் காணப்படும் உவமை நயம சிந்தித்து சிந்தித்துப் பாராட்டத் தக்கதாகும். மொழி பெயர்ப்புக்குப் பாயிரம் கூறும் இடத்திலேயே இவ்வளவு அழகிய உவமைகளும் அரிய கருத்துக்களும் காணப்படுகின்றன என்பதே இந்நூலின் பெருமைக்கு ஓர் அறிகுறியாகும்.

இந்நூலைப்பற்றி நினைக்கும் பொழுதெல்லாம் இது ஒரு மொழி பெயர்ப்பு என்பதை மறந்துவிடுதல் கூடாது. மொழி பெயர்ப்பும் சாதாரணமான மொழி பெயர்ப்பில்லை. ஆங்கிலக் கவியில உள்ள கருத்துக்களை தமிழில் விருத்தப் பாவில் மொழி பெயர்த்ததாயுள்ளது. அப்படி மொழி பெயர்க்கும் போதும மூலநூற் கருத்துக்கள் ஒருசிறிதும் சிதைந்துபோகாதவாறு அமைத்து, பாக்கள் இயற்றப் பட்டிருக்கின்றனவென்றால், அதை வியப்பாகத்தான் நோக்க வேண்டியிருக்கிறது. சுவர்க்க நீக்கம முதற் காண்டத்தில் எல்லா ஆசிரியர்களும் மாணவர்களும் போற்றும் அழகான பகுதி ஒன்று உண்டு. — பரமண்டலத்திலிருந்து அந்தகாரம்

நிறைந்துள்ள நரகத்திலே சாத்தானும் அவனைச் சேர்ந்தவர்களும் தள்ளப்பட்டபோது, சாத்தான் தான் வந்தடைந்திருக்கும் புதிய இடத்தை எப்படி ஏற்றுக் கொள்கிறான் என்பதை ஆங்கில மகா கவியான மில்டன்

"Is this the region, this the soil, the clime"
Said then the lost Archangel, "this the seat
That we must change for heav'n ? – this mournful gloom
For that celestial light ? be it so, since He,
Who now is sov'reign, can dispose and bid
What shall be right: farthest from Him is best
Whom reason hath equalled, force hath made supreme
Above His equals. Farewell, happy fields,
Where joy for ever dewells! hail, horrors! hail.

Infernal world! and thou profoundest hell,
Receive thy new possessor; one who brings
A mind not to be changed by place or time.
The mind is its own place, and in itself
Can make a heav'n of hell, a hell of heav'n
What matter where, if I be still the same,
And what I should be, all but less than He
Whom thunder hath made greater ? Here at least
We shall be free ; th' Almighty hath not built
Here for His envy, will not drive us hence :

Here we may reign secure, and in my choice
To reign is worth ambition, though in hell:
Better to reign in hell, than serve in
heav'n."

என்று அழகாக எழுதியிருக்கிறார். இந்த அழகான ஆங்கிலப் பகுதியை நமது முதலியாரவர்கள் ஆறு அழகிய விருத்தப் பாக்களில் மொழி பெயர்த்திருக்கிறார்கள்.

"இன்ன நாடோ, இந்நிலமோ, இவ்வெல்லை குளிரும் வெப்பும்உறும்
இன்ன இடங்கொல் லோதுறக்கத் தீடா யாம் எற் றிடக் கடவேம்
இன்னல் தரும்இவ் இருளோஅவ் எல்லுக் கிணையா ஏற்பதும்"
என்(று)
இன்ன காலை அழிந்துளதூ துவர்கோன் இயம்பிப் பினும்
இசைப்பான்.

"நன்றற்றாக, இன்றிறையா நண்ணும் அன்னான் எதுநீதி
என்று விதிக்க விதித்தபடி இயைக்க வல்லா(ன்) ஆதலினால்.
ஒன்றும் மனோத்தத் துவங்களினொத் தாற்ற மதனால் நமின் மேலாத்
தோன்றும் அவன்பால் நின்று நெடுந் தூரத் திருத்தல் நனிநன்றே.

"தருக விடைநீர் களிப்பென்றும் தங்கும்ஆனந் தத்தலங்காள்!
வருக வருக பயங்கரங்காள்! வருக தாழ்ந்த பிலஉலகே!
அரிய ஆழ நரகே!கா லத்தால் இடத்தால் மாறிடுதல்
மருவா மனத்தேன் நின்புதுக்கா வலனேன் வரவேற் றிடுவாயே.

"மனமே தனக்கு வாழிடமாம், மனம்தன் னுள்ளே பவர்க்கத்தைத்
துனுவான் சுவர்க்க மதுவாக்கச் சுவர்க்கம் பவர்ககம் ஆக்கவல்லும்.
தனிவான் உருமின் எனின்உயர்ந்தோன் தனக்குத் தாழ்வாம்
தாழ்வொழிய
எனவாற் றானும் குறையில்லா திருக்கும் முறையே உளன் என்னில்

"முன்னம் இருந்த படி என்றும் முற்றும் உளனேல், யாஙகணியான்
மன்னி யிடினும் அதனுலென்? மற்றிங கெனினும் சுவாதீனம
துன்னி வாழ்த்தும்; இஙகணியாம் துய்க்க நோக்கி அழுக்கறுக்கும்
அன்ன பொருள்ஒன் றும்படைத்தான் அல்லான் எல்லாம
வல்லானே."

"இங்கு நின்று நமைத்துரத்தான்; யாம்ஓர் கவற்சி யிலாதாட்சி
இங்கு புரிய லாம்; நரகின் எனினும் இறைமை நயத்தகும்; ஈ(து)
இங்கென் கருத்தால்; வானிடைத்தொண் டியற்று குடியா
வாழ்தலினும்
இங்கு நிரையத்(து) இறைவனய் எய்தல் இனிய தினியதரோ."

இந்த பாட்டுக்களின் அடிகளை ஆங்கிலப் பாட்டுக்களின் அடி களோடு ஒப்பிட்டு நோக்கினுலதான், மொழி பெயர்ப் பாளரின் திறம் விளங்கும. எவ்வளவு பொருத்தமாக, மூல நூல் கருத்துக்களெல்லாம் மொழி பெயர்ப்பில் கொண்டு வரப் பெற்றிருக்கின்றன. மொழி பெயர்ப்பு, எவ்வளவு உண்மையாகவும், திட்டமாகவும் அமைநதிருக்கின்றது என்று T. வாக்கலகயர் அவர்கள் அப்படியே வியநது விடுகிறார்கள்.*

முதலியாரவர்களின் மொழி பெயர்ப்புத் திறம் இருக்கட் டும். முதலியாரவர்கள் தாம பாடி யிருக்கும விருத்தப் பாவில் கையாண்டிருககும நடை கூட, மில்டன் போன்ற

---

* "The explanations of Milton's poem are wonderfully accurate and show that you have expended great pains over them. Of the Correctness of your poety also, there is no doubt. Those who know Milton's Paradice Lost will be able to see for themselves how faithful your tendering is"

— Extract form the Letter of Rev : T. Walker M. A.
29—12—1896.

மகா கவிகளை மொழி பெயர்ப்பதற்கென்ற ஒரு தனி நடை யாகவல்லவா இருக்கின்றது! முதலியாரவர்களின் அகலிகை வெண்பா. கோம்பி விருத்தம் முதலிய நூல்களைப் படித்தவர்கள். அவ்வளவு சரளமான நடையில் பாட்டுக்கள் எழுதிய இநத முதலியாரவர்களா, இப்படி சுவர்க்க நீக்க விருத்தம் எழுதியிருக்கிறார்கள் என்று அதிசயிக்கலாம. ஆனால் இந நூல் இன்றைக்கு ஐம்பது வருடங்களுக்கு முன் இயற்றப்பெற்ற தென்பதையும், இநத நூல் எழுதுங் காலத்தில் ஆசிரியர் அவர்கள், காஞ்சிப்புராணம், தணிகைப் புராணம் முதலிய நூல்களில் திளைத்துக்கொண்டிருநதார்கள் என்பதையும மட்டும் நினைவில் வைத்துக்கொண்டால், நமக்கு அதிசயம ஏற்படவேண்டிய அவசியமேயில்லை. இத்தகைய நடையில் ஒரு வேகம் இருக்கிறது என்பது என்னவோ உண்மை தான். அந்த நடைதான் மில்டனை மொழி பெயர்க்கப் பொருத்தமானது என்பதையும் மறுக்க முடியாது. அந்தக் காலத்தில் இந்த நூல் வெளி வந்ததும் இநத நூலில் கையாளப்பட்டிருக்கும நடையைப் புகழாத புலவர் இல்லை.* இந்த நூலில், மிலிட்டனது கருத்துக்களைச்

---

* Extract from the opinion of Sri. S. Muthu Ayyar in Vivekachintamani.

"Many portions of the work are characterised by a choise diction, dignity of style and sweetness of rhythm. The author has also taken care to avoid verbosity and the use of unnecessary allusions and has beautifully brought out all the ideas of Milton, however difficult the rendering of them may be, to the admiration of the learned."

Extract from the letter of Sri. V. G. Suriyanarayana Shastri B.A., Senior Tamil Pandit, Madras Christian College.

"The language of the book is classical and the metre which you have used is very well adopted to the grandeur of the poem"

Extract from the letter of Rev: T. Walker M. A.,

"The Tamil prose explanations etc are written in the best of styles and it would be worth anyone's while to buy and study the book, if only for the beauty of the diction of the prose section.

செய்யுளில் மொழி பெயர்த்ததோடு மட்டுமல்லாமல் ஆசிரியர் எல்லாத் தமிழரும் எளிதில் அறிந்து கொள்ள இயலுமாறு வசனத்திலும் எழுதியிருக்கிறார்கள். வசன நடை மிகவும் நன்றாயிருக்கின்றது. மில்டனது சரித்திரம், நூற் பெருமை, நூலில் காணும் விஷயங்கள் எல்லாம் நல்ல முறையில் வசனத்தில் எழுதப்பட்டுள்ளன. இந்த வசன நடையின் அருமையைத் தெரிந்தே மில்டன் சரித்திரப் பகுதி பலமுறை சர்வ கலாசாலைப் பாடமாக வைக்கப் பட்டிருக்கிறது.

இந்த நூலின் பெருமையை இப்படியே சொல்லிக் கொண்டே செல்ல விருப்பமில்லை. மேல் நாட்டிலிருந்து வந்து தமிழை நன்கு கற்று, தமிழ் மொழியின் பெருமையை உலகறியச் செய்த பெரியாரான G. U. போப் ஐயரவர்கள், இந்நூலுக்கு விரிவான விமரிசனம்* எழுதியிருப்பதொன்றே இந்நூலின் பெருமைக்குப் போதியதாகும். போப் ஐயரவர்கள் - முதலியாரவர்கள் புலமையை எப்படி மதிக்கிறார்கள் என்பதை - அவர்கள் மொழி பெயர்த்துள்ள திருவாசக முகவுரையிலும் காணலாம். போப் என்ற பேராசிரியர் தமிழகத்தில் எத்தனையோ புலவர்களுடன் பழகியிருக்கலாம், எத்தனையோ ஆசிரியர்களோடு உறவாடியிருக்கலாம். அப்படி யெல்லாம் இருந்தும்கூட, அவர்கள் உண்மையான தமிழ் புலமைவாய்ந்த பெரு மக்களென்று மதிப்பிட்டுக் குறித் திருப்பது, நமது முதலியாரவர்களையும், புரோபசர் சுந்தரம் பிள்ளையவர்களையும் மட்டுமே. திறமான புலமை முதலியா ரவர்களிடத்தில் அமைந்திருந்தது என்பதற்கு இதைவிட வேறு சான்று வேண்டுமோ ?

---

*It is a strange thing that the great English Christian Epic should be reproduced, in this end of the century, in Tamil, for the use principally of non-Christians, and that

the translator himself should be a non-Christian. One of the readers of the book in India has called it a *Christian Puranam,* and this in fact it is An objection which we should have felt inclined to urge, if consulted as to the benefit of the translation of Paradise Lost, would have been founded upon the fact that in itself the Poem is, to a very great extent indeed, merely legendary; and so embodies very much, which, though it has gained acceptance among many Christians, is certainly no part of the Christian revelation.

And in India we are bound more especially to guard ourselves from giving any encouragement to the substitution of myths and fables for the authentic teaching of the great Master himself.

But if the expediency of the translation be conceded, we have no words but of hearty commendation for the way in which this first instalment of the work has been completed It is not possible to give here any extracts which will prove the fitness of the translator for his arduous task, but we feel bound to say, after an exceedingly minute and careful study of the lines, that the *translator has succeeded to a very great — indeed a surprising — degree in making fluent and interesting Tamil verse out of the stately poetry of the great Puritan.* It has always seemed to us that Tamil epic metres might be made more simple, and Mr. Sundaram Pillai (whose early death has filled the mind of every lover of Tamil with profund sorrow), in his remarkable poem, *The Manonmaniyam,* and especially in the balled *The Indian Hermit,* has produced Tamil verse which (to our foreign

ears ) is exquisitely pleasing and appropriate. This translation we confess we do not fiind quite so pleasant and easy, and some of the quatrains took more time to understand than we could well spare ! After all, poetry should not only be elegant, artistic, and ingenious, but flowing, stimulating and pleasant to the student. Perhaps the translator may be able to give us something less archaic and enigmatic in some of the following cantos. Turning from the translation to the apparatus of introduction, history, biography, prose commentary and notes, we can find no words sufficient to express our thankfulness for them. If the numerous students of English in South India will 'get up' their subject with these helps, they will doubtless find that in comparing the English and Tamil of Paradise Lost, line for line, they will have a most profitable course of study marked out. The book is only fit for conscientious students, and to them it must be invaluable.

It may be impossible to give the history of the great Master in fitting Tamil verse, but it would be a glorious task for the right man! The Tembavani is a very wonderful Tamil poem, but it exhibits, and appears to us to intensfy, the peculiar defects of Tamil poetry ; and the wild legends, in which real Christian teaching is utterly lost, render it, from our point of view, a really mischievous book. The translator of Paradise Lost must beware of the danger of depraving the taste that he would fain improve ! We cannot but think that a great deal in the later cantos should be omitted.

We may say in conclusion that the *writer's prose Tamil style remar kably good,* and *that quatrains 38—60 are exceedingly sprited;* while something in the poetical preface irresistibly provoke a smile.

Certainly Tamil scholars are awaking, and we trust that, more and more they will be able to execute translation, publish editions of their own classics, and do original work which may benefit generations to come.

— Dr. G. U. POPE.

# கல்வி விளக்கம்

"Thus to the question we set out with— What knowledge is most worth? —the uniform reply is— *Science.* This is the veridict on all the counts. For direct self preservation, or the maintenence of life and health, the all important knowledge is — *Science.* For that indirect self preservation which we call gaining a livelihood, the knowledge of greatest value is–*Science* For the due discharge of parental functions, the proper guidance is to be found only in — *Science.* For that interpretation of national life, past and present, without which the citizen cannot rightly regulate his conduct, the indispensable key is — *Science.* Alike for the most perfect production and present enjoyment of art in all its forms, the needful preparation is still — *Science,* and for purposes of discipline — intellectual, moral, religious — the most efficient study is, once more — *Science.* The question which at first seemed so perplexed, has beccme, in the course of our enquiry comparatively simple". என்று மேநாட்டு அறிஞரான ஹெர்பெர்ட் ஸ்பென்சர் (Herbert Spencer) தாம் எழுதியுள்ள கல்வி (Education) என்ற நூலின் முதற் பகுதியில், எந்த அறிவு சிறந்த உபயோகமுள்ளது என்ற கேள்விக்கு விடையாக எழுதியுள்ளார். இதைப் படிக்கும் ஒவ்வொரு ஆங்கிலங்கற்ற மாணவரும் இதன் அருமையை அறிவார்கள். இந்த அரிய கருத்தைத் தமிழ் மக்களும் அறிந்து அநுபவிக்கவேண்டும் என்று விரும்பிய நம் முதலி

யாரவர்கள், தம் நண்பர் இருவர் துணைகொண்டு, இதை மொழி பெயர்த்தார்கள் அவர்கள் மொழி பெயர்ப்புத்தான் பின் வருவது;

"சிறந்த உபயோகமுள்ள அறிவு யாது? என்று நாம் ஆரம்பத்தில் கேட்ட கேள்விக்கு, மாறாத ஒரே உத்தரம் சாஸ்திரம் என்பது. இதுவே சகல விவாதாம்சங்களுக்கும் தீர்ந்த முடிவு. நேரான தற்காப்புக்கு அதாவது பிராணனை யும் சுகத்தையும் பேணுவதற்கு சர்வ முக்கிய ஞானம் சாஸ்திரம். ஜீவனம் சம்பாதித்தல் என்று நாம் சொல்லுகிற இடையிட்ட தற்காப்புக்கு அத்தியந்த உபயோகமுள்ள அறிவும் சாஸ்திரம். பெற்றோர்க்குரிய கடமைகளைச் சரியாக நிறைவேற்ற வழி காட்டுவதும் சாஸ்திரம். ஒரு ஜாதியாரு டைய வாழ்க்கை வழிகள் சென்ற காலத்திலும், தற்காலத்தி லும் உள்ள நிலைமையை விளங்கச் செய்து அதனால் நகர கிராம வாசிகளாக நாம் செய்தற்குரிய கடமைகளை நன்கு நிறைவேற்றுதற்கு இன்றியமையாதவழி காட்டியும் சாஸ்திரம். சகல வகை நற்கலை வேலைகளையும் குறைவின்றிச் செய்வதற் கும் அவற்றின் வனப்புக்களை நோக்கி ஆனந்திப்பதற்கும் தக்கபடி சித்தப்படுத்துவதும் சாஸ்திரம். அறிவு சன்மார்க்கம் சமயபக்தி இவைகளை சிக்ஷாக் கிரமமாகப் பயிற்சி செய் வதற்குச் சிறந்த சாதனமும் சாஸ்திரம். முதலில் மலைவாகத் தோன்றிய விஷயம் அதைப்பற்றி நாம் விசாரித்து வருகை யில், (பழைய மலையை நோக்க) எளிதாய்விட்டது."

முதலியாரவர்களும் அவர்கள் நண்பர்களான, திரு. S.V. கள்ளபிரான் பிள்ளையவர்களும் திரு. C. அப்பாவு பிள்ளை யவர்களும் சேர்ந்து ஹெர்பெர்ட் ஸ்பென்சர் எழுதியுள்ள கல்வி விளக்கத்தை 1899-ல் மொழி பெயர்த்திருக்கிறார்கள். ஹெர்பர்ட் ஸ்பென்சர் எழுதியிருக்கும் கல்வி விளக்கம் என்

னும் நூலில் காணப்படும் கருத்துக்களெல்லாம் மிகவும் அருமையானவை. இன்று நம்மக்கள் பள்ளிக்கூடங்களில் பெறும் படிப்பு ஒரு சிறிதும் உபயோகமற்றதென்பது-மிகவும் அழகாகப் பல பகுதிகளில் எழுதப்பட்டுள்ளது. "பெற்ருேர் தங்கள் பிள்ளைகளுக்கு வெளி அலங்காரம் செய்தல் போலவே அவர்கள் உள்ளத்திற்கும் செய்கின்ருர்கள், என்றும தன் உடலில் வர்ணம் பூசிக்கொள்வதால் பயன் ஒன்றும் ஏற் படாது என்று தெரிந்தும் - அவ்வர்ணப் பூச்சில்லாமல் தான் வெளியில் சென்ருல் பிறர் கண்டு நகைப்பார்களே என்று கருதும் ஓரினேகோ இநதியன்போல, லத்தீன், கிரேக்க பாஷைகளில் தம் மக்களுக்குச் பயிற்சி ஏற்படுவதால் ஒரு பயனும் அடையமாட்டார்கள் என்று தெரிந்த பெற்ருேர் களும், அந்தப் பாஷைகளைத் தெரிநதிருத்தலே கவுரவம் என்று பிறர் கருதுவார்கள் என்று எண்ணி அப்பாஷைப் பயிற்சிக்காகப் பள்ளிக்குத் தம் பிள்ளைகளை அனுப்புகிருர்கள் என்றும்" மூலநூல் ஆசிரியர் சொல்லும்போது - இன்று நம்மிடையே நடைபெறும பள்ளிக்கூடங்களில் உபயோகமற்ற பாடங்கள பல நம் பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்கப்படும உண்மையை நாம் நன்ருய் அறிகிருேம். இத்துடன் மக்களுக்கு எத்தகைய அறிவுப் பயிற்சி கொடுக்கவேண்டு மென்பதை ஆசிரியர் விரிவாக எழுதியிருக்கிருர். அநத நூலை ஆங்கிலங்கற்ற தமிழர் அனைவரும படித்து மகிழவேண்டும் என்பதே என் அவா. இக்கல்வி விளக்கத்தின் பெருமை, இந்நூல் ஆங்கிலத்தில் மட்டுமன்றி - கிரீக், பிரஞ்சு, ஜெர்மனி இத்தாலி, ருஷ்யா, ஜப்பான், சைன, முதலிய பலநாட்டுப் பாஷைகளிலும் மொழி பெயர்க்கப்பட் டிருப்பதி லிருநதே, தெரியவரும் — மூலநூல், சிறநத உபயோக முள்ள அறிவு யாது? அறிவுப் பயிற்சி, நன்னெறிப் பயிற்சி சரீரப்பயிற்சி யென நான்கு அதிகாரங்களாக வகுக்கப் பட்டுள்ளது-அவற்றின் முதல் இரண்டு அதிகாரங்களே, நம்

ஆசிரியரவர்களால் மொழி பெயர்க்கப்பட்டவை. இம்மொழி பெயர்ப்புச் செய்ய அக்காலத்தில் ஜீவந்தராயிருந்த ஹெர் பெர்ட் ஸ்பென்சரிடம அனுமதிபெற வேண்டியிருந்தது - அவ்வநுமதி பெற்றுக்கொடுக்க அக்காலத்தில், சென்னை சர்வ கலா சங்கத்தின் வைஸ்சான்சலராயிருந்த டங்கன் துரை யவர்கள் (D. Duncan M. A., D SC., LLD) பெரிதும் சிரமம் எடுத்துக் கொண்டார்கள் என்று நம் முதலியாரவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். இம்மொழி பெயர்ப்புச் செய் வதில் மிகுந்த சிரமம இருந்திருக்க வேண்டும். "தமிழ் மொழியோடு பலவகையில் மாறுபட்ட இங்கிலீஷ் பாஷை யிலுள்ள நூல்களை மொழி பெயர்ப்பது, பொதுவாக கஷ்ட சாத்தியம். அவ்வாறாக, சாஸ்திர சம்பந்தமான சங்கேத மொழிகளும தமிழிற் காணப்படாத பண்புக் கருத்துக்க ளடங்கிய பதங்களும மூல நூலில் எங்கும் மிகவும் செறிந் திருத்தலால், இமமொழிபெயர்ப்பு எவ்வளவு சிரமப்பட்டு இயற்றப்பட்டிருக்கிறதென்பது, இதனையும் மூல நூலையும் ஒப்பு நோக்குவதனால் இரு பாஷைகளையும் கற்றறிந்தோருக் கும் முக்கியமாக மொழிபெயர்ப்பு வேலையில் பழகியவர்களுக் கும் எளிதில் விளங்கும்" என்று மொழிபெயர்ப்பாளர்களே தஙகள் முகவுரையில் கூறுகின்றார்கள்.

இம்மொழிபெயர்ப்பு நூலைப்பற்றி நான் ஒன்றும் விரி வாகக் கூற விருப்பமில்லை. எனினும் இவ்விடத்தில் மொழி பெயர்ப்புக்கள் எப்படி இருக்கவேண்டும் என்பதைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்வது மிகையாகாது என்று நினைக்கிறேன். தமிழ் அருமையான பாஷைதான். எனி னும் அப்பாஷையை வளம்படுத்த பிற பாஷைகளிலுள்ள அருமையான நூல்களையெல்லாம தமிழில் மொழி பெயர்த் துத்தான் ஆகவேண்டும். "பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங் கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்" என்பது

தானே பாரதியின் அபிலாஷை. ஆனால் அப்படிப் பிற பாஷையிலுள்ள நூல்களைத் தமிழ் மொழி பெயர்க்கும போது அம்மொழி பெயர்ப்புக்கள் இரண்டு விதமாய் அமை வதைக் காணலாம். ஒன்று மூல நூலில் உள்ள வார்த்தை களுக்கு நேரான தமிழ்ப் பதங்களைத் தேடி உபயோகித்து மொழி பெயர்ப்பது. இதைத்தான் நேரானமொழி பெயர்ப்பு (True Translation) என்று இன்று சொல்கிறார்கள். பிரௌனிங் (Browing) போஸ்ட்கேட் (Postgate) முதலிய மேல் நாட்டு ஆசிரியர்கள் ஆதரிப்பது இந்த முறையைத்தான். இந்த முறை மிகவும் கஷ்டமானதொரு முறையாகும. இம முறையை, விலங்கிடப்பட்ட காலுடன், இருகம்பிகளிடையே கட்டப்பட்ட கயிற்றின்மேல் நடப்பதொக்கும் என்று டிரை டன் (Dryden) என்ற ஆசிரியர் வர்ணிப்பதே இந்த முறை யின் கஷ்டத்தை விளக்கப் போதியதாகும — மற்றொரு முறை, மூல நூலில் உள்கருத்துக்களை மட்டும எடுத்துக் கொண்டு அக்கருத்துக்களைமட்டும தமிழில் எழுதிவிடுவது. இம்முறையைத்தான் தழுவி எழுதுதல் (Free Translation) என்பார்கள். தற்கால எழுத்தாளர்கள் எல்லாம இம் முறையையே கையாளுகின்றார்கள — பஞ்சடைத்த பெரிய கருடன்போல உயிரற்ற சடலமாய் இருப்பதைவிட, பறக் கின்ற ஒரு சிறு குருவியாயிருப்பது மேல் (Better to be sparrow than a stuffed eagle) என்று பிட்ஸ்சிரால்ட் (Fitzgerald) என்ற ஆசிரியர் இம்முறையைப் புகழ்கிறார். தற்காலத்தில் பத்திரிகை உலகத்திலெல்லாம் இம்முறையே பெரிதும் கையாளப்படுகின்றது.

மேல் நாட்டுக் கதைகளை மட்டுமல்ல, நம்மிந்தியாவி லுள்ள ஹிந்தி, உருது, வங்காளம, கன்னடம் முதலிய பாஷைகளிலிருந்தும் பல கதைகள் தமிழில் மொழி பெயர்க் கப்பட்டு வருவது இன்று பத்திரிகை யுலகத்தில் நாம்

காண்பதாகும். இந்தக் கதைகள், வியாசங்களாகியவை களில பெயர்களைத் தவிர மற்றவைகளெல்லாம், தமிழ்க் கருத்துக்களாகவே யிருக்கும். மொழிபெயர்ப்பு என்று ஆசிரியர் சொல்லாவிட்டால் அது மொழிபெயர்ப்பு என்று கூட நாம் காண முடியாது. இத்தகைய முறையையே போற்றும் இக்காலத்தில் நம் முதலியாரவர்களும நண்பர்களும சேர்ந்து மொழிபெயர்த்த இக்கல்வி விளக்கம் பலரும் போற்றும்படியாகவாவது, அல்லது படித்து மகிழும்படியாகவாவது அமையும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இந்நூல் மூல நூலின் நேரான மொழிபெயர்ப்பு (True Translation) என்பதைமட்டும் ஒருவரும மறுக்கமுடியாது. அறிவியல் நூல்களை அப்படித்தான் மொழிபெயர்க்க இயலும் போலும். நம் நண்பர்கள் மூல நூற் கருத்துக்களை மட்டும் எல்லாத் தமிழர்களும அறிந்து அனுபவிக்கும்படி, எல்லோருக்கும் புரிகின்ற ஒரு நடையில், ஒரு பக்கத்தில் எழுதியிருப்பதை பல பக்கங்களில் விரித்து விளக்கி எழுதியிருந்தால், அந்நூல் இன்னும் அருமையான பலனைத் தந்திருக்கும் என்பதே என் தாழ்ந்த அபிப்பிராயம். — மூல நூல், நாவல் அல்ல, சரித்திரமும் அல்ல. மூல நூல், ஆங்கிலத்தில் பட்டம் பெற்றவர்களில்கூட வெகு சிலரே (அவர்களும் மிக்க கவனத்துடன் ஊன்றிப் படித்தே) இனிதாகப் பொருள் உணரக்கூடியதாயிருக்கின்றது என்பதையும் மறந்து விடக்கூடாது.

# இராமாயண உள்ளுறை பொருளும் தென்னிந்திய சாதி வரலாறும்*

"எனக்கென இதில் ஒன்றுமில்லை, திரு. P சுந்தரம் பிள்ளையவர்கள் கற்பித்தபடியே எழுதுகிறேன்" என்ற பீடிகையோடு முதலியாரவர்கள் இந்நூலைத் தொடங்குகின்றார்கள். ஆங்கிலம் கற்ற தமிழ்ப் பேராசிரியர்களில், திருவனந்தபுரம் மஹாராஜா கலாசாலைப் பேராசிரியர் P. சுந்தரம் பிள்ளையவர்கள் முதல்வராக எண்ணப்படுபவர். ஆங்கிலத்தில் M. A. பட்டம் பெற்ற இவர்கள், தமிழ் நூல்களை நன்கு கற்று 'மனோன்மணீயம்' என்ற நாடகத்தையும். 'நூற்றொகை விளக்கம்.' 'ஞானசம்பந்தர் கால நிர்ணயம்' முதலிய ஆராய்ச்சி நூல்களையும் எழுதி, தமிழுக்கு அருந்தொண்டு புரிந்தவர்கள். அவர்கள் உளத்தில் நினைந்து, அன்பரிடம் வெளியிட்டு, வந்த சில உண்மைகள் புத்தக உருவில் வெளியிடுவதற்கு முன்னமேயே காலஞ் சென்றுவிட்டார்கள். அப்படி அவர்கள் நினைந்தனவும் வெளியிடப்படாதனவுமான கருத்துக்கள் தான் இந்த நூலில் முதலியாரவர்களால் எழுதப்பட்டுள்ளன.

"தென்னிந்தியாவின் பூர்வீகப் பழங்குடி திராவிடர் என்றும், வடநாடிருந்து தென்னாடு போந்தவர் ஆரியர் என்றும், இவர்களில் ஒருவர் மற்றொருவர் உரிமைகளைக் கைப்பற்ற முயல இருவருக்கும் போர் விளைந்ததென்றும்,

* இது முதன் முதலில் தமிழில் Tamilian Antiquary என்ற பத்திரிக்கையின் 2-வது இதழில் வெளியாகி; பின்னர் அதே பத்திரிக்கையின் ஏழாவது இதழில் ஆங்கிலத்தில் வெளியானது.

அப்போரில் ஆரிய அரசனுன இராமன் திராவிட அரசர்க ளாகிய வாலி, இராவணன் இவர்களை வென்முன் என்றும், இவ்வெற்றிப் பிரதாபத்தையே, ஆரிய முனிவரான வான் மீகர், இராமாயாணம் என்ற பெருங்காப்பியமாகச் செய்து முடித்தார்" என்றும் கூறுவதே இராமாயண உள்ளுறை பொருளாக அமைந்துள்ளது. "பூர்வகாலத் திராவிடருள் திணைவகுப்பேயன்றிச் சாதி வகுப்பு இல்லை, நிலையான சாதிபேதம் இருந்ததாக இவரது பழைய நூல்களில் ஆதாரம் ஒன்றும் காணப்படவில்லை. ஆரியர் தென்னிந்தியா வில் நுழைந்து ஸ்திரப்படும்வரை ஒரு வகுப்பார் மற் றொரு வகுப்பாரோடு உடனுண்டு உறவாடி வாழ்ந்தனர். திராவிடர் ஆரிய சாதியைச் சேர்ந்த நாற் பெரும்வகுப்புக்க ளுள் எவ்வகுப்பையும் சேர்ந்தாரல்லர். ஆரியரைப்போலவே திராவிடரும் ஒரு தனிப் பெருஞ்சாதியார், ஆரியர் தென் னிந்தியாவில் நிலைத்த பின்னரே திராவிடர்களுக்குள் உலைவும் சிதைவும் ஏற்பட்டன" என்றெல்லாம் அறுதியிட்டுரைப்பதே சுந்தரம் பிள்ளையவர்கள் கூறும் தென்னிந்திய சாதி வரலா றாகும்.

"திரு. சுந்தரம் பிள்ளையவர்கள் தேகவியோகமாவதற்குச் சில வருடங்களுக்கு முன் சென்னையில் வந்திருந்த காலத் தில் தமது நண்பர் சிலரோடு சல்லாபித்துக் கொண்டிருந்த ஒரு சமயத்தில் யானும் கூடவிருக்கும்படி வாய்த்தது. அப் போது இராமாயணத்தைப்பற்றிப் பிரஸ்தாபம் உண்டாக அந்நூலைக் குறித்து அவர் கொண்டிருந்த கொள்கைகள் என்னையோவென ஒரு நண்பர் வினவினுர். அவ்வினவிற்கு விடையாக அவர் வெளியிட்ட கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு இவ்விராமாயண உள்ளுறை பொருள் எழுதப் பட்டது" என்று முதலியாரவர்கள் தம் முன்னுரையில் கூறுகின்றுர்கள். இந்நூலில் வெளியிடப்பட்டுள்ள கருத்துக்

களெல்லாம் சுந்தரம் பிள்ளையவர்கள் கருத்துக்களே யென்று திரு. J. M. நல்லசாமி பிள்ளையவர்களும் இந்நூலின் ஆங்கில முகவுரையில் வலியுறுத்தியுள்ளார்கள்.

இந்த நூலில் இராமாயண காலத்துத் தென்னிந்திய சாதி நிலைமை, இராமாயண பூர்வகாலத்துத் தென்னிந்திய சாதி நிலைமை, இராமாயண உத்தரகாலத்துத் தென்னிந்திய சாதி நிலைமை, ஜாதி இலக்கணமும் தென்னிந்திய ஜாதி நிலைமையும் என்ற நான்கு பகுதிகளில் தென்னிந்திய ஜாதி வரலாறு ஆராயப்பட்டுள்ளது.

# தனிக்கவித் திரட்டு

சாதாரணமாக, கவி எழுதும் சக்தி வாய்ந்தவர்கள், அவர்களுடைய உள்ளம் உவகையால் நிறைந்திருக்கும் போதும், அல்லது துன்பத்தால் நலிந்திருக்கும் போதும் கவிகள் எழுதுவது இயற்கை. உள்ளத்தின் எழுகின்ற உணர்ச்சிகளைப் பண்ணழகுடன் வெளிப்படுத்துவது தானே கவிதை. அத்தகைய சந்தர்ப்பங்கள் கவிஞர்களுக்கு அவர்கள் வாழ்நாளில் பலமுறை ஏற்படக்கூடும். நமது முதலியாரவர்கள் தமது வாழ்க்கையில் பல்வேறு சந்தர்ப்பங்களில், பாடிய பாட்டுக்களை யெல்லாம் திரட்டி வெளியிட்டிருப்பதுதான், இத் தனிக்கவித் திரட்டு என்ற புஸ்தகம். இத் திரட்டில் வரும் பாக்களை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம். அம்பலவாண தேசிகமாலை, முதலியாரவர்கள் திருவாவடுதுறை ஆதீனம் மகாசன்னிதானம ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண பண்டார சன்னிதிகளை முதன் முதல் தரிசித்தபோது பாடியது.

பன்னருஞ்சீர் மன்னம் பலவாண தேவேயான்
உன்னடியாா கூட்டத் தொருவனு, — அன்னர்
மருங்காக வந்தானேன்; மாமேரு வைச்சார்
கருங்காக மும்பொற் கா கம்

என்று இந்த மாலை தொடங்கி மேலும் மேலும் உணர்ச்சியால் எழுந்த உத்வேகத்துடன் செல்லுகிறது.

உன்னடியை யன்றி உணரா உணர்வுருள் உன்
பொன்னடியார்க் காகும் பொருளே நல்(கு) —
என்னுளத்து
மன்னம் பலவாணு வாழ்த்தியுனைப் போற்றுதற்கே
இன்னம் பலவாணு ளீ

என்று முதலியாரவர்கள் தனது குருமூர்த்தியாகிய தேசிகரை வேண்டிக்கொள்கின்றார்கள். அவர்கள் பிரார்த்தனைக்கு இறைவன் செவி சாய்த்துத்தான் இருக்கிறான் என்பதை இன்று முதலியாரவர்களை நேரில் பார்ப்பவர்கள் தெரிந்து கொள்வார்கள்.

சிந்தைக் கினிது, செவிக்கினிது, வாய்க்கினிது
வந்தித் திடவினிது, மற்றெம்மைப் — பந்தித்த
வெம்பவநோய் தீர்த்தெமக்கு வீடாத வீடளிக்கும்
அம்பலவா ணன்சீ ரடி

என்று எவ்வளவு நம்பிக்கையுடன் நமது முதலியாரவர்கள் சொல்கிறார்கள் என்பது அப்பாட்டிலிருந்தே புலப்படும்.

குருவணக்கத்தை இப்படி முடித்துக்கொண்டு மக்களுக்கு வாழ்வில் பயன்படக்கூடிய அறிவுரைகள் கூறுகிறார்கள். அறிவுரைப் பகுதியில் சருவசன ஜபம்* முதல் இடம் பெற்றிருக்கிறது.

"உண்மைக்கு மேலாம் மதமில்லை; எல்லா
உயிர்க்கன்பின் மிக்கதோர் பக்தியில்லை;
வண்மைக்கு மேலுபகாரமில்லை நல்
வசனத்தின் மேலுப சாரமில்லை" என்றும்

அடித்திடும் கையினிற் பொல்லாது திட்டி
அதட்டிடும் நாக்(கு); அதிற் பொல்லாது
பொடித்திடப் பார்க்குங்கண்; பொல்லா ததனிற்
பொறாமல் வெகுண்டு புகையு நெஞ்சே

என்றும் முதலியாரவர்கள் சொல்லும்போது அவர்களது உள்ளத்தை நாம் நேரே பார்க்கும் உணர்ச்சியைப் பெறுகின்

* இந்த நூலைப்பற்றி விரிவாக முன்னரே எழுதப்பட்டுள்ளது.

றோம். இப்படி அறிவுரைகள் கூறும்போது கொஞ்சம் ஹாஸ்யத்தைக் கலந்துகொள்கிறார்கள் நமது முதலியாரவர்கள். சாதாரணமாக, ஆடவர்களாகிய நாம், பத்திரிகைகள், பிரசங்கமேடைகளில் எல்லாம, பெண்களின் கற்பொழுக்கத்தைப் பற்றியே பேசி "மாதரார் கற்பில் நின்றனை கால மாரியே" என்று கம்பர் பாட்டுக்களை யெல்லாம் ஆதாரங் காட்டுவது வழக்கமாய் விட்டது. ஆம் ஐயா! மாதர் கற்பொழுக்கத்தைப் பேசும நமது கற்பொழுக்கம் என்ன ஐயா? என்றால் வாய் பேசா மௌனியாகிறோம். இப்படிப்பட்ட ஆடவர் நிலைக்கு முதலியாரவர்கள் ஒரு உதாரணம் சொல்கிறார்கள். ஒரு செட்டியாரும் ஒரு மகமதியரும் கூட்டாக வியாபாரம் செய்கிறார்கள். செட்டியார் யமகாதகப் பேர்வழி, வியாபார தந்திரங்களை எல்லாம் தெரிந்தவர். இருவரும் ஒரு நாள் சம்பாஷிக்கிறார்கள் — செட்டியார் சொல்கிறார் "சாய்புவாள்! நம்மிருவருக்குள் வித்தியாசமே இருக்கக் கூடாது. பண விஷயத்திலானாலும சரி மற்ற எந்த விஷயத்திலானும் சரி, உம்முடையதெல்லாம் நம்முடையதுதான். நம்முடையதோ? கேட்கவாவேண்டும்" என்கிறார் — உம்முடையதெல்லாம் நம்முடையது என்று சொன்ன செட்டியார் நமமுடையது உம்முடையதே என்று சொல்ல இஷ்டப்படாது சிரித்து மழுப்பிவிடுகிறார் — இந்தக் கதையை நினைப்பூட்டிக்கொண்டு.

தம்மது மின்னார்கள் கற்பைக் காக்கச்செய்து
தம்கற்பைக் காவாது தாமொழுகல்
உம்மது நம்மது நம்மது "ஹே - ஹே" என்று
ஊற்றைப் பற் காட்டிடல் ஒத்திடுமே

என்று கூறுகிறார்கள். முதலியாரவர்கள் சொல்வது ஹாஸ்

யம் மட்டுமல்ல, உண்மையும்கூட என்று அறிந்து நாம் அந்தப் பாட்டை நன்றாய் அனுபவிக்கிறோம்.

" எல்லாமும் வல்லவை என்ற பொருள்கள்
இரண்டே: அவைகள் எவைகளெனில்,
பல்லா யிரம்அண்ட மெல்லாம் படைத்த
பரம் பொருள் ஒன்று ; பணம் ஒன்றே "

என்றும், அவர்கள் நயமாகப் பணத்தின் மகத்துவத்தை எடுத்துரைக்கிறார்கள். இப்படிப் பாக்களின் நயங்களை யெல்லாம் சொல்லிக்கொண்டே போவதற்கு இச்சிறு நூல் இடங்கொடாது.

இடைபடுத்து, யமகம், திரிபு, மடக்கு முதலிய சொல் லணிகளும், பொருளணி பலவும் வாய்ந்த, அகப்பொருட் டுறைக் கவிகள் வருகின்றன. இவற்றுள் பெரும்பாலன தமிழ்ப் புலமையும், தமிழ்ப் புலவர்மாட்டுப் பெருமதிப்பு உடையவரும், தமிழ் நூலாராய்ச்சியும் தமிழ்ப் புலவரோடு பழகுதலுமே பொழுதுபோக்காக உடையவருமாயிருந்த ஊற்றுமலை ஜமீந்தார் இருதாலய மருதப்பத்தேவர் விஷயமாக அமைந்தவை. இப்பகுதி பலமுறை படித்து இன்புறத் தக்கது.

பல சந்தர்ப்பங்களில் பாடிய பாடல்களும் பாயிரங் களும் இத்திரட்டில் இடம் பெற்றிருக்கின்றன. நமது முதலியாரவர்கள், தம்முடன் நெருங்கிப் பழகிய புலவர், செல்வர், பெரியோர் முதலியவர்களுக்குக் கடித மூலமாகவும் நேரிலும் சொன்ன பாடல்கள் மிகவும் நன்றாயிருக்கின்றன. ஆசிரியர் அவர்களுக்கும் அவர்களுடைய நண்பர்களுக்கும் இருந்த தொடர்பையும் இப்பாக்கள் நன்கு வெளிப்படுத்து கின்றன.

டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களுக்கு மகா மகோ யாத்தியப் பட்டம் கிடைத்தபோது,

உன்னை யறி யாத் தமிழருண்டோவப் பட்டப்பேர்
தன்னை யறி யாதவரோ சங்கையிலர் – என்னிலையம்
என்னையது நின்னை யெய்தி யெய்ந்த(து) உயர்வென்ப
தன்னிகரில் சாமிநா தா. [தற்கு

என்று முதலியாரவர்கள் மிகவும் அருமையாகச் சொல்லி யிருக்கிறார்கள். திருநெல்வேலிக் கவிராஜ நெல்லையப்ப பிள்ளை காலஞ்சென்றபோது, பாடிய இரங்கற்பாக்களில்,

கண்ட வுடன்களிகூர் கண்ணும் வருகவென்று
விண்டு, மலர்வாயும் மெய்யன்பால் — அண்டையில் என்
கையைப் பிடித்திருத்துங் கையுமற்றை மெய்யுமினி
வையத்துக் காண்குவதெவ் வாறு"

என்ற பாட்டு எவ்வளவு நயமாக அமைந்திருக்கிறது. உண்மையாகவே உள்ளத்தில் எழுந்த சோகத்தை எளிதாகக் காட்டிவிடுகிறதல்லவா?

இப்படியே, சற்றேறத்தாழ, 350 தனிநிலைச் செய்யுள் அமைந்த இத்தொகை நூலில் ஆசிரியருடைய ஆங்கில மொழித் தேர்ச்சியும் தமிழ் மொழிப் புலமையும் ஒருங்கி யைந்து பாலொடு தேன் கலந்தாற்போல் எல்லா விடத்தும் சுவை பயந்து நிற்பதை அன்பர்கள் படித்துப் படித்துத் தான் தெரிந்து கொள்ளவேண்டும்.

# மற்றைய நூல்கள்

இதுவரை முதலியாரவர்கள் எழுதியுள்ள இலக்கியங்களைப் பற்றித்தான் பேசினேம். முதலியாரவர்கள், இந்தத் தமிழ் இலக்கியங்களைத் தவிர, தான் ஏற்றுக்கொண்ட உத்தியோக முறையிலும் அந்த இலாக்கா உத்தியோகஸ்தர்களுக்கும் மற்றக் குடி ஜனங்களுக்கும் பயன்படக்கூடிய சில புத்தகங்களும் பிரசுரங்களும் எழுதி அவ்வப்போது வெளியிட்டிருக்கிறார்கள். அவையாவன:—

1. இந்து தேசத்துக் கால் நடைக்காரர் புஸ்தகம்.
(ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்த்தது.)

2. இந்தியாவில் கால் நடைகளுக்கு காணுகின்ற அதிக பிராணுபாயமான வியாதிகளைப் பற்றிய புஸ்தகம். (ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்த்தது. கவர்ன்மெண்டாரால் பிரசுரிக்கப்பட்டது.)

3. கால் நடைகளுக்கு வியாதி வராமல் அம்மை குத்துதலும் அதன் உபயோகங்களும்.

இந்த நூல்களின் அருமையைப்பற்றிப் பேசும் திறன் எனக்கு இல்லை. கால்நடை இலாக்கா உத்தியோகஸ்தர்களும் மற்றும் விவசாயிகளும் இநதப் புத்தகங்களைச் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே என் அவா. இந்தப் புத்தகங்கள் சாதாரண குடியானவனுக்கும் விளங்கக்கூடிய எளிய நடையில் எழுதப்பட்டிருப்பது போற்றத் தகுநதது. இந்த நூல்களிலும் முதலியாரவர்களின் தமிழ்ப் புலமை தோன்றுமற் போகவில்லை. எருதின் இலக்

கணத்தை யெல்லாம் ஒரு அழகிய ஆசிரிய விருத்தத்தில் சொல்லிவிடுகிறார்கள். கால் நடைநோய்களின் சாஸ்திர (Veterinary Science) விற்பத்தியில்லாத என்போன்ற தமிழ் மாணவர்களும் இந்தப் பாட்டைப் படித்து மகிழலாம். பாட்டின் கருத்தோடு ஓசை ஒத்து ஒலித்து வருவதைப் பாருங்கள்.

ஏர்கொண்ட மாட்டுக் கிலக்கணமி யாதென்னில்
எழில்பெறும் உடம்புத்தலை
இனியதாய்க் கறுத்துத் திரண்டொளிரு கின்றகண்
இணைத்துச் சிறுத்தகற்கொம்
பிசைபெறும் முயற்செவி இரட்டைக் கழுத்ததில்
இசைந்தொட்டி யுள்ளதாடி
இலகிரட் டைச்சிமிழொ டுட்கூன லுற்றுயர்
இரட்டைமுது கிருபுறத்தும்

வார்கொண்ட மைந்துறும் பருமென்பு தங்கிய
வனப்பொடு புடைத்திடும்விலா
மன்னும் உள் ளங்கையின் அடங்கத் தகுந்தகடை
வயிறுபின் ஏறுசட்டம்
மருவரணை வால்போற் சிறுத்தபே ரழகேறு
வால்கரும் பாம்புதன்னை
மாறும் கருந்தாரை ஓட்டுகோ சம்பெரிய
வகிருறும் இரட்டைநாடி

கூர்கொண்ட கடைதனுற் றிடுதம்ப மொத்துக்
குலாவும் குறும்பருங்கால்
குவளைக் கருங்கலொத் திணையுறுங் குத்துக்
குளம்பு மூத லாம்அவயவம்

கொண்டுடலம் நிண்டு குறு ரோமம் செறிந்ததோல்
கூறுமத் திமதிண்ணமாய்க்
குலமயிலை கரியமால் வெள்ளைகரு வெள்ளைமெய்
குளிர்சந்த னப்புல்லையாஞ்

சீர்கொண்ட நிறமெமதேன் கொண்டுகொள் ளிக்கொம்பு
செங்கோல்வெட் டுக்குளம்பு
தேய்கின்ற அரைகுளம் பிணையடிகள் சாத்துகால்
திரியுமந் திக்கால்முதல்
தீங்கெல்லாம் நீங்கிமுன் காற்சுவட் டுக்குமுன்
செய்யபின் காற்சுவடுறத்
திடநடைகொள் வேகமுறும் இடபம்இட பங்களுட்
செப்பும்அர சென்னலாமே.

பாட்டைப் பலமுறை படித்து அனுபவியுங்கள். அது போதும்.

ராவ் சாஹிப்

## வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G. B. V. C.

### இயற்றிய நூல்கள்.

✤✤✤✤✤✤

1. சுவர்க்க நீக்கம் முதற் காண்டம் .... 0 12 0
டிை காலிகோ கட்டடம் .... 1 4 0

2. கோம்பி விருத்தம் (2-ம் பதிப்பு) .... 0 8 0

3. நெல்லைச் சிலேடை வெண்பா (2 ம் பதிப்பு).... 0 6 0

4. இந்து தேசத்துக் கால்நடைக்காரர் புஸ்தகம் ... 2 0 0

5. இந்தியாவில் கால்நடைகளுக்குக் காணு
கிற அதிக பிராணபாயமான வியாதிகளைப்
பற்றிய புஸ்தகம்
சென்னைக் கவர்ண்மென்டு அச்சுக்கூடம்
சூப்பரிண்டண்டுக்கு எழுதிப் பெறலாம்.

6. இராமாயண உள்ளுறை பொருளும் தென்
னிந்திய ஜாதி வரலாறும் (2 ம் பதிப்பு) .... 0 6 0

7. கல்வி விளக்கம் முதற்பாகம் .... 1 0 0

8. ஜான் மில்டனுர் சரித்திரம் . . 0 4 0

9. கால்நடைகளுக்கு வியாதி வராமல் அம்மை
குத்தலும் அதன் உபயோகங்களும் .... 0 1 0

10. சருவ சன செபம் .... 0 1 0
'அன்பின் ஆற்றல்' என்ற கட்டுரையுடன்.... 0 0 3

11. கம்பராமாயண சாரம்: பாலகாண்டம்
(ராப்பர்) .... 1 10 0
(காலிகோ) .... 2 0 0

| | | | | |
|---|---|---|---|---|
| 12. கம்பராமாயண சாரம்: அயோத்தியா காண்டம் | | | | |
| | (ராப்பர்) .... | 1 | 6 | 0 |
| | (காலிகோ) .... | 1 | 12 | 0 |
| 13. ,, ஆரணிய காண்டம் | | | | |
| | (ராப்பர்) .... | 1 | 6 | 0 |
| | (காலிகோ) ... | 1 | 12 | 0 |
| 14. ,, கிட்கிந்தா காண்டம் | | | | |
| | (ராப்பர்) .... | 1 | 6 | 0 |
| | (காலிகோ) .... | 1 | 12 | 0 |
| 15. ,, சுந்தர காண்டம் | | | | |
| | (ராப்பர்) .... | 1 | 10 | 0 |
| | (காலிகோ) .... | 2 | 0 | 0 |
| 16. அகலிகை வெண்பா (மூன்றும் பதிப்பு) | | | | |
| (வசனம், குறிப்புரையுடன்) | (ராப்பர்) .... | 0 | 10 | 0 |
| | (காலிகோ) .... | 1 | 0 | 0 |
| 17. திருவாவடுதுறை அம்பலவாணதேசிகமாலை | | 0 | 0 | 9 |
| 18. தனிக்கவித்திரட்டு (குறிப்புரையுடன்) | | | | |
| | (ராப்பர்) .... | 0 | 12 | 0 |
| | (காலிகோ) .... | 1 | 0 | 0 |

4, 5, இலக்கமிட்ட புத்தகங்கள் கையிருப்பில்லை.

மற்றப் புத்தகங்கள் கிடைக்குமிடம் :—

**தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் Ltd.,**
**திருநெல்வேலி & சென்னை.**

இம்பீரியல் பிரஸ், திருநெல்வேலி.7....41.